16 July 1925

JL
00211, NISAB
N125·11·1.
18247

872/3.26 (1329)

# ஸ்ரீமத் கம்பராமாயண

## வசன சங்கிரகம்.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் ஆர்ட்பேப்பரில் போட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது.

(இரண்டாம் பதிப்பு.)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூ. 2

☞ முதற்பதிப்பு உடனே செலவாய்விட்டபடியால் இரண்டாம் பதிப்பு வெளிவரலாயிற்று. இந்த இரண்டாம்பதிப்பிலும் கொஞ்சப் பிரதிகளே போடப்பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இராமாயணமானது மிக்க புண்ணிய கதையென்பது உலகறிந்த விஷயம். அதனால் இவ்விராமாயணத்தை வான்மீகர் ஆதியில் கிரந்தத்தில் சுலோகங்களாகச் செய்தார். பின்னர் பற்பல பாஷைகளிலும் சிறந்த விற்பன்னர்கள் பற்பல விதங்களாகச் செய்யுளாகவும் வசனமாகவும் செய்திருக்கின்றனர். அவற்றை ஆங்காங்குள்ள பக்திமான்களும், கலைவிருப்புடையாரும் ஓதியுணர்ந்தும், பிறரால் ஓதக்கேட்டுணர்ந்தும் இராமர் கிருபையால் இம்மை மறுமைப் பயன்களை அடைந்துவருகின்றார்கள். மேற்கூறிய பலவகை இராமாயணங்களில் வடமொழிச் சுலோகங்களால் வான்மீகரால் செய்யப்பட்டதும், தமிழ்ச் செய்யுட்களால் கம்பரால் செய்யப்பட்டதும், தென்னிந்தியாவில் சமஸ்கிருத விற்பன்னர்களாலும் தமிழ் விற்பன்னர்களாலும் மிகுதியும் கொண்டாடப்பட்டு வருகின்றன. எனினும், அவை வடமொழியிலும் தென்மொழியிலும் சிறந்த கல்வியாளர்க்கன்றி மற்றையர்க்குப் பயன்படாமையின், சாமானிய படிப்புள்ளவர்க்கும் உபயோகப்படுமாறு, சில புலவர்கள் வான்மீகி இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தும், கம்பர் இராமாயணத்தை வசனமாக எழுதியும் வெளியிட்டிருக்கின்றனர். அவற்றுள் வான்மீகி இராமாயண மொழிபெயர்ப்பு விசேஷமான வடமொழிகள் கலக்கப்பட்டு மணிப்பிரவாள நடையில் அமைந்திருப்பதாலும், அதிக விலையுள்ளதாயிருப்பதாலும் சாதாரண தமிழ் மக்கள் அதனை வாங்கிப் படிக்கும் ஆற்றலின்றிக் கம்பர் இராமாயண வசனத்தையே மிகுதியும் வாங்கி ஆங்காங்கே பாராயணம் செய்து வருகின்றார்கள். நாட்டுப் புறங்களிலுள்ள சில கிராமவாசிகளும் அதனை வாங்கி இராமர் படத்துக்கு முன்னிலையில் அறிந்தோரைக்கொண்டு தொடங்கி பக்தியுடன் படிக்கச்செய்து முடிப்பித்து முடிவில் இராமர் பட்டாபிஷேக மகோற்சவங் கொண்டாடி வருகின்றார்கள். இவ்வாறு கொண்டாடப்பட்டு வரும் அந்த இராமாயண வசனமும் நாளடைவில் சில புத்தக வியாபாரிகளால், அளவற்ற பிழைகள் செறிந்ததாகவும், விஷயங்கள் முன் பின்னாக மாறுபட்ட

1874. 1874, 187471

தாகவும், அந்த விஷயங்களே திரும்பவும் வரக்கூடியதாகவும் பின்னுபின்னப்பட்டு அதிக விலையில் வெளிவருகின்றது. அதனால் தமிழ்மக்கள் அப்பிழைப் புத்தகங்களையே படித்து விஷயங்களை மாறுபாடாக உணர்ந்து இடர்ப்பாடுறுகின்றனர்.

ஆதலின், அந்தக் கம்பர் இராமாயண வசனத்தைக் கூடியவரை சீர்திருத்திப் படிப்பார்க்கு அயர்ச்சியுண்டாகுமாறு அளவின்றி விரிக்கப்பட்டிருக்கும் விசேஷ வர்ணனைகளைத் தள்ளிச் சிறிது சுருக்கமாகவும், விளக்கமாகவும் குறைந்த விலையில் அமைத்ததாகவும், பலர்க்கும் பயன்படக் கூடியதாகவும் எழுதி இப்போது வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

இது, பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ் செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

இது, சங்கிரகமாக எழுதப்பட்டிருப்பினும் இதில் சரித்திரம் எவ்வளவும் குறைக்கப்படவில்லை. கிளைக்கதைகள் ஒன்றேனும் குறையாமல் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கம்பர் இராமாயணச் செய்யுட்களும் அவசியமான விடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கிரௌன் 16 பேஜ் சைஸில் 660 பக்கங்களுக்குமேல் இப்புத்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. பெரிய கம்ப இராமாயண வசனத்தைப் பாராயணம் செய்வதுபோலவும் பக்தியுடன் தினந்தோறும் பாராயணஞ் செய்யலாம்; வெளியிற் செல்லுமிடங்களிலும் படிப்பதற்குச் சுலபமாக இதனைச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு போகலாம். இதுவரையில் பலவகை இராமாயணங்கள் வெளிப்பட்டிருந்த போதிலும் இதைப்போன்ற இராமாயண புத்தகம் வெளிவரவில்லையென்று உறுதியாகச் சொல்லலாம். இஷ்டகாமியங்களை உடனுக்குடனளிப்பது இதுவே என்பது அநுபவமாதலால் இதன் பெருமையை விரித்துரைக்க வேண்டுவதநாவசியம்.

## இப்புத்தகத்திலடங்கிய விஷய அட்டவணை.

நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, அரசன் சிறப்பு, இராம ஜனனம், தாடகை வதை, கோமதியாற்றின் வரலாறு, மகாபலி வரலாறு, விசுவாமித்திரர் வேள்வி, துர்வாசர் கதையும், அமுதங் கடைந்தெடுத்த வரலாறும், கங்கையின் வரலாறு, அகலிகை வரலாறு, சீதை திருமணம், பரசுராம கர்வபங்கம், முடிசூட்டிக்கொள்ளும்படி தசரதன் இராமரை வேண்டல், இராமருக்கு வசிஷ்டர் தருமோபதேசஞ் செய்தல், மந்தரை செய்யும் மித்திரபேதம் கைகேசி சூழ்வினை, இராமர் நகர் நீங்குதல், தசரதன் தேகவியோகம், இராமர் கங்கையைக் காணல், இராமர் வனம்புகுதல், இராமரின் சித்திரகூடவாசம், தசரதன் ஈமக்கிரியை, பரதன் இராமரைத் தேடிச் செல்லல், குகன் பரதனைக் காணல், இராமர் பரதன் முதலிய சுற்றத்தாரைக்கண்டு நீங்குதல், விராதன் வதை, சரபங்கர் பிறப்பு நீங்குதல், இராமர் தண்டகாரணியம் சேர்தல் இராமர் அகஸ்தியரைக் காணுதல், இராமர் முதலியோர் ஜடாயுவைக் காணல், இராமர் பஞ்சவடியில் வாசஞ்செய்தல், சூர்ப்பநகி பங்கம், கரன் தூஷணன் திரிசிரன் ஆகியவர்களின் வதை, மாரீசன் வதை, இராவணன் சீதையை எடுத்தேகுதல், ஜடாயு வதை, இராமலக்குமணர்கள் சீதையைக்காணாமல் வருந்தித் தேடுதல், அயோமுகி பங்கம், கவந்தன் வதை, சபரி மோக்ஷம், இராம லக்குமணர்கள் அநுமானைக் காணல், இராமர் சுக்கிரீவனுடன் நட்புக்கொள்ளல், இராமர் ஏழு மராமரங்களை ஒரே பாணத்தால் துளைத்தல், துந்துபியின் வரலாறு, இராமர் சீதையின் ஆபரணங்களைக் காணல், வாலி வதை, சுக்ரீவன் அரசியல், சரற்காலம், கிட்கிந்தை வரலாறு, வானர சேனையைக்காணல், சீதையைத் தேடுதற்கு வானரசேனைகளை அனுப்புதல், பிலம் நீங்கல், ஆறு தாண்டல், அநுமார் முதலியோர் சம்பாதியைக்காணல், அநுமார் கடல் தாண்ட மகேந்திரமேறுதல், அநுமார் கடல் தாவுதல், ஊர் தேடல், அநுமார் சீதையைக் காணுதல், சீதை இராவணனை நிந்தித்தல், அநுமார் சீதையிடம் உருக்காட்டல் சீதை அநுமாரிடம் சூடாமணியளித்தல், அநுமார் இராவணனுடைய வனத்தை அழித்தல், கிங்கரர் வதை, ஜம்புமாலி வதை, பஞ்சசேனாதிபதிகள் வதை, அக்ஷயகுமாரன் வதை, அநுமார் இந்திரஜித்திடம் கட்டுப்படல், அநுமார் பாசத்தினின்றும் விடுபடல், இலங்காதகனம், அநுமார் இலங்கையைவிட்டு மீளுதல், இராவணனுடைய மந்திரலோசனை, இரணியன் சரிதை, விபீஷணன் அடைக்கலம், வருணன் அடைக்கலம், சேது பந்தனம், ஒற்றரை விடுத்தல், மகுடபங்கம், அணிவகுத்தல், அங்கதன் தூது, இராவணனுடைய முதற்போர், கும்பகர்ணன் வதை, இராவணன் மாயா ஜனகனைக் காட்டிச் சீதையைத் துன்புறுத்தல், அதிகாயன்வதை, இலக்குமணன் மூர்ச்சை, இராவணன் படைத்தலைவர் வதை, மகரக்கண்ணன் வதை, இந்திரஜித்து யுத்தம், பிரமாஸ்திரத்தால் இலக்குமணன் முதலிய எல்லோரும் மூர்ச்சையாதல், அநுமார் சஞ்சீவி கொணர்தல், இந்திரஜித்து மாயாசீதையை அநுமார் முன் வதைத்தல், இந்திரஜித்து வதை, மூலபல வதை, இராவணன் வதை, சீதாபிராட்டியாரின் மீட்சி, ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம்.



உத்தரகாண்டம் :—இலங்கை நிருமாணம், குபேரன் இலங்கையை ஆளுதல், இராவணாதியர் உற்பவமும் அவர்கள் இலங்கை புகுதலும், இராவணன் புத்திரபாக்கியம் பெற்றிருத்தல், இராவணன் திக்குவிஜயம், இராவணன் தேவர்களை ஜெயித்தல், இராவணன் குபேரனுடைய நந்தவனத்தை அழித்தல், இராவணன் நந்திதேவரிடம் சாபம்பெறல், இராவணன் கைலையைப் பேர்த்தல், வேதவதியிடம் இராவணன் சாபம்பெறல், இராவணன் மருத்துமகாராஜன் செய்த யாகத்திற்கிடையூறுசெய்தல் அனரண்யராஜனுடன் இராவணன் யுத்தஞ் செய்தல், நாரதர் மூட்டிவிட்டதால் இராவணன் எமனுடன் சண்டை செய்தல், இராவணன் நாகராஜனோடு போர்செய்தல், இராவணன் நிவாதகவசரோடு சண்டை செய்தல், காலகேயருடன் தசக்கிரீவன் போர்செய்தல், இராவணன் வருணன் பட்டணத்தில் பிரவேசித்து பரஸ்திரீகளைச் சிறையெடுத்தல், தசக்கிரீவன் தேவலோகத்துப் பெண்களைச் சிறை யெடுத்தல், இராவணன் யட்சகின்னரஸ்திரீகளைச் சிறை யெடுத்தல், கணவனை யிழந்த சூர்ப்பனகி இராவணனிடம் வந்து புலம்புதல், இராவணன் மதுவென்பவனோடு சண்டைக்குப் போதல், இராவணன் அரம்பையிடத்தும் நளபாகனிடத்தும் சாபம் பெறல், இந்திரன் இந்திரஜித்துவால் சிறைப்பட்டுப் பிரமனால் விடுதலையடைதல், இராவணன் கார்த்தவீரியனால் கட்டுப்படல், இராவணன் வாலியின் வாலில் கட்டுப்படல், ஆஞ்சநேயர் வரலாறு, ஜனகன் இராமரைப் பார்க்கவருதல், புஷ்பகவிமானம் இராமரிடம் விடை பெற்றேகல், பரதன் இராமரின் செங்கோற் சிறப்புரைத்தல், இராமர் பிருந்தாவனம் செல்லுதல், சீதை வனம் புகுதல், சீதை வான்மீகராச்சிரமஞ் சேர்தல், இராமர் இலக்குமணனுக்குச் சிலநீதிகள் கூறுதல், பார்க்கராஜன் கதை, வசிஷ்டர் கதை, ஜனகன் உற்பத்தி, யஸ்துவின் கதை, இலவணாசுரன் கொடுஞ்செயலை இராமர் உணர்தல், சத்துருக்கன் இலவணராஜ்ஜிய பட்டாபிஷேகம் பெறல், சத்துருக்கன் வான்மீகரிடம் சேர்ந்து கல்மாஷ பாதன் சரித்திரங்கேட்டல், சீதை குழந்தைகளைப் பெறுதல், இலவணன் வதை, சம்புவன் வதை, அகஸ்தியர் இராமருக்குச் சுவேதன்கதை கூறி அவனால்

தாம்பெற்ற ஆபரணத்தை அளித்தல், தண்டகாரணிய வரலாறு, அஸ்வமேத யாகத்தைப்பற்றி இலக்குமணன் இராமருக்கு விருத்திராசுரன்கதை புரைத்தல், அஸ்வமேத யாகத்தைப்பற்றி இராமர் கூறிய கதை, இராமர் அஸ்வமேதயாகஞ் செய்தல் குசலவர்கள் வான்மீகரின் ஆக்ஞையால் இராமருடைய யாகசாலைக்குச் சென்று இராமாயணம் பாடி அவரை மகிழ்வித்தல், இராமர் குசலவரைத் தம் புத்திரரென்றுணர்ந்து சீதையை அழைப்பித்தல், சீதை பூப்பிரவேசமாதல், இராமர் அஸ்வமேத யாகம் முடித்து அயோத்தியடைதல், இராமர் கந்தருவராஜ்ஜியத்தைப் பரதன் குமாரர்க்குப் பகிர்ந்தளித்தல் இராமர் இலக்குமணன் பிள்ளைகளுக்கு அரசாட்சி கொடுத்தல், இராமர்பால் காலன்வந்து பிரமன் கருத்துரைத்தல், துருவாசர் இராமரிடம்வந்து இலக்குமணன் அவரைப் பிரிதற்கேதுவை உண்டாக்கல், இலக்குமணன் வைகுண்டமடைதல் இராமரும் வைகுண்டம் சேரத் துணிதல், குசலவர்க்கும் சத்துருக்கன் பிள்ளைகட்கும் மகுடாபிஷேகம், ஸ்ரீ இராமர் சகோதரர் முதலியவர்களோடு சரயுகட்டஞ் சேர்ந்து ஜோதியிற் கலந்து வைகுண்டமடைதல்.

புதிய நாவல்! வெளியாகிவிட்டது!!

# மதனாம்பாள்

அல்லது

## மகா மாயக் களவு.

இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பெற்ற மிக்க அற்புதம் பொருந்திய நாவல்: அவர்கள் எழுதிய கீர்த்தி வாய்ந்த துப்பறியும் பல நாவல்களில் இது முதன்மை பெற்றதாகும். இதில் முதலியாரவர்களின் முழு ஆற்றலையும் நன்குணரலாம். இந்நாவல் படிப்போர் மனதைக் கவர்ந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கச் செய்யுமென்பதில் ஐயமில்லை. இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன் சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக்கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி வேலாயுதன் என்பவனைத் தன் மோசச்செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்து வந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற்கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகா மாயக்களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும், இன்னும் அந்த லோகநாதன், பொருளாசையால் தன் தமையனாகிய கஜேந்திரம் பிரபுவை விஷமிட்டுக் கொல்வதும், விமலாபாயைத் தீராத்துயரத்திற் குள்ளாக்குவதும், முடிவில், வரதராஜுலு என்னும் துப்பறியும் நிபுணனால், அந்தச்சண்டாள லோகநாதன் குற்றங்கள் வெளியாக்கப்பட்டு அவன் தீபாந்தரவாச தண்டனையடைவதும், மேலும் இடையிடையே வரும் மகா மோசதந்திர அற்புதச் செயல்களும் படிப்போர்க்கு மேலும் மேலும் அளவற்ற ஆச்சரியத்தை விளைவிக்கும். இதனைப் படிப்பதால் நன்மை செய்தோர் நலம் பெறுவதையும், தீமை செய்தோர் தீங்கடைவதையும், சத்தியத்தின் உயர்வையும் இன்னும் பற்பல நீதிகளையும் அறிந்துகொள்ளலாம்.

முதற்பாகம் விலை ரூ. 1—8—0. இரண்டாம்பாகம் விலை ரூ. 1—8—0.
ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-7-25 வரை 2-பாகமும் ரூ. 2-8.

விலாசம்:—"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# இந்திராபாய்

## அல்லது இந்திரஜாலக்கள்ளன்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியா ரவர்களால் எழுதப்பட்டது.
இதில் 5 ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது

இது ஒரு துப்பறியும் நாவல்: ஆனால் அனேகம் துப்பறியும் நாவல்களை விட இது மிக்க அபூர்வமானது. இதில் சம்பந்தப் பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலக்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமான கதைகளாகவுமே யிருக்கும்.

இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துகளிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையையுண்டாக்கும். துப்பறியும் நாவலில் பிரியமுடையோர் இதை வாசிக்காதுவிட்டால் பின்னால் அதற்காக உண்மையில் வருத்தப் படுவார்கள் உயர்ந்த க்ளேஸ் கடிதத்தில் அச்சியற்றப்பட்டது. சுமார் 530 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா 2—8—0

## கோமளவல்லி.

ஐயன்மீர்! கோமளவல்லி அம்மாளுக்கும் சத்தியவல்லி அம்மாளுக்கும் நடந்த சக்களத்திபோராட்டம் லீலாவதிசுலோசனாவுக்கு ஏற்பட்ட அக்காதங்கை சக்களத்தி போராட்டத்திற்கு அதிகமாகவும் கோமளவல்லியால் துரத்தப்பட்ட உத்தமி சத்தியவல்லி காளியம்மன் ஆலயத்திலிருந்த ராக்ஷஸன் பிராணனை அடியோடு வாங்குவதும், ராக்ஷஸனால் தவிக்கிற தலைமுண்டங்களை உயிரோடு எழுப்புவதும் கற்பூரமலையில் தன் கற்பு மகிமையை காண்பிப்பதும் இறந்த கோமளவல்லி குழந்தையை உயிருடன் எழுப்புவதும், இன்னும் அதியற்புதமான விஷயங்களும் இருக்கின்றன. கடைசியில் அறிவானந்த மகாராஜனும் சத்தியவல்லி அம்மாளும் ஆண் பிள்ளையைப் பெற்று சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். இப்புஸ்தகம் கையிலெடுத்தால் முடியும்வரையில் கீழே வைக்க மனம் துணியாது. விலை அணா 8.

## திருவாசகம்.

திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய இம் மெய்ஞ்ஞான நூல் மாணிக்கம்போலும் மதிக்கத்தகுந்த பாடல்களைக் கொண்டிருத்தலால் திருவாதவூரடிகளுக்கு "மாணிக்க வாசகர்" என்னும் சிறப்புப் பெயர் சாக்ஷாத் சிவபெருமானால் அளிக்கப்பட்டது. ஞான பத்திகளை யூட்டவல்லது. நாவுக்கும் செவிக்கும் தெவிட்டாத இனிமையைத் தரவல்லது. எழுத்துப் பிழையின்றிச் சுத்தப் பிரதியாக கிளேஸ் பாக்கட் சைஸில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. விலை ரூ. 1.

விலாசம்—ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# இரத்தினபுரி இரகசியம்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய லௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று கூறுகிறோம். இரண்டு பாகமும் விலை ரூபா 4 0 0

# அமராவதி அல்லது அதிசய மர்மங்கள்.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனு யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவா னென்பதும் இதில் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைத்து அடியோடு மனதைக் கவரத்தக்கதே. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகச் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ்வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருக்கிக் கூறின் இந்த நாவலை யொரு அதிசயக் களஞ்சியமே யெனலாம்.

2-பாகமும் விலை ரூபா. 4.

## கமலசேகரன்.

ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர் குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைப்போல் அன்னியரால் வளர்க்கப்படுவதும் பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் அவனெதிரிற்றோன்றி அவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவி செய்வதும் மிக்க ஆச்சரியமாக விருக்கும்.

இதில் அதிசயரசமும், சோகரசமும், வீரரசமும் உண்மைக்காதலின் அபூர்வ குணங்களும் நிறைந்திருக்கின்றன. இதன் விலை ரூபா 1 12 0.

## கனகபூஷணம்.

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அநேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவாராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். சிறுவர்களுக்கு வேண்டிய நீதிகளும் நற்புத்திகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்த நாவல் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதை முழுதும் கவர்ந்து கொள்ளக்கூடியது. 2-பாகம் இதன் விலை ரூபா 3 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# கைவல்ய நவநீத வசனம்

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய பகவான் அநாதியே ஆணவமலத்தில் அழுந்திக்கிடந்த ஆன்மாக்களுக்குக் கருணையோடு தநுகரண புவன போகங்களை யளித்தருளினர். இந்த ஆன்மாக்கள் மாயையினின்றும் விடுபட்டு துக்க நிவர்த்தியும் ஆனந்தப் பிராப்தியுமாகிய மோக்ஷவின்பெய்தும் பொருட்டே கருணாநிதியாகிய ஆண்டவன் அவ்வாறு செய்தருளினர். மோக்ஷ மார்க்கத்தை யறிவிக்கும் வேதத்தையும் அருளியிருக்கிறார்

வேதமோ யாவராலும் உணரற் பாலதன்றாகும். ஆதலில் மகான்களாகிய நம் முன்னோர்கள் வேதசாரத்தைத் திரட்டி அதிகாரிகளின் பேதப்படிப் பல நூல்களை யியற்றியுள்ளார்கள். அவற்றில் ஸ்ரீமத்-தாண்டவராய சுவாமிகள் இயற்றி யருளிய கைவல்ய நவநீதம் என்ற நூல் மோக்ஷ மார்க்கத்தைப் பூரணமாய் விளக்கிக்காட்டும் நூலாகும். இதில் கூறப்பட்டுள்ள முத்தி மார்க்கம், ஈசுவர பக்தியுடைய எவருக்கும் (ஜாதி மத பேதமின்றி) பயன்படக் கூடியதாகும். மூலநூல் கவிகளாயுள்ளது. அந்த நூலுக்குச் சிலர் உரை யெழுதியுள்ளார்கள். ஆனால் கோவிலூர் ஸ்ரீமத்-பொன்னம்பல சுவாமிகள் இயற்றிய உரையே சால சிறந்ததென்று மதிக்கப்படுகிறது.

ஆயினும் இரகசிய விலக்கண ஆராய்ச்சியுடையார்க்கே இவை நன்கு விளங்கும். ஆதலில் சாதாரணக் கல்வியுடையோரும் வாசித்துணர்ந்து பயனடைய வேண்டுமென்றே வசனரூபமாய் நமது ஆனந்தபோதினி சஞ்சிகையில் வெளியிடப்பட்டது இப்போது புத்தக ரூபமாய் வெளிவந்திருக்கிறது. இதில் வாசிப்போர்க்குண்டாகக்கூடிய அய்யங்களனைத்தும் தெளிவாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறபடியால் கூடியவரையில் இன்னொருவரிடம் சென்று கேட்கவேண்டிய அவசியமின்றியே சொல்ப கல்வி யுடையோரும் இதை வாசித்துணர்ந்துப் பயன் பெறலாகும். நல்ல கடிதத்தில் சுத்தமாய் அச்சியற்றப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1 8 0.

மூன்றாம் பதிப்பு! **தினகரசுந்தரி** விலை ரூபா 1.

## ஓர் செல்வச் சீமாட்டியின் அதிசயமான கதை

இக் கதாநாயகி ஆண் வேடந்தரித்து, தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய சோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்து விடுவது மிக்க வியப்பிலும் வியப்பாயிருக்கும்.

இக்கதா நாயகியின் குற்றமற்ற இரகசியங்களை வெளியிடுவதாய்ப் பயமுறுத்தி இவளைச் சோரஞ்செய்ய முயற்சி செய்யும் துஷ்டர்களை இவள் தந்திர சாமர்த்தியத்தால் வென்று அவர்கள் வெட்கியோடும்படிச் செய்தல் மிக்க வீரத்தனமாயும் வேடிக்கையாயுமிருக்கும்.

தான் பலவித ஆபத்துகளில் சிக்கியபோதும் தன் சுய தந்திரத்தால் தன் கற்பிற்குப் பழுது வராமல் தப்பித்துக்கொண்டு தன் கணவனுக்கு மனம் நோகாதபடிக்கு அவனுக்கு நேரிடவிருந்த அவமானத்தினின்றும் அவனைக் காப்பாற்றுவதையும், மாமியார், மைத்துனர், நாத்திமார் இவர்களை யன்போடு ஆதரிப்பதும் இவளுடைய கற்பின் உறுதியையும், குடும்ப விஷயத்திலிருக்கும் உயர்தரமான நடக்கையையும் நன்கு விளக்குகிறது.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

*இக்குறியுள்ளவை டெக்ஸ்ட்புக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

## நூதன தமிழ் நாவல்களும், கதைப் புத்தகங்களும்.

ஆசிரியர்—குப்புசாமி முதலியார்

| இயற்றியவை. | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| | | | * சதானந்தர் ... | 1 | 4 |
| லோகநாயகி ... | 1 | 0 | * ஜீவகன்வசனம் ... | 1 | 0 |
| விளையாட்டுச்சாமான் ... | 1 | 6 | * கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| பவளத்தீவு 2 பாகங்கள் ... | 8 | 0 | * பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 0 | 14 | * வீரத்தன்மையுள்ள ஹிந்து மாதர் | | |
| இந்திராபாய் ... | 2 | 8 | சிரோமணிகள் ... | 0 | 10 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 | * கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| மத்சன் அறையின் மர்மம்... | 1 | 8 | * அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 | * சகோதரவாஞ்சை ... | 0 | 6 |
| பூங்கோதை ... | 0 | 10 | * நீலக்கொடி ... | 0 | 5 |
| வீரநாதன் ... | 0 | 12 | * மணவாளன் ... | 0 | 3 |
| கனகபூஷணம் 2 பாகமும் | 3 | 8 | * பரசுராமன் ... | 0 | 3 |
| கமலசேகரன் ... | 1 | 12 | *சிசுபாலன் ... | 0 | 8 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 | *அங்கதன் ... | 0 | 4 |
| ரத்னபுரி ரகசியம் 2 பாகமும் | 4 | 0 | * தசாவதாரம் ... | 0 | 6 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | * கிருஷ்ணன் தூது வசனம் | 0 | 8 |
| சுவர்ணம்பாள் ... | 0 | 12 | *சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | *கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| குணசந்திரன் ... | 0 | 12 | *சத்தியவசனி ... | 0 | 4 |
| பத்மாவனி ... | 0 | 14 | *விமலன் ... | 0 | 4 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | *கண்ணபிரான் ... | 0 | 4 |
| மின்சாரமாயவன் ... | 1 | 8 | *செயுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| உமர் பாஷா 2 பாகமும் ... | 4 | 12 | *காலுமந்திரிகதை ... | 0 | 4 |
| வரதசுந்தரம் ... | 2 | 0 | சீமந்தனி ... | 0 | 8 |
| அம்புஜாக்ஷி ... | 2 | 0 | ஞானரத்தினம் ... | 0 | 4 |
| அயாஷா 2 பாகங்கள் ... | 1 | 12 | இந்து லீகா ... | 0 | 8 |
| மாண்டிகிரிஸ்டோ 2 பாகமும் | 3 | 0 | கண்ணன் பக்திரஸக்கீர்த்தனை | 0 | 2 |
| லண்டன் திருடர்கள் 2 பாகம் | 2 | 12 | ஜெகதலஜெகஜ்ஜோதி ... | 0 | 8 |
| மதனகாந்தி ... | 1 | 8 | மெய்க்காதலி ... | 0 | 8 |
| கமலநாதன் ... | 1 | 8 | மேனகாபினாக்கி கதை ... | 0 | 3 |
| கற்பகசுந்தரி 2 பாகம் ... | 2 | 12 | வீணைகானன்ஞானேந்திரி... | 0 | 8 |
| | | | மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கைவல்லிய நவநீத வசனம் | 1 | 8 | கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| குசேலோபாக்கியான வசனம் | 1 | 0 | விகடவல்லி கதை ... | 0 | 4 |
| மெடீரியா மெடிகா ... | 8 | 0 | கமலமதி ... | 0 | 8 |
| அற்புத நவநீதரம்பை ... | 1 | 0 | துயாளன் கதை ... | 0 | 12 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய | | | காமசேன ரசிகா ... | 0 | 8 |
| சரித்திரமும்உபதேசங்களும் | 1 | 12 | பூர்ணவல்லி ... | 0 | 6 |
| மயானபகவதி ... | 1 | 0 | பூலோக லக்ஷ்மிகதை ... | 0 | 10 |
| கம்பராமாயண சங்கிரகவசனம் | 2 | 0 | வைணவக் கொத்து ... | 0 | 8 |
| ராமாயண ஓடம் ஏலப்பாட்டு | 0 | 8 | அனுபோக ஆருட சிந்தாமணி | 0 | 6 |
| கனகரத்தினம் ... | 0 | 8 | நிமித்தியகுறி சாஸ்திரம் ... | 0 | 2 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 | ஸ்திரீபுருஷஜாதக நிறவுகோல் | 0 | 8 |
| கனகசுந்தரி ... | 0 | 10 | மருமக்கள் துயரம் ... | 0 | 2 |
| மதுருதனன் ... | 0 | 10 | தத்வஸங்கிரஹ ராமாயணம் அச்சில் | | |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 | பகவத்கீதா சங்கிரகம் ... | 0 | 2 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நே. 167, மதராஸ்.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஸ்ரீ ஆனந்தபோதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 11 } குரோதன ஹு ஆடிமீ கஉ 1925 ஹு ஜூலைமீ 16உ { பகுதி 1

## கடவுள் வணக்கம்.

இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதே
　　னெனருசித் திடவலியவர்
　திின்பங் கொடுத்தநினை யெந்நேர நின்னன்ப
　　ரிடையரு தருகிநாடி
உன்னிய கருத்தவிழ வுரைகுளறி யுடலெங்கு
　　மோய்ந்தயர்ந் தவசமாகி
　உணர்வரிய பேரின்ப வநுபூதி யுணர்விலே
　　யுணர்வார்க ளுள்ளபடிகாண்
கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்
　　கைக்கொள்வள் பக்குவத்தில்
　கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக்
　　கருதிநகை யாவளது போல்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
　　தோற்றிற் சுகாரம்பமாஞ்
　சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபாஞ்
　　சோதியே சுகவாரியே. (1)

ஆக்குவை மாயை யாவு மொடியினி லவற்றை மான
நீக்குவை நீக்க மில்லா நினைப்பொடு மறப்பு மாற்றிப்
போக்கொடு வரவு மின்றிப் புனிதநல் லருளா னந்தந்
தாக்கவுஞ் செய்வா யன்றோ சச்சிதா னந்த வாழ்வே. (2)

கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறே
ரிற்புறத் தவரை நாடார் யாங்களு மின்ப வாழ்வுந்
தற்பொறி யாக நல்குந் தலைவநி னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணா னந்த வாழ்வே. (3)

## அரும்பொருள் விளக்கம்.

1. இறைவனால் இடையறா இன்பத்தை வலிய அருளப்பெற்ற அன்பர்கள் அவ்வின்பக் கடலிலாழ்ந்து, அந்த இறைவனைத் தேசகால வொழிவின்றி எந்நேரமும் தியானித்து, அதனாலேற்படும் சரீர கஷ்டங்களைப் பொருட்படுத்தாது, பரவசராய் அறிவதற்கரிய பேரின்பானுபவ வுணர்வு கொண்டு அறிந்து வழிபடுவார்கள். இது சத்தியம். அப்படி என்னால் செய்யமுடியாது. பெண்மகளொருத்தி கன்னியா யிருக்கும்போது சிற்றின்ப ரசத்தை அனுபவ வுணர்ச்சி யின்மையால் வெறுத்துப் பேசுவது சகஜம். ஆனால் அவள் பக்குவம் பெற்றுக் கணவனுடன் வாழுங்காலத்தில் சிற்றின்பத்தையே பேரின்பமாகக் கருதுவள். அப்போது நீ முன்னே சொன்னது யாதாயிற்று என்று கேட்டால் அதை நினைத்து நகைபுரிவள். அதுபோல சொற்படி நடக்கும் அறிவிலாத எனக்கு உனது கிருபையுண்டானால் சுகம் பிறக்குமென்று இப்பாடலால் தெரிவிக்கின்றார்.

இன் அமுது=இனிய அமிர்தம்.

பாகு=சர்க்கரைப் பாகு.

உன்னிய கருத்து=நினைத்த மனம்.

அவிழ=தளர்வடைய.

அவசம்=பரவசம்.

அனுபூதி=அனுபவ உணர்ச்சி.

சுகாரம்பமாம்=சுகம் உதயமாகும்.

மிக்க தீவிரதர பக்குவமுற்ற அடியார்கள் இறைவனுடன் இரண்டறக் கலந்து பேரானந்த வாழ்வை யனுபவிக்கும்போது இன்பந் தருபவன் பதியாகவும், இந்த இன்பத்தை யுண்டுபண்ணுவது பாசமாகவும், அவ்வின்பத்தை யேற்று அனுபவிப்பது பசுவாகவும் இருக்கிறபடியால், இன்னமுது கனிபாகு..........உணர்வார்களுள்ளபடி காண்' என்று வியவகரிக்கப்பட்டது. இதில் 'கொடுத்த நினை' என்றும், 'அவசமாகி' என்றும், 'உணர்வார்கள்' என்றும் சொல்லி பதி பசு பாசமாகிற மூன்று பொருளையும் விளக்கமாக்கினர்.

> "மூத்திதனில் மூன்று முதலு மொழியக்கேள்
> சுத்தவனு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
> இன்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தல்மலம்
> அன்புடனே கண்டுகொளப் பா"

எனவரும் ஆன்றோர் வாக்கு இங்கு உணர்தற் பாற்று.

பூரண சந்திரனைப் போலும் வயதடைந்து, பேரழகுபெற்று, மதனாகமமுணர்ந்தவ ளானாலும், பக்குவமுறாத கன்னிகை சிற்றின்ப ரசத்தை யுணராள். பக்குவமுற்றுப் புருஷனுடன் சேரும்போது அவ்வின்பரசம் இப்படிப்பட்டதென அறிந்து ஊமைகண்ட கனவைப்போல அதை அயலாரிடம் வெளியிடாதிருப்பள். இந்த உபமானத்தைப் போலவே ஜீவனொருவன் எல்லாக் கலைகளிலுந் தேர்ந்து நிபுணத்வ மடைந்திருந்தும், பக்குவமுறாதபோது அவன் திருவருளின் உண்மையை ஒரு சிறிதும் உணரான். பக்குவம்பெற்று இறைவனுடன் கலந்து, ஞாதாக்களுக்கே புரித்தான ஆனந்தானுபவத்தை யடையும்போது அவ்வனுபவத்தைப் பிறர்க் கெடுத்துரைக்கும் தன்மையனாகான். 'ஆகையால் 'கன்னிகை யொருத்தி........ நகையாவள்' என்றார்.



> "கருவிகழிந் தாற்கானார் ஒன்றுமெனிற் கானார்
> கானாதார் கன்னிகைதான் காமரதங் கானாள்
> மருவியிரு வரும்புணர வந்தசுக இன்பம்
> வாயினாற் பேசரிது மணந்தவர்தா முணர்வர்
> உருவினுயிர் வடிவதுவு முணர்ந்திலைகாண் சிவனை
> யுணராதார் உணர்வினா லுணர்வதுகற் பனைகாண்
> அருள்பெறிலவ் விருவரையும் அறிவிறந்தங் கறிவர்
> அறியாரேற் பிறப்புமறா தாணவமு மறாதே"

என்னும் சிவஞானசித்தியாரும் இங்குக் கவனித்தற்கானதே.

பெண்மகள் கன்னிகைப் பருவத்தில் சிற்றின்பத்தை வெறுத்துப் பக்குவதசையில் அதனை இச்சிப்பதுபோல அருள் பெறாத எனக்குச் சுகானுபவம் வெறுப்பாகவும் அருள்பெற்ற பெரியார்க்கு அது விருப்பாகவும் இருக்குமென்பது கருத்து.

2. ஆக்குவை=உண்டாக்குவாய் (சிருஷ்டி).

நீக்குவை=நீக்கிடுவாய் (சங்காரம்).

ஆனந்தம் தாக்கவுஞ் செய்வாய்=ஆனந்தத்தை யடையச் செய்வாய் (அநுக்கிரகம்).

இம்மூன்றையுஞ் சொல்லியவாற்றால், திதியும் திரோபவமும் கூட்டிக்கொள்ளவேண்டும். கூட்டிக்கொள்ளவே இறைவனது பஞ்சகிருத்தியம் இப்பாடலில் வெளியிட்டவாறும்.

3. இல்புறத்தவர்=அயல் வீட்டார்.

தற்பொறி=தனது செல்வம்.

பொற்புற=பொலிவடைதற்பொருட்டு.

கற்புள்ள ஸ்திரீ தன் கணவனுக்கு ஒப்பாகவாவது உயர்வாகவாவது அயலாரைக் கொள்ளாது, தன் கணவன் பணியிலேயே கண்ணுங் கருத்துமா யிருத்தல்போல, சிவபெருமானுக் காட்பட்ட யானும் பிறதெய்வங்களிடத்தில் பற்றின்றி அப்பெருமான் பணியிலேயே நோக்காயிருப்பேனென்கிறார்.

> "கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
> கொண்டானை யல்லால் அறியாக் குலமகள் போல்
> விண்டோய் மதில்புடைசூழ் வித்துவக்கோட் டம்மானீ
> கொண்டாளா யாகிலுநின் குரைகழலே கூறுவனே"

எனப் பிறர் கூறுவதுங் காண்க.

# ஆனந்தபோதினி

குரோதன௵ ஆடி௴ ௧௨

## நமது பத்திரிகையின் 11-வது ஆண்டு.

உயர்வற உயர்நலமுடையவனும், அயர்வறு மமரர்க ளதிபதியுமாகிய ஜெகதீசனது கிருபா கடாக்ஷத்தால நமது ஆனந்தபோதினிப் பத்திரிகைக்குப் பத்தாண்டுகள் மங்களகரமாகவே கழிந்தன. இம் மாதம் இப்போதினிக்குப் பதினோராவது ஆண்டு பிறந்திருக்கிறது. எல்லோருடைய மனோபீஷ்டத்திற்கும் உரித்தாகுமாறே நம் பத்திரிகையை எத்தகைய விக்கினமுமின்றி நடைபெறச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக. தேச முன்னேற்றத்திற்கும், அதன் க்ஷேமத்திற்கும், தேகாரோக்கியத்திற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும், மற்றும் வேண்டிய சுயநலத்திற்கும், பொதுநலத்திற்கும் யோக்யதை வாய்ந்த வழிகளை விளக்கிக்காட்டும் விஷயத்தில் நமக்குத் துணைக்கருவியாயிருப்பது பத்திரிகையேயாம். பாஷாபிவிருத்திக்கு ஆதாரமாவதும் பத்திரிகையே. பத்திரிகைக்கு இத்துணைச் சிறப்பு இருத்தல்பற்றி, இதன் உண்மையறிந்த ஒவ்வொருதேசத்து மேதாவியரும், பத்திராபிமானிகளாய், பற்பல பத்திரிகைகளை வெளிப்படுத்தி, பத்திரிகையில் அபிமானமில்லாதாரையும் நற்போதனையால் உள்ளவராக்கி, நடுநிலையைப் பெற்றுச் சுகமார்க்கத்தில் வாழ்ந்துய்யுமாறு செய்து வருகிறார்கள்.

ஆனந்தபோதினி பத்திரிகைக்குப் போஷகரில்லாதிருந்தும் சென்ற பத்தாண்டுகளாக இதனை அபிமானித்து, இதன் அபிவிருத்தியில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் காட்டி வருபவர்கள் நமது சந்தாதாரர்களாகிய அன்பர்களே. இப்படி நம் பத்திரிகை நாளுக்கு நாள் செழித்தோங்குமாறு அதனிடங் கண்ணுங் கருத்துமா யிருந்து அதனைப் பரிபாலித்து வரும் சந்தாநேயர்களுக்கும், அதற்கு மனச்சோர்வின்றி மிக்க உற்சாகத்துடன் விஷயதானம்புரிந்து உப



கரித்துவரும் அறிவாளராகிய நண்பர்களுக்கும், புதிய சந்தாதாரர்களை அப்போதைக்கப்போது சேர்த்து இணங்கவைக்கும் உதார குணமுள்ள உத்தமர்களுக்கும் நமது மனதார்ந்த நன்றியறிதலைப் பாராட்டுவதுடன், அவர்களுக்கு நீடித்த ஆயுளையும், நோயற்ற வாழ்வினையும், நல்ல சந்தான விருத்தியையும், இன்னும் இகத்திற்கும் பரத்திற்கும் வேண்டிய எல்லா நலங்களையும் கொடுத்து ரக்ஷித்தருளப் பரம தயாநிதியாகிய பகவானது திருவருளைப் போற்றுகின்றோம்.

தேசநலத்தைப் பெரிதுங் கருதியே ஆனந்தபோதினி பத்திரிகைக்கு வருஷத்திற்கு ரூபா ஒன்றாக மிகவும் குறைந்த சந்தாவை நாம் ஏற்படுத்தி யிருக்கிறோம். இதற்குக் கிடைக்கும் மாதாந்தப் புத்தக ரூபமான சஞ்சிகையோ பன்னிரண்டு. ஒவ்வொரு சஞ்சிகையும் 56 பக்கங்களடங்கிய எட்டுப் பாரங்கள்கொண்டது. ஐந்து பாரங்கள் பூரா விஷயமும் மற்றவை எங்கள் சொந்த விளம்பரமும் உள்ளவை. நாம் பிரதிதினமும் அனாவசியமாக எவ்வளவோ செலவழித்துவிடுகிறோம். நாளொன்றுக்குத் தம்படிவீதம் உண்டி சேர்த்துவந்தாலும் வருஷத்தில் பதினைந்தணா சேர்ந்துவிடும். அத்துடன் ஒரு அணா சேர்த்துக் கஷ்டமில்லாமலே சந்தாத்தொகையைச் செலுத்தி இவ்வரிய பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

சில சந்தாதாரர்கள் தாம் செலுத்திய வருடசந்தா முடிவுபெற்றதும் அடுத்த வருடத்திற்குரிய சந்தாவை அனுப்பாமல் மௌனமாயிருந்துவிடுகின்றனர். அத்தகையோரை நாங்கள் பத்திரிகாபிமானமுடையவர்களாகவே கருதி அவர்கட்கு வி-பி-யில் சஞ்சிகையை யனுப்ப நேரிடுகின்றது. இந்த விஷயத்தில் சிலர் சந்தோஷப்பட்டுத் தங்களுக்கிருக்கும் பல வேலைகளின் குழப்பத்தால் தங்கள் சந்தாத் தொகையை அனுப்பத் தாமதிக்க நேர்ந்ததை மன்னிக்க வேண்டுமென்றுஎங்களுக்கெழுதி வருகின்றனர். வி-பி-யையும் அங்கீகரிக்கின்றனர். சிலரோ வி-பி-யைத் திருப்பிவிட்டு "நாங்கள் எப்போது பணம் அனுப்பவில்லையோ அப்போதே எங்களுக்குப் பத்திரிகை வேண்டுவதில்லை என்கிற எண்ணம் உண்டு என்பதை ஏன் நீங்கள் உணர்ந்துகொள்ளாமல் பத்திரிகையை வி-பி-யில் அனுப்பவேண்டும். அந்த வி-பி-யை நாங்கள் திருப்பிவிடுவதால் உங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறதென்று ஏன் சொல்லவேண்டும்" என்று கடிந்து பேசுகின்றனர். இப்படிப் பேசுபவர்கள் முன்னதாகவே (ஆனிமாதத்திலேயே)

தங்களுக்குப் பத்திரிகை வேண்டாம் என்று ஒரு கார்டு எழுதிவிட்டால் எங்களுக்கு எவ்வளவோ சௌகரியமாய்விடும். ஆகிலும் இவ்விதம் உண்டாகும் நஷ்டத்திற்கும் நாங்கள் வருந்தவில்லை. இவர்களுக்குப் பதிலாகப் புதிய சந்தாதாரர்கள் சேர்ந்தபடியேயிருக்கின்றனர்.

நிற்க, விஷயதானம் புரிவோரிற் சிலர் தாங்கள் எழுதியனுப்பும் வியாசங்களை உடனே வெளியிடாமைக்காக மனம் வருந்தி "இனி எங்களுக்குப் பத்திரிகை வேண்டாம். நாங்கள் அனுப்பும் வியாசங்களை வெளியிட உங்களுக்குப் பிரியமில்லை. நீங்கள் பாரபட்சமாக நடந்துகொள்கிறீர்கள்" என்று குறைகூறுகின்றனர். இவர்களுக்கிருக்கும் அபிமானத்தைப் பாருங்கள். பொது நோக்குடன் திருத்தமாகவும், பொருத்தமாகவும், சுருக்கமாகவும், விளக்கமாகவும் யாவருக்கும் பயன்படக்கூடியதாய் எழுதும் வியாசங்களை நாங்கள் கிரமப்படி வெளியிட்டுக்கொண்டுதான் வருகிறோம். ஒரு முறையில் பத்திரிகை எவ்வளவு பிடிக்குமோ அவ்வளவே வெளியிட்டு மற்றவற்றை அடுத்தமுறை வெளியிட இருப்பிலிருத்திக்கொள்ளுகிறோம். இப்படி யிருப்பிலிருப்பவை பெருங் கட்டாகச் சேர்ந்திருக்கின்றன. அடுத்தபடி வரும் வியாசங்களில் அதி முக்கியமும் உடனே வெளியிடத்தக்கதுமான ஒன்றையோ இரண்டையோ உடனே எடுத்துக்கொண்டு மற்றவற்றைப் பின்னர் வெளியிட வைகட்டில் சேர்த்துவிடுகிறோம். எந்த வியாசமும் வெளிவாராமற்போகாது. எங்களுக்கு ஏற்கனவே யிருக்கும் வேலையுடன் சிரமமான வேலைக்கிடந்தராதபடி விஷயதானம் புரியுமாறு சந்தாநேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திரிகையைப் பெரிதாக்கிச் சந்தாத் தொகையையும் அதிகமாக்குமாறு நமது சந்தாநேயர்கள் பலர் அடிக்கடி நமக்கு எழுதுகிறார்கள். இவ்விஷயமாக நாம் முந்திய சஞ்சிகைகளில் வெளியிட்டிருப்பதை நேயர்கள் கவனிக்கவில்லைபோலும். நாம் அச்சஞ்சிகைகளில் தெரிவித்தபடி நேயர்கள் புது சந்தாதாரராகப் பலரைச் சேர்த்து அத்தொகையை எங்களுக்கு முன்பணமாக அனுப்பும்பட்சத்தில் இப்போதுள்ள சந்தாத்தொகைக்கே சஞ்சிகையைப் பெரிதாக்கி அனுப்பச் சித்தமாயிருக்கிறோம். இதனை அன்பர்கள் கவனிப்பாராக. தயாபர மூர்த்தியாகிய பகவான் நமது சந்தாநேயர்களுடைய விருப்பத்தையும் எங்களுடைய எண்ணத்தையும் விரைவில் நிறைவேற்றி ரக்ஷித்தருள அவனது பொற்றாமரை நற்றாளை வாயார வாழ்த்தி மனதாரச் சிந்தித்து அஷ்டாங்கமும் நிலத்திற்படிய வணங்குகின்றோம். ஓம் தத் ஸத்.

பத்திராதிபர்.



---

## கீழ்நாட்டுப் பிரயாணிகளின் கஷ்டம்.

நம் நாடு, சிற்சில உரிமைகளைப் பெறாததனாலேயே இந்திய மக்களுக்குப் பற்பல அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று, அவற்றை நிவர்த்திப்பதற்கு மேதாவிகளாகிய பல அறிஞர்கள், உடல், பொருள், ஆவி மூன்றனையும் தத்தம் செய்து, அரும் பெரும் பிரயாசையெடுத்து உழைத்து வருகின்றனர். அவ்வுழைப்பின் பயனாகச் சில நன்மைகள் உண்டாகி யிருக்கின்றன; உண்டாகின்றன; மேலும் உண்டாகக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றன. இவை யொருபக்கமிருக்க, நம்மவர்க்குள்ளேயே சகோதரத்துவம் இன்மையாலும், சுயநலம் பாராட்டுந் தன்மையாலும், வேறு பற்பல காரணங்களாலும் பல கஷ்டங்கள் உண்டாகி வருகின்றன, அவற்றுள், கீழ்நாட்டுப் பிரயாணிகள் அடையும் கஷ்டம் முதன்மை பெற்றது; பலரும் பரிதபிக்கக்கூடியது. அதைப்பற்றிய நிவர்த்தி மார்க்கம் ஒன்றும் இதுகாறும் ஏற்படவில்லை. ஆதலின், அதைக்குறித்துச் சிலவற்றைப் பலர்க்கும் விளக்கிக்காட்டுதல் அவசியமாயிருக்கின்றது. அதனால், அக்கஷ்ட நிவர்த்திக்கான மார்க்கம் ஏதேனும் ஏற்படக்கூடுமென்று நினைக்கிறோம்.

இக்காலத்தில், நம் இந்து தேசத்தில்—அதிலும் தமிழ் நாட்டின் தென்பகுதியில்-தருமம் மாறுபட்டதாலோ, தெய்வபக்தி குறைந்ததாலோ, காலத்தின் மாறுபாட்டாலோ, வேறெவ்வகைக் காரணத்தாலோ உரிய பருவங்களிற் பெய்யவேண்டிய மழை சரியாகப் பெய்வதில்லை. பெய்தாலும் காலந்தவறிப் பெய்கின்றது. அதனாலும், இந்நாட்டவர் விவசாயத்தில் சிரத்தையின்றி வெவ்வேறு பற்பல துறைகளில் இறங்கிவிட்டமையாலும், இங்குப் பயிர்த்தொழில் சரிவர நடைபெறுவதில்லை. வருவாய்க் குறைவு ஏற்பட்டு விடுகின்றது. அதனால் பெரும் பான்மையான விடங்களில் அடிக்கடி பஞ்சம் நேர்ந்துவருகின்றது. அப்பஞ்சத்தால் பலர் ஜீவனத்துக்கு வழியின்றிக் கஷ்டப்படக் கூடியவர்களாயிருக்கின்றார்கள். அத்தகையினருள் பெரும்பான்மையோர் தனி

யாகவோ குடும்பங்களுடனோ இரங்கூன், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய கீழ்நாடுகளுக்குச் சென்று ஜீவிக்கவேண்டியவர்களாய் விடுகின்றனர். ஆதலின், சென்னை, நாகை முதலிய விடங்களிலிருந்து கீழ்நாடுகளுக்குப் புறப்படும் ஒவ்வொரு கப்பலுக்கும் தென்னாட்டிலுள்ள ஜனங்கள் கூட்டங் கூட்டமாகக் கூடிப் பிரயாணப்படுகிறார்கள். அதிலும் கார்த்திகை மாதத்தில் பர்மா தேயத்தில் நெற்கதிர் அறுப்பு வேலை மிகுதியாதலின் அதை உத்தேசித்து வருடந்தோறும் அம்மாதத்தில் பல்லாயிரக் கணக்கான பிரயாணிகள் இரங்கூனுக்குப் புறப்பட்டுப் போகின்றார்கள்.

அவர்கள் அவ்வாறு புறப்பட்டுப் போகும்போது, மனைவி மக்களுடனும், மூட்டை முடிப்புக்களுடனும், பெட்டி சட்டிகளுடனும், கால் நடையாகவோ, கட்டை வண்டிகளிலேறியோ, தங்கள் ஊர்களுக்குப் பக்கத்திலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களிருக்கும் நகரங்களுக்கோ ஊர்களுக்கோ போய்ச் சேருகிறார்கள். ஆங்காங்குள்ள சாப்பாட்டுக் கடைக்காரர்களும், தரகுக்காரர் (டிஸ்கவுண்டுக்காரர்)களும், அவர்களை முன் பின் அறியாதவர்களாயிருந்தாலும் நெடுநாட் பழக்கமுடையவர்களைப் போல, அவர்களுடைய பணத்தை அகப்பட்ட வரையில் அபகரிப்பதற்கு, "அண்ணா வாருங்கள், அத்தான் வாருங்கள், மாமா வாருங்கள், முந்தி நீங்கள் பினாங்கிலிருந்து வரும்போது நம்முடைய கிளப்பில் வந்திறங்கிப் போகவில்லையா? நான் ரெயில்வேஸ்டேஷனுக்கு வந்து உங்களை எதிர்கொண்டழைத்து உபசரித்தனுப்பவில்லையா? அக்காள் சௌக்கியமா? மாமி க்ஷேமமா? தம்பிமார் சுகந்தானா?" என்று அவர்களுடன் பொய்யுறவு கொண்டாடித் தங்கள் சொந்தமான ஹோட்டல்களுக்கு அவர்களை அழைத்துச் செல்கிறார்கள். அந்தப்பேதை ஜனங்கள் பாபம்! முன்னே அவர்களை எப்பொழுதுமே அறியாதவர்களாயிருந்தாலும், அவர்கள் பேசும் தந்திரமான முகநட்பு வார்த்தைகளால், முன்னொரு சமயம் சந்தித்திருக்கக் கூடுமென்று தங்கள் மனதைத் தாங்களே சமாதானஞ்செய்து கொண்டு அவர்களை நம்பி அந்த ஹோட்டல்களுக்குப் போகிறார்கள். இவர்களுக்கு அந்த அறியாத ஊர்களில் தங்குவதற்கு எப்படியாவது ஓர் இடம் வேண்டியது அவசியமாயிருப்பதால், இவர்கள், அவர்கள் பின் போய்த் தீரவேண்டியதாகவே யிருக்கின்றது.

இவர்கள் அந்தச்சாப்பாட்டுக் கடைகளில் போய்ச் சேர்ந்த



வுடன் அவ் வோட்டல்காரர்களும், தரகுக்காரர்களும் இவர்களிடம் கூடி யிருந்துகொண்டு "நல்ல வேளையாய் நீங்கள் போக்கிரித்தனமான ஹோட்டல்காரர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் எங்களைக் கண்டுகொண்டீர்கள்; அவர்களிடம் சிக்கியிருந்தால் உங்கள் மூட்டைகள் கொள்ளைபோய் விடும்; உங்களுக்கு இன்னும் பல ஆபத்துக்களும் நேரும்; இங்கே அப்படி யொன்றும் நடவாது" என்று வாய்ப்பந்தல் போடுவார்கள். அதனால் அந்தப்பிரயாணிகள் இவர்களை மகா சத்தியவந்தர்களென்றே நம்பிக்கொள்வார்கள். ஆனால் அவர்கள், பிறர் மேலேற்றிக் கூறிய மோசத்தொழில்களெல்லாம் அவர்களிடத்திலேயே தான் குடிகொண்டிருக்கும். அவர்கள் இப்படியெல்லாம் பகட்டு வார்த்தைகளைப்பேசி ரெயிலில் சௌகரியமான நேரம்பார்த்து அவர்களை யேற்றியனுப்புவதாகச் சொல்லி இரண்டு மூன்று தினங்கள் வரையிலுங்கூடத் தங்கள் வசமே தங்கும்படி செய்துவிடுவார்கள். அவர்கள் எத்தனை நாள் தங்குகிறார்களோ அத்தனைக்கத்தனை ஹோட்டல் மாஸ்டர்களுக்கும், டிஸ்கவுண்டு மாஸ்டர்களுக்கும் வரும்படி அதிகம். அதற்காகவே இவ்வாறு தங்கச்செய்வது வழக்கம்.

அங்ஙனம் இந்த வழிப்பறி கொள்ளைக்காரர்கள் அவர்களைத் தங்கவைத்துக்கொண்டு, துணி மணி முதலிய சாமான்கள் வாங்குவதிலும், நாடகம் பயாஸ்கோப் முதலிய வேடிக்கைகள் பார்ப்பதிலும், பற்பல அதிசயங்களைப் பார்ப்பதிலும் கமிஷன் கவருவதற்கு இழுப்பார்கள். பிரயாணிகள் அப்போது இங்கிருந்து அதிக கஷ்டத்துடன் வழிச்செலவுக்கு மாத்திரம் பணந்தேடிக்கொண்டு செல்பவர்களாதலின் அத்தகைய விஷயங்களுக்கு அதிகமாக இணங்கமாட்டார்கள். கொஞ்சம் அதிகமாகப் பணம் வைத்திருக்கும் சிலர் மாத்திரம் இசைவார்கள். அவர்களிடம் மாத்திரம் மேற்படி இடைக் கொள்ளைக்காரர் கிடைத்த வரையில் அக்காரியங்களின் மூலம் கமிஷன் சம்பாதித்துக்கொள்வார்கள். அதன்மேல் சாப்பாட்டுக்கும் தங்குமிடத்திற்கும் ஏற்பட்ட பணங்களைப் பிரயாணிகளிடம் வசூலித்துக்கொண்டு அவர்களை ரெயில்வேஸ்டேஷன்களுக்குத் தள்ளிக்கொண்டு போவார்கள். பிரயாணிகளுககு ஏற்படும் சாப்பாட்டுச் சௌக்கியமும், தங்குமிடத்தின் சௌகரியமுமோ வாயினாற் சொல்லி முடியா; சாதமோ, இந்தப் பிரயாணிகளுக்கென அந்த ஹோட்டல்காரர் தயார்செய்து வைத்திருக்கும் தடித்த மட்டையரிசியால் கல்லுடன் கலந்து அருமையாக ஆக்கப்

பட்டது; குழம்போ மனங் குழம்பும்; அவர்கள் ஏதோ ஒரு காயை அறுத்துச் சட்டியிற்போட்டு உப்பும் புளியும் அதன் தலையிற் கொட்டித் தண்ணீர் வார்த்துக் கொதிக்கவைத்திருப்பார்கள். இந்தச் சாப்பாட்டிற்கு ஆளொன்றுக்கு ஆறணா விழுக்காடு வசூலித்துவிடுவார்கள். இடவாடகையோ நாளொன்றிற்கு ஆளொன்றுக்கு நான்கணா விகிதம் வாங்கிவிடுவார்கள். ரெயில்வேஸ்டேஷனுக்குச் சென்றவுடன், அவர்கள் அந்தப்பிரயாணிகளைக் கூட்டங் கூட்டமாக ஆடு மாடுகளைப் போல் திரட்டிப் புழுதிநிறைந்த இடங்களில் உட்காரவைப்பார்கள். அந்தப்பேதை ஜனங்கள் மண்ணிலும் கல்லிலும் துணிகளை விரித்துப் படுத்திருப்பார்கள். இந்தப் பிரயாணிகளைக் கண்டால் எவருமே இழிவாகக் கருதுவது இயற்கையாதலின், இவர்கள் எவர்க்கும் தொந்தரவு கொடாமல் ஓர் ஒதுக்கமான விடத்தில் வீழ்ந்து கிடக்கும்போது கூட அங்கேயிருக்கும் போட்டர்களும், ஜவான்களும், அவர்களை எழுப்பி, "கழுதைகளே! இங்கே வந்து படுத்திருக்கிறீர்களே ; சாமான்களை எவராவது எடுத்துக் கொண்டுபோய் விட்டால் உங்களுக்கு யார் இழவு கூட்டுகிறது; இங்கே படுத்துத் தூங்கக்கூடாது; வேறெங்காவது போயிருந்து ரெயில் புறப்படும் நேரத்துக்கு வந்து சேருங்கள்" என்று அங்குமிங்கும் துரத்துவார்கள். இவர்கள், அங்கேவரும் ஜனங்களுக்குச் சௌகரியங்களைச் செய்ய ஏற்பட்டவர்களாதலின், இத்தகைய உதவியைச்செய்து விடுகிறார்கள். அந்தோ! புதியவராக வந்த அந்த ஜனங்கள் என்ன செய்வார்கள் பாபம்! பகற்காலமாயிருந்தாலும் பாதகமில்லை; வேறெங்கேனும் போயிருந்து வருவார்கள். இராக்காலத்தில் வேறிடங்கள் தெரியாமையால், அவர்கள் அவ்விடத்தை விட்டுப்போகப் பயப்படுவார்கள். பயந்தாலும் காவற்காரர்கள் விடுவதில்லை. அவர்களுடைய முடுக்குதலுக்கஞ்சிப் பிரயாணிகள் அங்குமிங்கும் போய் அலைவார்கள். அப்போதவர்களின் பொருள்களைச் சிலர் கொள்ளையடித்துக் கொண்டுபோய் விடுவார்கள். இதன் இரகசியம் கடவுள் ஒருவருக்கே தெரியும். இந்த விதமாக ஜனங்களை ஸ்டேஷனைவிட்டுச் செல்லுமாறு துரத்துவதையும், அவர்கள் பலவிதமான ஹிம்ஸைக்குள்ளாவதையும் சேலத்தைச் சார்ந்த சூரமங்கலம் ஸ்டேஷன், வடக்கே கூடூர் ஸ்டேஷன், திண்டிவனத்திற்கடுத்த ஒலக்கூர் ஸ்டேஷன் முதலிய விடங்களில் பிரத்தியக்ஷமாகப் பார்த்தேயிருக்கின்றோம். அப்படி ஸ்டேஷன் காவலர்கள்



முடுக்கும்போது, அவர்களுக்கு தக்ஷிணை ஸமர்ப்பிப்பவர்களுக்கு அங்கே தங்க கொஞ்சம் இடம் கிடைக்கிறது.

இவ்வாறு அவதிப்பட்டு டிக்கெட் கொடுக்கும் சமையத்தில் பிரயாணிகள் அவசரமாய் ஸ்டேஷனுக்கு ஓடிவருகிறார்கள். அப்போதும் ஹோட்டல்காரர்களும், கமிஷன்காரர்களும் அவர்களை விடுவதில்லை. டிக்கெட் வாங்கும் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆளெண்ணி டிக்கெட் ரூபாயை வாங்குவதோடு டிக்கெட் ஒன்றுக்கு நான்கணா கமிஷனும் வாங்கிக்கொண்டு, சென்னைக்கோ, நாகப்பட்டினத்திற்கோ டிக்கெட்டுகளை வாங்கி அவர்களிடம் கொடுத்துவிடுவார்கள். டிக்கெட்டுகள் வாங்கியதுபோக மீதிச் சில்லறை கையிலிருந்தால் அதைப் பிரயாணிகளிடம் கொடுக்கவேமாட்டார்கள். அவர்களை வண்டியிலேற்றி வண்டி புறப்படும்வரையில், போலி விசுவாசப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டேயிருந்து, வண்டி புறப்பட்டுக் கொஞ்சம் வேகமாய்ப் போகும்போது, "ஐயோ! சில்லறை கொடுக்க மறந்துவிட்டேனே" என்று, மடியில் கைவைத்தபடியே கொஞ்சதூரம் ஓடி, வண்டியிலிருக்கும் பிரயாணிகளை நோக்கிக் கையை நீட்டுவதுபோல் பாவனை செய்து, கொடுக்கமுடியாமற் போனதுபோல் விசனக்குறிகாட்டி, "அண்ணாச்சி! சில்லறை கொடுக்கவில்லையென்று வருத்தப்படாதீர்கள்; வண்டி புறப்பட்டுவிட்டது; நீங்கள் திரும்பிவரும்போது கொடுத்துவிடுகிறேன்" என்று உபசாரவார்த்தை கூறி நின்றுவிடுவார்கள். அவர்கள் திரும்பிவரும்போது இவர்கள் அந்தச் சில்லறையைக் கொடுப்பதைக் கடவுள்தான் அறிவர். இந்த இடைத்தட்டுக்காரர்கள், டிக்கெட் வாங்குவதிலும், மற்ற விஷயங்களிலும் கொள்ளையடிக்கிறார்களென்று பிரயாணிகள் நினைத்துத் தாங்களே டிக்கெட் வாங்கப்போனாலோ நாள் பத்தானாலும் அவர்களால் அது முடியாது. அங்கே நிற்கும் காவலாளிகள், அவர்களை அங்கு மிங்கும் துரத்தியடிப்பார்கள் ; டிக்கெட் கொடுப்பவரும், பிரயாணிகள் சன்னலில் கையை நீட்டும்போதெல்லாம், "கழுதைகளா!, உபத்திரவப்படுத்துகிறீர்களே" என்று கையை மடித்துக்கொண்டு சன்னலில் நுழைத்த பிரயாணிகளின் கையிற் குத்துவார்கள். அதனால் பிரயாணிகள் படும் கஷ்டத்திற்களவில்லை. தரகுக்காரர்கள் டிக்கெட் வாங்கும்போதுமாத்திரம் பிரயாணச்சீட்டு விற்பவர் நூறு இருநூறு டிக்கெட்டுகளானாலும் முதலில் அவர்களுக்குக் கொடுத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். இதற்குக் காரணம் அவர்க்குரிய காணிக்கை செலுத்திவிடப்படுவதுதான்.

இனி, பிரயாணிகள், புகைவண்டியில் ஏறும்போதும், ஏறிச்செல்லும்போதும் நடக்கும் விநோதங்கள் பலவுள. அவையெல்லாவற்றையும் எழுதமுடியாவிடினும், முக்கியமான சிலவற்றைமாத்திரம் எழுதுவாம்: அவர்கள், கேட்டில் நிற்போரால் ஒழுங்காகவிடப்படுவதில்லை. அவர்கள், ஒருபக்கம் நுழைந்தால் மற்றொருபக்கம் போங்களென்று கேட்டில் நிற்போர் அவர்களைத் துரத்துவார்கள் ; அங்கே சென்றால் வேறொருபக்கம் செல்லுங்களென்று அங்குள்ளவர்கள் தள்ளுவார்கள். இதற்கிடையில் சிலர், இடையிற்போடக்கூடாத சாமான்களையும் நிறையிலிட்டுப்பார்த்து அனாவசியமாகப் பணம் கேட்டு அவர்களைப் படுத்தும்பாடு கொஞ்சமன்று. இத்தனை ஹிம்ஸைக்கடல்களை நீந்தி அந்தப் பிரயாணிகள் பகீரதப் பிரயத்தினத்தின்பேரில் ரெயிலில் போய் ஏறுகிறார்கள். அங்கேதான் அவர்களுக்குச் சௌகரியமுண்டா? முந்தியே ஏறித் தங்களை நாகரீகமுடையவர்களென்று கருதிக்கொண்டிருக்கும் நம்மவருட் சில கோடரிக்காம்பானவர்கள், அவர்களைத் தாழ்ந்தவர்களென்று கருதிக் கீழே தள்ளுகிறார்கள்; அவர்கள் மிகுந்த சண்டை சச்சரவுகளுடன் வண்டிகளுள் நுழைகிறார்கள். பாதிப்பேர் ஏறியுமேறாமலு மிருக்கும்போதே வண்டி புறப்பட்டுவிடுகிறது. குழந்தை வண்டியிலும், தாய் கீழும், புருஷன் வண்டியிலும், மனைவி கீழும், மூட்டைகள் பிளாட்பாரத்திலும், அவற்றிற்குடையவர் வண்டியிலுமிருந்து எல்லோரும் கதறுகிறார்கள். அந்தக் கூச்சலைக் கவனிப்பாரெவருமில்லை. தங்கினவர்கள் அவஸ்தைப்பட்டு அடுத்த வண்டிகளில் குறித்தவிடம்போய்ச் சேர்கிறார்கள். மாயவரம் ஸ்டேஷனில் ஒருசமயம் வண்டியில் கொஞ்சங்கூட இடமில்லாதிருக்கும்போது பெருங்கூட்டமான ஜனங்கள் ஏறப் பிரயத்தனப்பட்டார்கள். ஏறமுடியாமையால் ஒரு பெண்ணைச் சில ஆடவர் தூக்கி வண்டிச் சன்னல்வழியே உள்ளே செலுத்தினார்கள். அவளுடைய பாதி உடம்பு உள்ளும் பாதி உடம்பு வெளியிலுமிருக்கும்போதே வண்டி புறப்பட்டுவிட்டது. அவள் கதறினாள்; கீழே நின்றவர்களும் கத்தினார்கள். இன்னும் பல விநோதங்கள் நடந்தன. இவற்றை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக்கின்றோம்.

இவ்வாறு பிரயாணிகள் ரெயிலேறியும் இருக்கவும் நிற்கவும் இடமின்றிப் படாதபாடெல்லாம் பட்டுப்போகிறார்கள். இவர்கள் இரவு இரண்டு மூன்று மணிக்கு விழுப்புரம் போகும்போதே சென்னைக் கிளப்புக்காரர்களும், தரகுக்காரர்களும் இவர்களை எதிர்கொண்



டழைக்க வந்துவிடுகிறார்கள். அவர்கள் வஞ்ச உறவுகொண்டு இவர்களை அழைத்துப்போய் ஹோட்டல்களில் சேர்க்கிறார்கள். அவ்விடங்களிலும் முன்னே நாம் கூறியபடியே பல அக்கிரமங்கள் நடக்கும். அந்த ஹோட்டல்காரர்களும், தரகுக்காரர்களும், வந்தவர்களிடம் தக்க கமிஷன் கொள்ளையடித்துக்கொண்டு கப்பல் டிக்கெட் வாங்கிக்கொடுத்துப் பிரயாணிகளைக் கப்பலில்கொண்டுபோய்த் தள்ளிவிடுவார்கள். வண்டிக்காரன், மூட்டை தூக்குகிறவன், படகுக்காரன், ஹோட்டல்காரர், தரகுக்காரர் எல்லோரும் கூட்டாளிகள். அதனால் அவர்கள் ஒருவர்க்கொருவர் துணையாய் நின்று பிரயாணிகளிடம் கூலிக்கும் அதற்கும் இதற்குமென ஒன்றுக்குப் பத்தாகப் பணம் பறித்துக் கொடுப்பார்கள். வண்டிக்காரர்களும், கூலிக்காரர்களும், படகுக்காரர்களும் வாடகையோ கூலியோ பிரயாணிகளிடம் பேசுவதொன்று முடிவில் கேட்பதொன்றாயிருக்கும். அவர்கள் ஒன்றுக்குப் பத்தாகக் கேட்பார்கள். அவர்கள் கேட்டபடி கொடாவிட்டால் பிரயாணிகளை வாய்க்கு வந்தபடி பேசித் திட்டுவார்கள். பிரயாணிகள் படகிலேறிக் கப்பலுக்குப் போகும்போது படகுக்காரர்கள், அவர்களைக் கடலில் தள்ளிவிடுவதாகப் பயமுறுத்தியும், வேறுபல துன்பங்களுக்குள்ளாக்கியும் அவர்களிடம் பணம் பறிப்பார்கள். (இப்போது சென்னை முதலிய துறைமுகங்களில் ஜனங்கள் டிக்கெட் வாங்குவதற்கும், கப்பலேறுவதற்கும் போதிய சௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன) எனினும் நாகை முதலிய விடங்களில் இந்த அக்கிரமங்கள் மிகுதியும் நடந்துவருகின்றன ; தூத்துக்குடித் துறைமுகத்தில் சிலோன் ஏற்றுமதி அதிகமாயிருந்தகாலத்தில் நடந்த கொடுமைகள் எண்ணில. ஜனங்களைப் படகிலேற்றிக் கப்பலுக்குக் கொண்டுபோகும்போதே நடுவழியில் படகுக்காரர்கள் பிரயாணிகளிடம் அதிகத் துட்டுக் கொடுக்கவேண்டுமென்று கேட்பார்கள் ; அவர்கள் கொடாவிட்டால் படகையே தண்ணீரில் கவிழ்த்துவிட்டு ஜனங்களை நீரில் மூழ்கிக் கதறச்செய்துகொண்டு, அதிகப்பணம் கொடுத்தால்தான் உங்களைத் தூக்கிப் போட்டில் போடுவோம் என்று சொல்லித் துட்டுக் கொடுப்பதாகப் பிரயாணிகள் வாக்குறுதி செய்தபின் அவர்களைத் தூக்கிப் படகிலேற்றிக்கொண்டு சொன்னபடி அவர்களிடம் துட்டு வாங்கிவிடுவார்கள். யாரேனும் அதிகாரிகள் கண்டு அப்படகுக்காரரை ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டபோதிலும் அவர்கள், 'படகு, தானே கவிழ்ந்துவிட்டது; நாங்களென்னசெய்வோம்?' என்று சமாளித்துக்கொள்வார்கள்.

இவ்வாறெல்லாம் பிரயாணிகள் படகுக்காரர் முதலியவர்களிடத்தில் படாதபாடெல்லாம் பட்டுக் கப்பலேறிய பின்னர் அங்காவது அவர்களுக்குச் சுகமுண்டா? அந்தோ! அங்கேதான் நரக வாதனை. நல்ல சாப்பாடு கிடைப்பதில்லை; குடிக்க நல்ல தண்ணீரும் போதிய அளவு சப்ளை செய்யப்படுவதில்லை. ஒவ்வொருவருக்கும் தலை சுழற்றும்; பித்தமேலிட்டு ஒருவர்மேலொருவர் வாந்தியெடுத்துக்கொண்டு பெரும் பான்மையோர் பிரக்ஞையற்றுக் கிடப்பார்கள். கப்பல் சில்லறை வேலைக்காரர்கள் அவ்வாறு மயங்கிக் கிடப்பவர்களை மனிதர்களென்று நினைக்காமல் சாமான் மூட்டைகளாகவோ கட்டைகளாகவோ நினைத்து அவர்கள் மீது ஏறி நடந்து செல்வார்கள். கப்பலைக்கழுவ வருவோர், எழுந்திருக்க முடியாமல் கிடக்கும் ஜனங்கள்மீது உப்புத்தண்ணீரை அடித்து அவர்களை அலங்கோலப் படுத்துவார்கள். இன்னும் அங்கு வேலைக்காரர் செய்யும் அதிகாரத்தாலும், வேறு பல அக்கிரமங்களாலும் ஜனங்களுக்குண்டாகும் துன்பத்திற்களவில்லை.

இப்படிக் கப்பலிலும் கண்கலக்கப்பட்டு ஜனங்கள் இறங்கு துறைமுகம் போய்ச் சேர்ந்தவுடன், கப்பலேறுங் காலத்தில் எவ்விதத் துன்பங்கள் அவர்களுக்குண்டாயினவோ அவற்றிற்கு மேற்பட்ட கஷ்டங்களே அங்குள்ள பலராலும் உண்டாகின்றன. இங்ஙனம் ஏழைமக்கள் எண்ணத்தொலையாத இடையூறுகளையெல்லாம் அடைந்து முடிவில் தாங்கள் குறிப்பிட்ட இடங்கட்குப் போய்ச் சேருகிறார்கள். சேர்ந்ததும் பினாங்கு முதலிய இடங்களில் ரப்பர் தோட்டங்களிலும், பர்மா முதலிய இடங்களில் நெல்விளை புலங்களிலும் வேலைசெய்து அரும்பாடுபட்டுப் பொருள் தேடுகிறார்கள். சிறிது கைப்பொருள் சேர்ந்ததும், சொந்தவூர் சேர்ந்து சுற்றத்தாருடன் கூடி இன்புற்று வாழலாமென்று திரும்புகிறார்கள். இவர்களுக்கு இப்போதுண்டாகும் கஷ்டங்கள் தாம் விநோதமானவை. "மடியில் கனமில்லாதவனுக்கு வழியிற்பயமில்லை" என்றபடி முன்னே, இவர்கள் சொந்த வூர்களிலிருந்து வரும்பொழுது அதிகக் கையிருப்பில்லாமல் வந்தபடியால் இடைக்கொள்ளைக்காரர்கள் இவர்களை இலேசாகத் துன்பப்படுத்தி விட்டுவிட்டார்கள். இப்பொழுதோ இவர்களிடத்தில் கொஞ்சம் கொஞ்சம் பணம் கையிருப்பிலிருப்பதால், "மடியில் பணமிருந்தால் வழியிற்பயம்" என்பதற்கிணங்க இவர்கள் அஞ்சும்படி இவர்களிடம் பொருள் பறித்தற்கு ஆங்காங்குள்ளவர்கள் அளவற்ற அக்கிரமங்களைச் செய்யத்



தொடங்கிவிடுகிறார்கள். கீழ்நாடுகளிலிருந்து துறைமுகங்களுக்கு வந்து கூலி ஜனங்கள் கப்பலேறும்போது, மூட்டை தூக்கும் கூலிக்காரர்களும், வண்டிக்காரர்களும், படகுக்காரர்களும், காவலாளிகளும் பயமுறுத்தியும், திட்டியும், ஒன்றுக்குப்பத்தாக அவர்களிடம் கூலி முதலியன வாங்கியும் அட்டைகள் இரத்தத்தை உறிஞ்சுவது போல பணத்தை உறிஞ்சிவிடுகிறார்கள். பாவம்! பயந்த கூலி ஜனங்கள் என்னசெய்வார்கள்! அவர்கள் கேட்டவைகளையெல்லாம் அவிழ்த்துக் கொடுத்துவிட்டுப் புலிக்கூட்டத்திற்கஞ்சிச் செடிகளில் ஓடி மறையும் செம்மறியாடுகளைப் போல் விரைந்தோடிக் கப்பலிற் புகுந்து அடங்கிவிடுவார்கள்.

சில தினங்கள் கடலில் கப்பலால் அலைக்கப்பட்டுச் சென்னைத் துறைமுகம் வந்து சேர்வார்கள். கப்பல்வந்தவுடன், ஹோட்டல் காரர்களும், தரகுக்காரர்களும், நெருங்கின உறவினர்போல் அவர்களை வரவேற்பதற்குக் கப்பலுக்கே போய்விடுவார்கள். கூலி ஜனங்கள் கீழ்நாட்டிலிருந்து திரும்பி வருவதால் அதிகப்பணத்துடன் வருவார்களென்றும், அதனால், தங்களுக்கு நல்லவேட்டை கிடைக்குமென்றும் இந்தப் புண்ணியவான்கள் அவர்களை வரவேற்கப் போவார்களேயன்றி உண்மையான விசுவாசத்தால் செல்வதில்லை. இந்த நடிப்புக்காரர்கள் கப்பலுக்குட் புகுந்தவுடன், பிரயாணிகள் தங்களுக்கு அறிமுகமில்லாதவர்களாயிருந்தாலும் ஒவ்வொருவரையும் பார்த்து க்ஷேமம் விசாரித்து, முன் போகுங்காலத்திற் செய்தபடியே மாமன், மைத்துனன், அண்ணன், தம்பி, பாட்டன், சிற்றப்பன், பெரியப்பன் என்று முறை கொண்டாடித் தங்களிடம் சிக்கியவர்களையெல்லாம் திரட்டிக்கொண்டு போய்ச் சாப்பாட்டுக்கடைகளில் சேர்ப்பார்கள். இங்கே நடக்கும் சில அக்கிரமங்கள் மிகக் கவனிக்கத்தக்கவைகள்; கப்பலில் மயங்கிக்கிடக்கும் பிரயாணிகளிடம் போட்டுக்காரர்களும், மூட்டைதூக்கும் கூலிக்காரர்களும், வண்டிக்காரர்களும் வலியப்போய் மூட்டைகளைத் தாங்களே தூக்கிக்கொண்டு, "வாருங்கள்! வாருங்கள்!! நம்முடைய படகிலேறுங்கள்; நம்முடைய வண்டியிலேறுங்கள்; நாங்கள், உங்களை, நீங்கள் இறங்கவேண்டிய ஜாகையிற் கொண்டுபோய்ச் சேர்க்கின்றோம்" என்று அழைப்பார்கள்; பிரயாணிகள், "கூலி என்ன?" என்று கேட்டால், இவர்கள் போராசையற்ற ம்கா உத்தமர்களைப் போல், "அண்ணாத்தை! நீங்கள் கொடுப்பதைக் கொடுங்கள்; உங்களிடமெல்லாம் கூலியா பேசவேண்டும்" என்று சொல்லி

அழைத்துக்கொண்டு போய் அவர்கள் இறங்குமிடத்தில் இறங்கியவுடன் ஏற்பட்ட கூலியைக் கொடுக்கப்போனால், படகுக்காரர், வண்டிக்காரர், மூட்டை தூக்குவோர் முதலியவர்கள் இரண்டணாப் பெறவேண்டியதற்கு இரண்டு மூன்று ரூபா கேட்பார்கள். பிரயாணிகள் கொடாவிட்டாலோ அவர்களைச் சண்டைக்கிழுப்பார்கள்; அதைப் போலீஸ்காரரிடம் தெரிவித்தால் அவர்கள் ஒன்றும் பேசாமல் நழுவிவிடுவார்கள்; தங்களை அன்புடன் அழைத்துச் சென்ற ஹோட்டல்காரரிடம் தெரிவித்தாலோ, அவர்கள், "கொடுத்துத் தொலைத்துவிடுங்கள்" என்று பிரயாணிகளிடம் சொல்லி அந்த அக்கிரமஸ்தர்களுக்கே உதவி செய்வார்கள். ஏனென்றால், அவர்களெல்லோரும் கூட்டுறவாளர்கள். முடிவாகப் பிரயாணிகள், பட்டினி பசியோடு கப்பலில் அவதிப்பட்டு வந்த இளைப்பால் அவர்களோடு வாய்ச்சண்டையிட முடியாமல், அவர்கள் கேட்டதைக் கொடுத்தேதீருவார்கள்.

பின்னர் ஓட்டல்காரர்கள் கொள்ளையும், தரகுக்காரர் கொள்ளையும் முந்திப்பிரயாணிகள் போகுங்காலத்தில் உண்டானவைகளைக் காட்டிலும் பதின்மடங்கதிகமாகவே நடக்கும். பிரயாணிகள் சாப்பாட்டு விஷயத்திலும், சாமான்கள் முதலியன வாங்கும் விஷயத்திலும், இந்த நடுக்கொள்ளைக்காரர்கள் அவர்களை ஏமாற்றி அளவற்ற பொருளைக் கவர்ந்துவிடுவார்கள். அதன்மேல் அவர்களைத் திரட்டி ரெயிலேற்றக் கொண்டுபோகுங்காலத்திலும் முன்னுரைத்தபடியே அங்கிருப்பவர்களுக்கு அவர்களிடமிருந்து பணம்பறித்துக் கொடுத்து நஷ்டத்திற்குள்ளாக்குவார்கள். ஒரு வீசை கனமுள்ள மூட்டைகூட எடையில் போட்டு அதற்கும் அனியாயக்கட்டணம் பிரயாணிகளிடம் வசூலிக்கப்படும். அவர்கள் ரெயிலேறிப் போகும் போதும் பல வழியிலும் அவர்களுடைய பணம் பறந்துகொண்டேயிருக்கும். போய் இறங்கும் மதுரை முதலிய இடங்களிலும் அபாயமில்லாமலில்லை. மேற்கூறியவை போன்ற பலவகை அக்கிரமங்கள் நடப்பதோடு இராக்காலங்களில் இறங்கும் பிரயாணிகள் சிலரை வண்டிக்காரர்கள் ஏற்றிக்கொண்டு போய் ஜனசஞ்சாரமில்லாத விடத்தில் அவர்களுடைய கைப்பொருள்களைப் பறித்துக் கொண்டு ஓடிவிடுகிறார்கள். இன்னும் இவர்கள் விஷயமாக நடக்கும் அக்கிரமங்கள் எண்ணத்தொலையா. ஒவ்வொன்றையும் எடுத்து விவரமாக எழுதுவதென்றால் ஒரு பெரிய புத்தகமாக விரியும். ஆதலின், அவற்றுள் முக்கியமான சிலவற்றை மாத்திரம் இங்கு



விளக்கிக் காட்டினோம். முடிவாகக் கூறுமிடத்து இந்த ஏழைப் பிரயாணிகள், தாங்கள் கடல்தாண்டிக் கஷ்டப்பட்டுத் தேடிய பொருள்களில் இடைக் கொள்ளைக்காரரால் முக்கால் பங்கையிழந்து காற்பங்குடன் ஊர்போய்ச் சேருகிறார்கள். அதனால், சிறிது காலத்திற்குள் மீண்டும் கப்பலேறவேண்டியவர்களாகி விடுகின்றனர்.

அந்தோ! இத்தகைய கஷ்டங்களை யெல்லாம் இந்த ஏழை மக்களுக்கு இழைப்பவர்கள் யார்? நம்மவர்களே செய்கிறார்கள். இனவொற்றுமை யில்லாமல் தங்கள் தங்கள் சுயநயத்தைக் கருதி இந்தியர்களாகிய ஓர் இனத்தார்க்குள்ளேயே சாமர்த்தியமுடையோர் சாமர்த்தியமற்றவர்களைத் துன்புறுத்துகிறார்கள். இந்தப் பிரயாணிகள் படும் பலவகைத் துன்பங்கள் மிகப் பிரிதபிக்கக் கூடியனவாயிருக்கின்றன. இவற்றை எவரேனும் கவனித்து நீக்கினபாடில்லை. அதிகார வர்க்கத்தினர் கவனிக்க வேண்டியவர்களாயிருந்தாலும் அவர்கள் வரையிலும் இக்கொடுங்காரியங்கள் எட்டுவதில்லை. ஆதலின், இனிமேலாவது, அறிஞர்கள், இக்கஷ்டங்களை நிவர்த்திக்கும் விஷயத்தில் கவனஞ்செலுத்தச் செய்யுமாறு எல்லாம்வல்ல பரம்பொருளை இறைஞ்சுகிறோம்.

ஓம் தத் ஸத். ப - ர்.

---

## ஆரிய சித்தாந்தம்.

### இலௌகிகம்-பொருள்.

(தொகுதி 10, 462-ம் பக்கத் தொடர்ச்சி.)

**இலௌகிகம் என்பது உலகசம்பந்தமானது என்று பொருள்தரும். அதாவது உலகவாழ்க்கை இனிது முடிதற் பொருட்டுச் செய்யப்படும் தொழில்களாம். அங்ஙனமாயின் வைதிக நெறியோடு இதற்குச் சம்பந்தம் யாது எனின் நமது இலௌகிகங்களும் வைதிகநெறிக்கு மாறுபடாமலே செய்யப்படவேண்டு மாதலால் வைதிகத்துக்கும் இலௌகிகத்துக்கும் நெருங்கின சம்பந்தமுண்டு. இலௌகிக நெறிதவறாமல் ஒருவன் நடப்பானானால் அவன் சொர்க்காதிபோக உலகங்களைப் பெறுவான் என்று ஸ்மிருதியாதி நூல்கள் கூறுகின்றன. ஆதலால் வைதிகத்துக்கு விரோதமாகாத உலகவாழ்க்கையே இலௌகிகமென்று நூல்கள் கூறுகின்றன. வைதிகத்தால் இலௌகிகமும், இலௌகிகத்தால் வைதிகமும் சிறந்து விளங்கி நற்பயன்தரும். ஆதலால் நமது ஆரியசித்தாந்தங்கூறும் இவ்விரண்டும் சன்மார்க்க சீலர்களால் அனுஷ்டிக்க வேண்டுவது அவசியமாம்.**

இலௌகிகம் அறம் பொருள் இன்பம் என்று மூன்று வகைப்படும். இவற்றை தர்மம், அர்த்தம், காமம், என்று வடநூல்கூறும். இவற்றுள் தர்மம் முன்னரே விரித்துக் கூறப்பட்டது. காமம் என்பதும் ஆண்டுக் கூறப்பட்டது. பொருள் என்பதுதான் கூறுதொழிந்து நின்றது. ஆதலால் அதனைச் சிறிது கூறுவோம்:

" அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு "

என்பதனால் உலகானுபவத்துக்குப் பொருள் இன்றியமையாததென்று தேவர் விளக்கியருளினர். அன்றியும் பொருளில்லையானால் தர்மவிருத்தியும் எய்தாதாம். இன்பமும் கிட்டுவது அருமை. அறத்துக்கும் இன்பத்துக்கும் பொருளே மூலமாம். அறமின்றிப் பொருள்கிட்டாது. பொருளின்றி அறம் விருத்தியாகாது. பொருளால் அறம் செய்யப்படுகின்றது. அவ்வறம் இம்மைமறுமைப் பயன்களை அளிக்கின்றது. ஆதலால் அறத்துக்கும் இன்பத்துக்கும் காரணமான பொருளை ஏராளமாக ஈட்டுவதே தகுதியாம். பொருளின்றித் தேவபிதிர்க் காரியங்களும் நடைபெறாவாம். இப்போது கூறியவற்றால் வைதிகத்துக்கும் இலௌகிகத்துக்கும் அதிக சம்பந்த முண்டென்பது புலப்படும். இத்தகைய சிறப்புவாய்ந்த பொருளையீட்டு மார்க்கமும் சிறிதுகூறுவாம்:

அறநெறிக்கு மாறுபடாமல் ஈட்டும்பொருளே இம்மைமறுமைப்பயன்களைத்தரும். பாபத்தால் வந்தபொருள் உலகத்தில் துன்பத்தையும் மறுமையில் நரகத்தையும் தரும். ஆதலால் தர்மநெறிதவறாமலே பொருள்சேகரிக்கவேண்டும். அந்தப்பொருள் உண்டாகும் மார்க்கங்களை ஐந்துவகையில் அடக்கிநூல்கள் கூறுகின்றன. அவையாவன: வித்தை, கிருஷி, வர்த்தகம், சிற்பம், சேவகாவிருத்தி என்பனவாம்.

இவற்றுள் வித்தை என்பது—"எண்ணெழுத்திகழேல்" என்றும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றும் அன்னையாரால் புகழ்ந்து கூறப்பட்ட கல்வியாம். இக்கல்வியில் இலக்கண இலக்கியங்களும் கணிதமும் அடங்கும். இவற்றைப் பிறருக்குப் போதித்துச் சம்பாதிப்பது பாபமற்றதொழிலாம். இதனால் சம்பாதிக்கப்படும் பொருள் இம்மைமறுமைப்பயன்களைக் கொடுத்து அதன் மூலமாக உலக ஆசையின் வேரையறுத்து மோட்சத்தையும் கொடுக்கும். அன்றியும் இவற்றைக் கற்றுக் கொள்பவர்களும் நற்கதிபெறுவார்கள். இந்தக்கல்வி அஞ்ஞானத்தை ஒழிப்பதற்கும் மெய்ஞ்ஞானத்தைப் பெறுவதற்கும் காரணமாய் நிற்றலால் இது கற்பவர்களையும், கற்றுக்கொடுப்பவர்களையும் நற்கதி பெறுவிக்கும். ஆதலால் வித்தியாதானத்தொழிலை மிகவும் விசேஷமென்று நூல்கள் புகழ்ந்து கூறுகின்றன. "எண்" என்றதில் கணிதம், ஜோதிஷம், பூகோள, ககோள சாஸ்திரங்களும் அடங்கும். இதைக் கற்பதனால் பல அண்டங்களின் இயல்பும் அவற்றை அடையும் மார்க்கமும் உணரப்படும். இதில் நவக்கிரகங்களி



னியல்பும் அவற்றுக்குரிய மந்திர யந்திரங்களும் பீஜாட்சரங்களும் விளக்கப்படுதலால் இந்தச் சாஸ்திரம் சிலாக்கியமுடைய தென்பதற்குத் தடையில்லை. "எழுத்து" என்ற இலக்கண விலக்கியங்களில் அறநூல், பொருணூல், இன்பநூல், வீட்டுநூல்கள் என்பனவெல்லாம் அடங்குதலால் இதனைக் கற்பவர்கள் இகபரபோகங்களையும் வீட்டையும் பெறுவார்கள். ஆதலால் இது சர்வசிலாக்கியமுடைய தென்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபனையிராது. இதுபற்றியே,

" எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த மேலோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும் "

என்று கூறினர். ஒருவன் இத்தகைய சிறப்புவாய்ந்த கல்வியில் வஞ்சனையின்றித் தனக்குத் தெரிந்ததைப் பிறர்க்கு உபதேசித்துப்பெறும் பொருள் பாபமற்றது. ஆதலால் இந்தத் தொழிலைச் செய்து ஜீவிப்பதும் இதைக் கொண்டு தானதர்மங்களைச் செய்வதும் நற்கதிபெறுவதற்கு ஏதுவாம் என்பதில் ஐயமில்லை. இது சிறந்தமார்க்கமாம். ஆயினும் இது பூர்வபுண்ணிய முடையவர்க்கே யன்றி எல்லாராலும் செய்வது கூடாது.

இரண்டாவது கிருஷி.—கிருஷி என்பது பூமியை உழுது பண்படுத்திப் பலவகைத் தானியங்களைப் பயிரிட்டு ஜீவிப்பதாம். இத்தொழில்தனக்கேயன்றித் தன் தேசத்துப் பிரஜைகளுக்கும் அந்நியநாட்டாருக்கும் பயன்தருவதால் "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு." என்று அன்னையாரால் புகழ்ந்து கூறப்பட்டது. அவரே, "பூமிதிருத்தியுண்" "நெற்பயிர் விளை" "தொழுதூண் சுவையினுழுதூணினிது" என்றும் கிருஷித்தொழிலை அடிக்கடி புகழ்ந்தார். யாதுகாரணம் பற்றி எனின், ஏனையதொழில்களுக்குப் பற்பல இடையூறுகள் உளவாம்; கிருஷித்தொழிலோ முயற்சிக்குத் தக்கபயனைக்கொடுத்தே தீரும். அன்றியும் பிறதொழில் செய்வார் அந்நிலையிலுயர்ந்தோருடைய தயவையும் தாட்சண்யத்தையும் எதிர்பார்க்க வேண்டும். அதனால் சுதந்திரஹானி யுண்டாகும். சுதந்திரமில்லாதவன் மனிதனாகமாட்டான். அதனால் வெகுகுறைவு நேரிடும். கிருஷித்தொழில் உடையான் சுதந்தரனாய், ஒருவரையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. மற்றவர்கள் எல்லாரும் அவன் கையையே எதிர்பார்க்க வேண்டியவர்களாவார்கள். சுதந்தரமுடைமை மோட்சானந்தத்தை ஒக்கும். ஆதலால் கிருஷித்தொழில் மிகவும் சிறந்ததேயாம். ஆயினும் நிலத்தை உழுவதனாலும், எருமுதலிய இடுவதனாலும், பயிர்க்குத் தண்ணீர் பாய்ச்சுவதனாலும் அநேகஜந்துக்கள் மடியும். அதனால் அஞ்ஞான கிருதபாபம் (அறியாமற் செய்தபாபம்) உண்டாகும். தானியத்தைக் களத்தில் அடிப்பதனாலும் இந்தப்பாபம் உண்டாகும். இந்தப்பாபங்கள் களதானத்தினாலும், ஏழைகளுக்குப் பிட்சையிடுவதனா

லும், அதிதியாராதனையாலும் நிவிருத்தியாகும். தேவபிதிர்க்களை யாராதிப்பதனால் சகலபாபங்களும் தீரும். இவ்வாறு பயிரிட்டுத் தன்கடமையைச் செய்து ஜீவிப்பவன் இகலோக பரலோக மிரண்டிலும் பெருமை பெறுவான். ஆதலால் வித்தியாதானத்துக்கு அடுத்த உத்தமமான சிறந்த தொழில் கிருஷி என்று புகழப்படும். இத்தொழிலால் வரும்பயனும் உத்தமமேயாம்.

மூன்றாவது வர்த்தகம்—இது வாணிபம் வியாபாரம் என்கிற பெயர்களையும் பெறும். இத்தொழிலால் ஏராளமாகப் பொருள் சம்பாதிக்கலாம். ஆயினும் இத்தொழிலாளர் பொய்பேசியே தீரவேண்டும். அன்றியும் முதலாகப் பொருளைவைத்து அதனால் பற்பல பண்டங்களையும் வாங்கி மேலே இலாபம்வைத்து விற்றுப் பொருள் சம்பாதிக்கவேண்டும். பண்டங்களின் விலை காலந்தோறும் வேறுபடுதலால் சிலசமையம் நஷ்டமும் நேரிடும். புத்தியுள்ள வியாபாரிகள் அதனைச் சமப்படுத்திக் கொள்ளவேண்டும். சிற்சில சமையங்களில் முதலையே யிழந்துவிடநேரிடும். இதனால் பலகஷ்டங்கள் உண்டாகும். வெயில், மழை, குளிர் முதலியவற்றைப் பாராட்டக் கூடாது. பாராட்டினால் சரியான இலாபம்கிடைக்காது. சில சமையங்களில் உணவுகொள்ளவும் நேரமில்லாமற்போகும். இதனால் வியாபாரி சுதந்தரனேயானாலும் சுதந்தரம்போலவே கஷ்டப்படநேரிடும். இவ்விடையூறுகணீங்கித் தெய்வானுகூலத்தால் வாணிபம்சரியாக நடந்தேறினால் வர்த்தகமும் சிறந்ததொழிலேயாம். இதனால்வரும் பாபங்கள் அதிதிபூஜையாலும்,, தேவபிதிர் ஆராதனையாலும், தானதர்மங்களாலும் தீரும். பொருளை வட்டிக்குக்கொடுத்துச் சம்பாதிப்பதும் ஒரு தொழிலாம். இது வாணிபம் செய்யும் சக்தியில்லாதவருக்கே சிறந்தது. ஆனாலும் இத்தொழிலை நூல்கள் மிகுதியும் இகழ்கின்றன. கற்றுணர்ந்த பெரியோர்களும் நிந்திக்கின்றார்கள். இத்தொழில் நரகத்தையும் தரும் என்பது நூல்களின் கருத்து. ஆதலால் இதை ஒழித்துப் பொருள் முதல்வைத்துப் பண்டங்களைக் கொண்டு இலாபத்துக்கு விற்று ஜீவிக்கும் வியாபாரம் சிறந்ததொழிலாம்.

நாலாவது சிற்பம்—இதில் கட்டிடம் அமைத்தல், ஆலயம்செய்தல், விக்கிரகம் வார்த்தல், சித்திரமெழுதல், சித்திரப் பதுமைகள் செய்தல், சூத்திரங்கள் செய்தல், ஆபரணவேலைகளும் மரவேலைகளும் புரிதல் ஆகிய எல்லாம் அடங்கும். இத்தொழிலால் ஜீவிப்பது நல்லது. ஆயினும் இத்தொழிலாளர்களுக்குச சிலசமையம் வேலை கிடையாமற்போகும்; செய்தபொருள்களை ஈனக்கிரயத்துக்கு விற்கும்படியும் நேரிடும்; சிலகாலம்தொழிலேயில்லாம லிருக்கவும் சம்பவிக்கும். இத்தொழில் நான்காவதாக நியமிக்கப்பட்டது. சிலசமையம் இத்தொழிலில் திரண்டதிரவியம் கிடைப்பதுமுண்டு. இத்தொழிலாலும் ஜீவிக்கலாம்.

ஐந்தாவது சேவகாவிருத்தி—அதாவது உத்தியோகம் செய்தல். உத்தியோகத்தில் பொருள் நன்றாகச் சம்பாதிக்கவும் கூடுமானாலும், உத்தியோ



கஞ் செய்பவன் முற்றும் சுதந்தரமில்லாதவனே யாவான். சுதந்தரஹீனமுடைமை நரகவேதனையை ஒக்கும். இதனை "சுவானவிருத்தி" என்று ஸ்மிருதிகள் இகழும். சுவானவிருத்தி என்றால் நாய்த்தொழில் என்பது பொருள். நாயானது எஜமானனுடைய மனம்கோணாமல் நடந்து அவனிடம் சோற்றை யுண்டுமகிழும். அதுபோலச் சேவகாவிருத்தியி லிருப்பவனும் தன் எஜமானனுடைய சமையமறிந்து, அவன் தயவுக்குக் காத்திருந்து ஊழியம்செய்து ஜீவிக்கவேண்டும். ஆதலால் மாதத்துக்கு ஐயாயிரரூபா சம்பளம் பெறுவதானாலும் அது இழிவானதே. சேவகனுக்கு நல்லநாள் விசேஷநாள் கிடையாது. அவன் தன் குடும்பத்துக்கு அவசியமான காரியத்தை நினைத்த உடனே முடிக்கமுடியாது; நேரம்தவறாமல் செல்லவேண்டும்; அன்றன்று செய்யவேண்டிய வேலையைச் செய்துவிட்டே வீடுவரவேண்டும். தாய்தகப்பன் பெண்டாட்டி பிள்ளைகள் வியாதியினால் கஷ்டப்படும்போது அவர்களைப் பராமரிக்கவும் அவனுக்கு நேரமிராது. ஆதலால் சுவானவிருத்தியாகிய உத்தியோகத்தால் ஜீவிப்பது நன்மார்க்கமாகாது. அவன் தேவ ஆராதனையையும் அலட்சியம் செய்யநேரிடும். ஆதலால் சேவகாவிருத்தி ஈனமுடையது. ஆயினும் எவ்வகையிலாவது பொருள் சம்பாதித்துக் குடும்பபோஷணை செய்யவேண்டும். இத்தொழில் சுதந்தரமற்றதேயன்றிப் பாபத்தொழிலல்ல. ஆயினும் எஜமானனது தயவைப் பெறுவதற்காகப் பொய் பேசுதலும், பிறர்க்குத் தீங்கிழைத்தலும் ஆகியபாபச்செய்கைகள் செய்யநேரிடும். இத்தொழிலால் பொறாமை முதலிய துர்க்குணங்க ளுண்டாகும். இந்தக் குற்றங்கள் நேரிடாமல் தன் தொழிலை வஞ்சனையின்றிச் செய்து சன்மார்க்க நெறிகடவாமல் நடந்தால் அவன்பொருளும் அறமியற்றுதற் குரியதாய் நற்பயனைத்தரும். ஏழைகளுக்குப் பிட்சையிடுதல், அதிதிகளை உபசரித்தல், தேவபூஜைசெய்தல் இவற்றால் பாபம் ஒழியும். தன்வரும்படியில் நாலில் ஒருபாகம் தர்மத்தில் செலவழிய வேண்டும்.

கூறிவந்த இத்தொழில்களில் தன் சக்திக்குத் தக்கதொன்றைக் கைப்பற்றி நடந்து பொருள் தேடவேண்டும். தன்குலத்துப் பெரியோர் எந்தத் தொழில்களைப் பரம்பரையாகச்செய்து வந்தார்களோ அந்தத் தொழில்களையே செய்வது மிகவும் உத்தமம். "உத்தமம் குலவித்யானாம் மத்திமம் பிதிரார்ஜிதம், அதமம்பிராதுர் வித்தஞ்ச ஸ்திரீவித்தம் அதமாதமம்." என்றதனால் தன்குலவித்தையால் சம்பாதிப்பதே உத்தமமாம். எவ்வகையிலாவது பொருளைச் சம்பாதித்து இகபரசாதகமான தர்மகர்மங்களைச்செய்யவேண்டும் என்பது நூல்களின் கருத்து. இப்பொருளீட்டல் என்பதை விரித்து எழுதினால் இது மிகவளருமாதலால் சுருக்கமாகவே எழுதப்பட்டது. இதைக் கொண்டு விரிவாய் உணர்ந்து கொள்வது எளிதாம்.

இலௌகிகம் - பொருள் - முற்றிற்று.

**சிவானந்தசாகர யோகீஸ்வரர்.**

## நாலடியார் வசனம்

(தொகுதி 10 - 455-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 21-ம் அதிகாரம் - சுற்றந்தழால்.

கருப்பந் தரித்திருக்கிறதினால் உண்டாகும் நோயும், அதைச் சுமக்குந் துன்பமும், பிரசவிக்குங் காலத்தில் நேரிடும் கஷ்டமும் (ஆகிய எல்லாத் துன்பங்களையும்) மடியில் பிள்ளையைக் கண்டவுடனே தாயானவள் மறந்து விடுவதுபோல, (ஒருவன்) க்ஷேமவிசாரணை செய்யுந் தன்மையுள்ள தனது உறவினரைக் கண்டவளவில் தளர்ச்சியால் (அவன்) அடைந்த துன்பம் முழுதும் நீங்கும். (1)

(சூரியனது) வெயில் நெருங்கிய (கோடை) காலத்தில், தன்னைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் (அவ்வெயிலைத்தான் தாங்கிக்கொண்டு) (ஒரே சமமாக) நிழலைத் தரும் மரத்தைப்போல, (யாவரையும்) ஒரு சமமாகக் காத்து, பழுத்துள்ள விருட்சம்போலப் பலரும் பயனை அனுபவிக்கும்படி, தான் வருத்தமடைந்து வாழ்வதே சிறந்த ஆண்மகனுக்குக் கடமையாம். ()

வரிசை வரிசையாகவுள்ள மலைகள் பொருந்திய நாட்டையுடைய பாண்டியனே! மேலும் மேலும் (அதிகமாக) வலிய காய்கள் பற்பலவாகக் காய்த்தாலும் தன் காய்களைச் சுமக்கமாட்டாத கொம்புகளில்லை. (அது போல) பெரியோர்கள் தம்மைச் சேர்ந்தோரைப் பாதுகாக்கமாட்டோம் என்று சொல்லமாட்டார்கள். (3)

உலகமறியும்படி முழுமையும் கலந்தாலும் கீழ்மக்களுடைய சிநேகமானது நிலைபெற்றிராமல் சில தினமே யிருக்கும். மேன்மக்கள் சிநேகமானது, (தம் தம் வர்ணாச்சிரம) நிலைகளினின்று மாறுபடாமல் (ஒரே நிலையில்) நிற்கின்ற பெரியோர்கள் (முத்தி) நெறியை யடைய உறுதியாக (யோகமார்க்கத்தில்) நிற்கின்ற அத்தன்மையைப் போன்றது. (நெடுங்காலம் அழியாமலிருக்கும் என்றபடி.) (4)

(இவர்) நல்லவர் - (இவர்) தீயவர் - (இவர்) உறவினர் - (இவர்) அன்னியர் என்று சொல்லும் சொல் சிறிதும் இல்லாதவர்களா யிருக்குந் தன்மையால் தம்மைச் சேர்ந்து (துன்பத்தால்) தளர்கிற மனிதர்களுடைய துன்பங்களை நீக்குபவர்களே எல்லோரிடத்திலும் மேன்மக்களாகுந் தகுதியுள்ளவர்கள். (5)

பொன்னால் செய்யப்பட்ட பாத்திரத்தில் புலியின் நகம் போன்ற (வெண்மையும் கூர்மையுமான) சிறந்த சோற்றைச் சர்க்கரையோடும் பாலோடும் உறவினராகப் பொருந்ாதவர் கையினிடத்து உண்பதைப் பார்க்கிலும், தன் உயிர்போன்ற உறவினரிடத்தில் உப்பில்லாத புல்லரிசிக் கூழை (மரக்கலம் முதலிய) எந்தக் கலத்திலாயினும் உண்பது இன்பமுடையதாம். (6)

தமது பகைவர் வீட்டில் காலத்தில் உபகாரமாக விருப்பந்தரும் பொரிக்கறியோடு கூடிய சோற்றைப் பெற்றாலும் (அது) வேம்புக்கொப்



பாகும். பிற்பகற்பொழுதிலே (அகாலத்திலே) இலைக் கறிச் சோற்றை யிட்டாலும் உறவினரானவரது வீட்டில் உண்ணலே இன்பமாம். (7)

(கொல்லனது) சம்மட்டிபோல வெறுப்பில்லாமல் (ஓயாமல்) தினந் தோறும் அடித்து உண்டாலும் அன்புடைய உறவினரல்லாதவர்கள் துன்ப காலத்தில் (அக்கொல்லனது) குறட்டைப்போல கைவிட்டுவிடுவர். அன்புடைய உறவினரென்று சொல்லப்படுவோர் துன்பம் நேர்ந்த காலத்தில் உலையாணிக்கோல் (தானும் நெருப்பில் விழுந்து வருந்துவது)போல, கூடவே துன்பமாகிய நெருப்பில் விழுவார்கள். (8)

நல்ல வாசனை பொருந்திய குளிர்ந்த (மலர்) மாலையை யுடையவனே! இனத்தார்க்கு இனத்தார் சாகும் வரையிலும் (ஒருவர்க்கொருவர்) இன்பத்தில் இன்பமடைந்தும் துன்பத்தில் துன்பமடைந்தும் நடந்துகொள்ளாவிட்டால் உயிரொழிந்த பிறகு மறு வுலகத்திலும் செய்யத்தக்க ஒருவிதக் கடனுண்டோ? (இல்லை) (9)

தம்மிடத்தில் அன்பில்லாதவர்கள் வீட்டில் (மனவொற்றுமை யில்லாமையால்) வேறுபட்டிருந்து உண்ணும் பூனைக்கண் போலும் நிறமுடைய விருப்பந்தரும் பொரிக்கறி போசனம் வேம்புக்கொப்பாகும். தன்மேல் ஆசையுடைய தன்னை யொத்தவர்கள் வீட்டில் தெளிந்த நீரையுடைய குளிர்ந்த புல்லரிசிக் கூழானது உடம்பிற்கொத்த அமுதமாகும். (10)

### 22-ம் அதிகாரம் - நட்பாராய்தல்.

(சிறந்த குணமுடைய சிநேகிதரை இன்னாரென்று ஆராய்ந்தறிதல்)

(நூல்களின்) உட்பொருளை அறிந்து கற்றறிந்தவர்களுடைய சிநேகமானது எக்காலத்தும் கரும்பை நுனிக்குருத்திலிருந்து (அடிவரையில்) கடித்துத் தின்றாற்போலும்; (வர வர இனிமை தரும் என்றபடி). கல்வி மதுரமில்லாதவர்களுடைய சிநேகமானது எப்பொழுதும் (கரும்பை) குருத்திற்கு எதிரே செல்லும்படி (அடியிலிருந்து நுனிவரையில்) தின்றாற் போன்ற தன்மையை யுடையது. (வரவர இனிமை யில்லாமலிருக்கும் என்றபடி.) (அதி : 14 : பாட்டு : 8. அதி: 17 : பாட்டு : 6. இவற்றின் பொருளையுமிதனோடு ஒப்பிடுக.) (1)

அழகிய நல்ல நிறமுள்ள அருவிநீரானது விழ (அதனால்) பறவைகள் ஓடுதற்கிடமான அழகிய மலைகள் பொருந்திய நாட்டையுடைய பாண்டியனே! (ஒருவரது) நற்குடிப் பிறப்பைப் பார்த்து (உயர்வாகிய குடியிற் பிறந்தவர்) இடையிலே தமது குணத்தினின்றும் மாறுபடார் என்பதாகிய ஒரு சார்பை (சிநேகிப்பதற்கு ஒரு நல்ல காரணமாகக்) கொண்டதே யல்லாமல் (ஒருவருடைய) மனநிலை (ஒருவரால் உள் நுழைந்து) அறியப்பட்டதென்பதொரு தன்மையதல்ல. (இவர் நற்குடியிற் பிறந்தவரா யிருத்தலால் நல்லொழுக்கத்தினின்றும் தவறாரென்று சிநேகிப்பதே யல்லாமல் மனநிலை யறிந்து சிநேகிக்க முடியாது என்பது கருத்து.) (2)

யானையைப் போன்றவர்களுடைய சிநேகத்தைவிட்டு (நன்றியறியுந் தன்மையுள்ள) நாய் போன்றவர்களுடைய சிநேகத்தைச் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். (ஏனெனில்) யானையானது (தனக்கு இரை தருவோனென்பதை) நன்றாயறிந்தும் பாகனையே கொன்றுவிடும். நாயானது (தனது) எஜமான் எறிந்த வேலானது உடம்பில் தைத்துக்கொண் டிருக்கும் பொழுதும் (அவனைக் கண்டு) வாலை யாட்டும். (3)

எந்நாளும் அருகிலிருந்தாலும் மனப்பொருத்த மில்லாருடன் அறிஞர் சிலநாளும் கூடியிரார். தம் மனத்தில் அன்பால் கஷ்டப்பட்டவர்களுடனே கொண்ட சிநேகத்தை (அவர்கள்) பலநாளும் நீங்கி யிருந்தாரென்றெண்ணிக் கைவிடுவதுண்டோ? (இல்லை) (பலநாளும் பழகினாலும் மனப்பொருத்தமில்லாச் சிநேகம் பொருந்தியிராது. பல காலம் பிரிந்திருந்தாலும் மனம் பொருந்திய நட்பு நீங்காது என்றபடி.) "புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் — நட்பாங்கிழமை தரும்" என்னும் குறளின் பொருளையுடையது இச்செய்யுள். (4)

மரக்கிளைகளிலுண்டாகிற மலர்போல, மலர்ந்து பின்பு (அம்மலர்ச்சி) குவியாமல் (முன் ஒருவரோடொருவர்) விருப்பங்கொண்டதே, விருப்பமாயிருப்பதாகிய சிநேக தர்மத்தைக் காத்ததாகும். தோண்டப்பட்ட (குளம் முதலிய) நீர் நிலைகளிலுண்டாகும் மலர்போல பின்பு (அம்மலர்ச்சி ஒழிந்து முகம்) சுருங்குபவர்களை (சிநேகம் மாறுபவர்களை) விரும்புபவர்களும் சிநேகிப்பவர்களும் இல்லை.

(மரக்கிளைகளிற் புஷ்பிக்கும் பூவானது மறுபடி குவிவதில்லை. அது போல, என்றும் முகஞ் சுருங்காதவர்களே சிநேகிக்க தக்கவராவர். நீர்ப்பூக்கள் மலர்ந்தவாறிராமல் மறுபடியும் குவிந்துவிடுந் தன்மை யுடையவை. அவ்வாறு முகமலர்ச்சி மாறுந்தன்மை யுடையோர் உத்தம சிநேகராகார் என்பது இதன் கருத்தாம்.) (5)

கடைப்பட்டவர்கள் சிநேகத்தில் பாக்குமரத்தைப்போன் றிருப்பர்; மற்றை மத்திமர் தென்னமரத்தை யொத்திருப்பர்; முதல்தரமானவர்களாகிய பழமை என்னும் பெருங் குணத்தையுடைய மேன்மக்களது சிநேகமானது நினைத்தற்கும் அருமையான சிறப்பினையுடைய பனைமரத்தை யொத்து நட்ட அந்தக் காலத்தில் விரும்பி நட்ட தன்மையதே.

(பாக்குமரம் இடைவிடாமல் போஷித்து வந்தாலே பயன் தரும். தென்னை சிலகாலம் தவறினாலும் சிலகாலம் போஷித்து வந்தால் பயன் தரும். பனையை நட்டுவிட்டால் போதும்; பிறகு யாதொரு போஷணையையும் வேண்டாமலே நல்ல பலன் தரும். அவ்வாறே எப்பொழுதும் கொடுத்துக்கொண்டு வந்தால் அதமர்கள் சிநேகமும், ஒருசமய மில்லாவிடினும் ஒருசமயம் (அடிக்கடி) கொடுத்துவந்தால் மத்திமர்கள் சிநேகமும் நிலைக்கும். உத்தமர்களுடன் சிநேகிப்பதுதான் வேண்டுவது. பின்பு யாதொன்றும் தராவிட்டாலும் சிநேகம் என்றும் நிலைத்து நற்பயனளிக்கும் என்பது அறியத்தக்கது.) (6)



அரிசி கழுவின நீரில் வெந்த பசுமையான இலைக்கறியாகிலும் சிறந்த அன்புடையதாகச் சிநேகரிடத்து வாங்கி உண்டால் (அது) அமுதத்திற்கொப்பாகும். சிறந்த தாளித்த கறியும் துவையலும் நிறைந்த வெண்சோறாயினும் நட்பில்லார் கையில் வாங்கி யுண்ணல் எட்டிக் காய்க்கு ஒப்பாகும். (7)

நாயின் காலிலுள்ள சிறு விரல்களைப்போல மிகவும் அருகில் நெருங்கியுள்ளவரானாலும் ஈயின் காலளவாகிலும் (மிகச் சிறியதாயினும்) உதவி செய்யாதவர்களுடைய சிநேகத்தால் யாது பயன்? கழனியை விளைவிக்கும் நீர்வாய்க்காலை ஒத்தவர்களுடைய நட்பைத் தூரத்திலிருந்தாலும் போய் அடைதல் வேண்டும். (8)

தெளிவான அறிவில்லாதவர்களுடன் சிநேகம் செய்வதைவிடப் பகை நல்லது; எந்த உபாயத்தாலும் தீராமல் நீடித்து வருகின்ற நோயைக்காட்டிலும் மரணம் நல்லது; (ஒருவனது மனம்) புண்படும்படியாக இகழ்தலைப் பார்க்கிலும் (அவனைக்) கொல்லுதல் நல்லது; இல்லாதவற்றை யெல்லாம் சொல்லி (ஒருவனைப்) புகழ்வதைவிட (அவனைத்) தூஷிப்பது நல்லது. (9)

பலருடனும் சேர்ந்து பல நாளும் கலந்து (இருவர் குணமும்) ஒத்து நன்கு மதிக்கும் பொருளாகத் தக்கவர்களையே சிநேகஞ்செய்துகொள்ளல் வேண்டும். (ஏனெனில்) ஒருவரைச் சிநேகித்துப் பின்பு (அவர் குணம் பிடிக்கவில்லை யென்று) அவரை விட்டுப் பிரிதல், கடித்துப் பிராணனை ஒழிக்கின்ற பாம்போடு செய்துகொண்ட சிநேகத்தைவிட (அதிக) துன்பந் தருவதாம். (10)

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## மாதர் நீதி மஞ்சரி.

(10-வது தொகுதி 424-ம் பக்கத் தொடர்ச்சி.)

சந்திரமதி:—இப்புண்ணியவதியின் புனிதமான சரித்திரத்தை யறியாதவர் ஒருவருமிரார். இம் மங்கையர்க்கரசியார் மதிதய மன்னனது மாண்புடைமகள். அயோத்தியை யாண்ட அரிச்சந்திர வள்ளலின் அருமைப் பத்தினி. கற்பு முதலிய நற்குண நற்செய்கைகளிற் சிறந்த நாரீமணி.

விசுவாமித்திரரது சூழ்ச்சியால் தம் காதலர் சொல்லொணாத் துன்பங்களை யடைய நேர்ந்தபோது தாமும் அவருடனிருந்து அவ் விடுக்கண்களை யனுபவித்தது மன்றி, தக்க சமயங்களில் வேண்டிய ஆலோசனைகள் கூறி உதவிசெய்து ஊன்றுகோல்போ லிருந்தார். தம்கணவன் கடனாளியாகிக் காசிக்குச் சென்றபொழுது உடன்சென்றார். காட்டில் குறுக்கிட்ட நெருப்பாற்றைத் தங்கற்பின் மேன்மையால் கடந்தார். கடன் தீர்க்கும் வகையறியாமல் மதிகலங்கி நின்ற கணவனைத் தேற்றித் தம்மைக் கடைவீதியில் விற்கச்செய்து, வேதியனுக் கடிமையாகித் தம் மைந்தனுடன் அவன் வீட்டையடைந்து, சாணந்தெளித்தார்; மெழுகினார்; கோலமிட்டார்; சமையல் பாத்திரங்களைத் துலக்கித்தந்தார்; சாணமுருட்டி முட்[illegible]டினார்; செங்காந்தள் மலர்போன்ற கைகள் கன்றும்படி உலக்கை கைப்பிடித்து நெல்லைக் குற்றினார்; தண்ணீர்க் குடத்தைத் தலை[illegible]ார்; இம்மட்டோ? அவர்செய்த அடிமைத் தொழில்கள் அனந்தம். இவ்வளவிற்கும் தம் விதியை நொந்த தன்றிப் பதியை நொந்தறியார். சந்தனக் கட்



187421

டையைத் தேய்க்கத்தேய்க்க வாசனை மிகுவதுபோல, துன்பங்க ளதிகரிக்குந்தோறும் அவரது கற்பும் சத்தியமும் பதிபக்தியும் அதிகரித்தனவேயன்றிச் சிறிதும் குறைவுபட்டில.

அருமைமைந்தன் அரணியத்தில் அரவால்கடியுண்டு ஆவிசோர்ந்தான் என்பதை யறிந்து, இருள் மிகுந்த இடையிரவில் எங்குந் தேடிச்சென்று கண்டெடுத்து ஈமம்புகுந்தார். அங்கே கொழுநன் மயானக்காவலனாயிருத்தலைக்கண்டார்; கதறினார். அவன் சொற்படி மைந்தனை யெரிக்கக் காசுந் துண்டும் பெறும் பொருட்டு வேதியர் வீட்டை நாடிச்சென்றார். செல்லும் வழியில் காலிற்பட்ட குழந்தை யொன்றைக் கையிலேந்தித் தன் மகனோ வென்று கூர்ந்து பார்க்கையில் ஊர்க்காவலர் காசிராஜன் மகனாகிய அக்குழந்தையைக் கொன்றவள் இவளேயென்று பிடித்துக் கொண்டுபோய் அரசனிடம்விட, அவன் அவ்வுத்தமியை வெட்டிவிடும்படி உத்தரவிட்டான். அத் தண்டனையை நிறைவேற்ற அரிச்சந்திரனே வந்தான். தன் கணவன் கையில் இறக்கநேர்ந்ததை யறிந்த அவ்வம்மையார் அளவிலா ஆனந்தங் கொண்டு ஆளனைப்பார்த்து "அண்ணலே! அடியாளை வெட்ட நேர்ந்ததற்காக மனங்கவல வேண்டா; 'தலைக்குமிஞ்சின ஆக்கினையில்லை' யென்றபடி, இதைவிட அதிகமான துன்பம் நேரிடப்போவதில்லை. நம்கஷ்டத்தின் கடைசிநாள் இதுவே; மனஞ்சோராதீர்; அற்பவாழ்வைச் சதமென்றெண்ணிச் சத்தியத்தை யிழக்கலாகாது" என்று பலவித உறுதிவார்த்தைகளைக் கூறித் தேற்றினார்.

அவரது நெஞ்சத் துணிவைக் கண்ட அரிச்சந்திரன் அகமகிழ்ந்து "கற்புக்கரசி! உன்னாலன்றோ என் தவம் பலித்தது. உன்னைப் பத்தினியாக வடைந்த எனக்கென்ன குறையுண்டாம்? இம்மைப்பயனும் மறுமைப் பயனும் எளிதில் எய்துமே," எனப் பலவாறு புகழ்ந்து வெட்ட, வாளை யோங்கினன். உடனே பரமசிவன் எழுந்தருளிக் காட்சியளித்துப் பழைய படி பாலனையும் பாரையும் அளித்து ஆசிகூறிச் சென்றார். அதன்படி அம்மையார் அயோத்தியை யடைந்து அரசாண்டு ஆளனுடன் அநேககாலம் இன்பந்துய்த்து நெறிதவறாது ஒழுகிவந்தார்.

**சாவித்திரி:**—இவர் மகாபதிவிரதை. மத்திரதேசாதிபதியாகிய அஸ்வபதிமன்னனது அருந்தவச் செல்வி. இவர் இளம்பருவத்தில் தோழியருடன் உல்லாசமாக உத்தியான வனத்தில் உலாவிக்கொண்டிருந்தபொழுது அவ்வழியாக வந்த அரசிளங்குமாரனாகிய சத்தியவானென்பவனைக் கண்டு காதல்கொண் டிருந்தார். பின்பொருநாள் அஸ்வபதி, அரசசமூகம் வந்த நாரதமுனிவரிடம் பேசிக்கொண் டிருந்த காலத்தில் சாவித்திரியின் திருமணத்தைப் பற்றிய பேச்சுவந்தது. நாரதர் கன்னியின் கருத்தையறிந்த பிறகே கடிமணம் குறித்தல் நற்றதாகுமென்றார். அவ்வாறே சாவித்திரியை யழைத்து விசாரிக்க அவர் தம் கருத்தை வெளியிட்டார். அவரது உள்ளக்கருத்தையறிந்த முனிபுங்கவர் விசனமடைந்து, "அசசத்தியவான் அரசையிழந்து கண்களிலலாப் பெற்றோருடன் காட்டில் தவித்துக்கொண் டிருக்கின்றான். அதுவுமன்றி அவன் அற்பாயுளுடையவன். அவனது ஆயுட்காலம் இன்னும் ஒருவருடத்தோடு முடிவடையும். அவனை மணக்கும் எண்ணத்தை உன் மனத்தினின்று மகற்றிவிடு" என்றார். அஸ்வபதியும் அவ்வாறே வற்புறுத்தினன்.

அப்போது சாவித்திரிதேவி முனிவரரைநோக்கி "சுவாமி! நான் மனதில் நிச்சயித்திருந்த நாதன் சத்தியவானென்று சொன்னவாக்கினால்



வேறொரு புருஷனைச் சொல்லலாமோ? அப்படிச் சொன்னால் தாய்தந்தை முதலிய சுற்றத்தார்க்குப் பழியும் பதிவிரதா தருமத்திற்குக்குறையும் அரசநீதிக்கு அழிவும் உண்டாகுமே. மேலும் 'கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருடன்' என்னும் ஆன்றோர் வாக்கிற்கேற்ப, மனமிசைந்து நிச்சயித்துக்கொண்ட மகிழ்நனைவிட்டு மற்றொருவரை நினைப்பது மானமுடைய மங்கையர்க்கு மாண்பல்லவே. ஆதலால் அவர்கள் பெருமையிழந்து பெருங்காட்டில் வசித்தாலும் அவரையன்றி வேறொருவரையும் நினையேன்; அவரே யென் கணவன்; நானே அவர் பத்தினி" என்றாள். விவாகம் நடந்தது. காட்டில் தம் கணவன் மனங்கோணாமல் நடந்துவந்தார்; காலையில் எழுவார்; ஸ்நானஞ்செய்வார்; தம் நாயகன் எழுந்ததும் புஷ்பங்களிட்டுப் பாதபூசைசெய்து வலம்வந்து நமஸ்கரிப்பார்; கணவன் காய்கனிகள் கொணரக் காட்டிற்குச் சென்றதும் மாமன் மாமியாரை யெழுப்பி ஸ்நானஞ்செய்வித்து அவர்களையும் பூசித்து வணங்குவார்; நேற்றிரவு மிகுதியாக வைத்திருக்கும் பழங்களையும் கிழங்குகளையும் ஆகாரமாகக்கொடுத்து அவர்கள் உண்டபின்பு அவர்களுடைய கால்களை வருடிக் கொண்டே தருமகதைகளைப் பேசிக்கொண்டிருப்பார்; கணவன் வந்ததும் அவன் கொண்டு வந்தவைகளை, அவனோடிருந்த மாமன்மாமிகளைப் பசியாற்றிக் கொழுநன் உண்டபின் தாமும் உண்பார்; இவ்வாறு நெறிதவறாமல் அநுதினமும் நடந்துவந்தார்.

நாரதர்கூறிய நாள் சமீபித்துவிட்டது. நான்கு நாட்களே யிருந்தன. மாமன் மாமியர் உத்தரவின்பேரில் கௌரிவிரதம் அநுஷ்டித்தார்; அன்னபானாதிகளை யகற்றினார்; நித்திரையை நீக்கினார்; மௌனவிரத மேற்கொண்டார்

நான்காம் நாள் தம் கணவன் காட்டிற்குப் போகையில் தாமும் கூடச்சென்றார். காட்டில் கட்டைவெட்டும்போது சத்தியவான் மிக்க ஆயாசமடைந்து மனைவியின் மடியின்மேல் தலைவைத்துப் படுத்தான்; ஆவி நீங்கிற்று. கற்பரசி காலனைக்கண்டார். தன் காதலனுயிரைத் தருமாறு வேண்டினார். கற்பின் மேன்மையைக் கண்டு அதிசயமடைந்த அந்தகன் பல சமாதான வார்த்தைகள் கூறித்தடுத்தும் விடாமல் அவனைத் தொடர்ந்தார். காலனும் கணவனுயிரைத் தவிர வேறேதாகிலும் வரங்கேளென்று சொல்லத் தன் மாமன்மாமிகள் இழந்த பார்வையையும் அரசையு மடையவும் தன் தந்தைக்குப் பல புத்திரர்களுண்டாகவும் வரம்பெற்றது மன்றி, மேலும் நமனைவிடாமல் தொடர்ந்துசென்று பல இதவார்த்தைகள் கூறித் தன் கணவனுயிரையும் மீட்டார். மேல் சத்தியவான் தன் தாய் தந்தையருடன் தன் ராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக் கொண்டான். சாவித்திரி அவனுடன் பூவும்மணமும் நகமும் சதையும்போல வாழ்ந்து, பல புத்திரர்களைப்பெற்று, நெடுங்காலம் சுமங்கலியாய் வாழ்ந்திருந்தார்.

(இதனால் கற்புடைய மனைவியால் அவள் கணவனுக்குவரும் கடுந்துன்பமும் கதிரவன்முன் காரிருள்போலக் கெடும் என்பது இனிது விளங்குகின்றது.)

(தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாசன்; தமிழ்ப்பண்டிதர்; சித்தூர்.

## தொல்காப்பியப் பொருளதிகாரம்.

(10-வது தொகுதி 428-ம் பக்கத் தொடர்ச்சி.)

[திரிசிரபுரம், சூசையப்பர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்புலவர் அ. சிவப்பிரகாசர் எழுதுவது.]

**தமிழ் என்னும் சொல்லுக்குப் பொருள்:**—தொல்காப்பியப் பாயிரத்துள் " தமிழ் கூறு நல்லுலகத்து " எனவும், " செந்தமிழியற்கை சிவணிய நிலத்து " எனவும் வரும் தொடர்களால், " தமிழ்" உலகத்து வழங்கியது எனவும், " செந்தமிழ் " ஒருநிலத்து வழங்கியது எனவும் கருதலாகும். அதனால், " தமிழ் " பொதுவும், " செந்தமிழ் " சிறப்பும் ஆகும். "தமிழ்" என்னும் சொல்லின்பொருள் என்னை? ஒருமொழியே உலகத்துத்தனித்து வழங்குமாயின் அதற்குப் பெயரிடுதல் வேண்டுவதன்று. அதனின் மாறுகொண்ட பிறமொழியொன்று தோன்றிய பின்னரே அவ்விருமொழிக்கும் பெயரிடுதல் இயல்பாகும். அவ்வாறே, தமிழ்மட்டும் உலகத்துத் தனித்து வழங்கின காலத்து அதற்குப் பெயரேற்படவில்லை. தமிழருள்ளே பல குழுக்கள் உண்டான காலத்தேதான் அதற்குப்பெயரிட்டது. அப்பெயர்க்குப் பலவகையாற் பொருள் கூறுவர். அவையெல்லாம் ஒருவகையாற் பொருந்துவனவா மாயினும், உண்மைப் பொருட்டாகா. தமிழர் தமக்குரிமைப் பொருள்களனைத்தினுக்கும் தம் என்னும் உரிமை அடைமொழி கொடுத்தே கூறுதல் வழக்கம். அவ்வாறே தமக்குரிய மொழியையும் தம்மொழி எனக்கூறினர். எதுபோலவெனில், தம் ஆய் = தாய்; தம் அப்பன் = தமப்பன் (தகப்பன்); தம் அக்கை = தமக்கை; தம்கை = தங்கை; தம் அவர் = தமர்; என இவைபோலவரும் சொற்களில் தம் என்னும் பகுதி உரிமையை உணர்த்துதல் காண்க. இமிழ், உமிழ், குமிழ், சிமிழ், அமிழ், முதலிய பல சொற்களில் விகுதியொலி இழ் பொதுவாகும். அந்த இழ் என்னும் உறுப்பே, இழும், இழு, இழ, இழவு, இழி, இழிவு முதலிய சொற்களில் பகுதியாகி ஒலியை உணர்த்தும். ஆகவே, " தம் இழ் " தமக்குரிய ஒலி, தம் பேச்சுமொழி எனப் பொருள்பட்டுத் " தமிழ் " எனக் கூறினர் என்க. அத்தமிழை வழங்குவோர் தமிழர் எனவும், அத்தமிழ் வழங்கு நிலம் தமிழகம், தமிழ்நிலம் எனவும் கொள்க.

**தமிழுலகம்:**—தமிழ் உலவு அகம், தமிழுலவகம், தமிழகம்; உலவகம், உலகம், எனவாம். அவ் 'உலகம்' வடமொழியில் லோகம் ஆகும்; (லோகம் உலகமாயிற்று எனல் படிறு). அத்தமிழுலகத்துக் கெல்லை " வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம் " என்னும் பாயிரம். வடக்கெல்லை வேங்கடம்; தெற்கெல்லை குமரி; கிழக்கும் மேற்கும் எல்லை கூறக் காணோம். திருவேங்கடமலையும், கன்னியாகுமரியும், கீழ்மேல் கடலும் எல்லையாகவுடைய சிறு நிலப்பரப்பையோ தமிழுலகம் என்றது? எனின் அன்று அன்று. வடக்கில், வேம்கடம், வெப்ப மிகுந்த வெளிநிலம்: அது பாலைவனம். இந்தியா நடுநாட்டுள்ளது. மிகமுந்தின காலத்தில், அதாவது முதலூழியில், அதற்கு வடக்கே மக்கள் வழங்கும் நிலமில்லை. அவ்வேங்கடத்துககுச் செல்லுமிடையே அதற்குத் தெற்கெல்லையிலுள்ளது திருவேங்கடமலை. தெற்கெல்லை குமரி. இப்போதுள்ள (கன்னியா) குமரியன்று. அதற்குத்தெற்கே எழுநூற்றுக் காவதவூரத்தே தென்கடலுள் முட்டியிருந்த குமரிக்கோடு. அப்பெரும் பரப்புத் தமிழ் நிலம் முதலூழி வெள்ளத்துட் கடல்கொண்டது. குணக்குங்குடக்கும்



பெருங்கடற் பரப்புகள். அவைகட்குக் குறியீடு இன்மையின் பெயர் கூறிலர். இப்போதுள்ள வங்காளக் குடாக்கடலும், அராபிக்கடலும் அன்று. இவை இரண்டாம் ஊழியிலே தோன்றியவை.

**செந்தமிழ்நிலம்:**—இதனை " செந்தமிழியற்கை சிவணியநிலம்" எனப் பாயிரம் கூறும். செம்மையாகிய தமிழினது இயற்கைத்தன்மை குன்றாது பொருந்திய நிலம். எனவே, தமிழினது இயற்கைத் தன்மை குன்றிய நிலங்கள் செந்தமிழ்நிலம் அன்றாகும். அவை குடகம் (மலையாளம்), துளுவம், கன்னடம், தெலுங்கம் (ஆந்திரம்) முதலிய நாடுகளாம். அந்நாட்டுமொழிகளாகிய மலையாளம், துளு, கன்னடம், வடுகு முதலிய மொழிகள் முன்காலத்தே தமிழ் மொழியாயிருந்தும், பின்னர் அவை தமிழிலக்கண இலக்கிய வரம்புகடந்து, பொதுமொழியாகிய வடசொல் (ஆரியம்) இலக்கணத்தைப் பெரும்பாலும் தழுவி உருவம்மாறுபட்டமையின், அவற்றைவிலக்கி, தமிழ் மொழியிலக்கண மாறுபாடில்லாத செந்தமிழ்வழங்கும் நிலமே செந்தமிழ்நிலமாம். அது இப்போதுள்ள தமிழ்ச் சில்லாக்களாகும்.

**முச்சங்கங்கள்:**—தொல்காப்பியம், தலை, இடை, கடை என்னும் முச்சங்கங்களுள், இடைச்சங்கத்தும், கடைச்சங்கத்தும் முதனூலாகவிருந்தது என்பர். தலைச்சங்கத்து அகத்தியம் முதனூல் என்பது. இக்கூற்றுக்களை நுணுகியாராய்தல் நலம். இச்சங்கங்களைப் பற்றிய கருத்து வேற்றுமைகள் பல. இவை நிகழ்ந்தகாலத்தை வரையறுத்தல் எளிதன்று. தொல்காப்பியத்துக்குப் பண்டையுரைகள் ஒன்றையும் காணோம். இரண்டாயிரத்தைஞ்ஞூறு யாண்டுகளுக்கு முன்னரே தோன்றின அதாவது, கி. மு. 500க்குமுன் தோன்றின தொல்காப்பியத்துக்கு, எண்ணூறு யாண்டுகளுக்குட்பட்ட உரையாசிரியர்கள் அதாவது கி. பி. 12-வது நூற்றாண்டிலிருந்தவர்கள், உரைகளே காணக்கிடைப்பன. இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் எழுதின உரைகளும், இவர்கட்கெல்லாம் பிற்பட்ட காலத்தவரான நச்சினார்க்கினியார் உரையுமே உள்ளன.

[சிலப்பதிகார வுரையெழுதின அடியார்க்கு நல்லாரும், திருக்குறளுரையெழுதின பரிமேலழகரும், ஏறக்குறைய இவர்கள் காலத்தினரே. இவர்களனைவரும் சைவ வைணவ சமயங்கள் மூறைசெய்த காலத்தவரே. களவியலும் (இறையனாரகப் பொருள்) அதனுரையும் அக்காலத் தெழுந்தனவே. நன்னூலும், நம்பி அகப்பொருளும், புறப்பொருள் வெண்பாமாலையும், யாப்பருங்கலமும் அக்காலத் தொட்டின காலத்தனவே. ஆழ்வார்களும், நாயன்மார்களும் சிறந்தகாலமும் அதுவே. கம்பராதியர் காலமும் ஒத்ததே. இவையனைத்தும் இரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளடங்கினவே.]

இடையிட்ட பதினேழு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தே தொல்காப்பியம் உரையின்றி யிருத்தல் கூடுமோ? உரைநூல்கள் இருந்தன. அவையனைத்தும் சைவர்களாலும், வைணவர்களாலும், பிரமர்களாலும் அழிக்கப்பட்டன வென்றே கொள்ளல் வேண்டும். வேறு காரணங்கூற இயலா. அந்தவரலாறும் கூறுதும்.

கடல் கோட்பட்ட தமிழ்நாட்டிருந்து மக்கள் பல நிலங்களிற் பரவினர். வேங்கட வெளியையுங் கடந்து அப்பாலும் கங்கைக்கரை யடுத்த நிலங்களிலும் குடியேறிப் பல்கினர். தூரநாடுகளிற் குடியேறினதனால் அவர்களுக்குத் தமிழர் தொடர்ச்சியும் கூட்டுறவும் குறைந்தன; குறையவே, அவர்கள் வதிந்த நிலத்தியல்பு தொழில் வேற்றுமை முதலியவற்

றால் பழக்கவழக்கங்களும், அவைபற்றிய சமயக் கோட்பாடுகளும், மொழியியல்பும் மாறின. நாளடைவில், வேற்றுமொழியினர் போலவும், வேறு கூட்டத்தினர் போலவும் கருதிக்கொண்டனர். தமிழர் வளங்கண்டு பொறாமையும் கொண்டனர். அதனால் மக்கட்பொதுமையில் வேற்றுமையும் கலகமும், அவற்றால் அழிவும் மிகுதல் கண்ட அறிஞர்பலர்கூடி, சமய ஒற்றுமை உண்டாக்கி, அதனால் மக்களுள் ஒற்றுமையுண்டாக்க முயன்றனர். முயன்று, புத்தம், சமணம் முதலிய சமயங்களைக் கற்பித்து, அவற்றை நிலமெங்கும் பரப்பக்கருதி பொதுமொழியாகிய பாலியையுங் கற்பித்து வளர்த்தனர். அக்கொள்கைகளைத் தமிழகம் (தண்டகாரணியம்) முழுவதினும் பரிமாறத் தொடங்கினர். அக்காலத்துத் தமிழ்நாட்டில் தலைசிறந்திருந்த பேரரசன் நிலந்தருதிருவிற் பாண்டியன் (இராவண்ணன்) அவர்களைத் தன் நாட்டில் தங்கவிடாது தடுத்தான். அது அவனவையிருந்த அகத்தியனுக்கு வருத்தம் விளைத்தது. அவ்வகத்தியன் வடநாட்டில் பாலி என்னும் பொதுமொழி கண்டபோது தென்னாட்டிருந்து சென்று உடனிருந்தவன். வடநாட்டார் மகளாகிய உலோபா முத்திரை என்பாள் அழகில் ஈடுபட்டு அவளையும் மணந்து கொண்டான். அதனால் வடநாட்டாரிடத்தும் ஆரியமொழி (பாலி)யிடத்தும் பற்று மிகக் கொண்டனனாய், வடநாட்டுச்சமயக் கொள்கைகளையும், வடமொழித் திரிபுகளையும், தமிழருள்ளும், தமிழ்மொழியுள்ளும் புகுத்த உடன்பட்டிருந்தான். அந்நோக்கத்துக்கு அரசன் இராவண்ணன் இணங்கானாதல் கண்டு, அவனொடுங் கலாய்த்து, எவ்வாற்றானும் தன்கருத்து முற்றுவிக்கத்துணிந்து, தமிழ்மொழிப் பண்டையிலக்கண முறைகளை மாற்றத் தொடங்கினான். அரசனவையில் அவன் கருத்தோடொக்க மக்களொழுக்கமும் மொழிப்பண்பும் கெடாமற் காத்தலிற் கருத்தூன்றி யிருந்த மொழிவல்லோனாகிய புலந்தோதத்தோன் (புலத்தியன்) பண்டைத் தமிழ்மொழி யியல்புகளைத் தொகுத்து, தொல்காப்பியம் என்னும் முடிந்த இலக்கணத்தை இயற்றி உதவினான். அதனை அழித்தற்கு, அதங்கோட்டாசானைத் துணைகொண்டு அகத்தியன் செய்த முயற்சிகளனைத்தும் பாழாயின. அகத்தியன் செய்த அகத்தியம் என்னும் கலப்பிலக்கணமும் தலையெடுக்கவில்லை.

கறுக்கொண்ட மனத்தினனாகிய அகத்தியன் பாண்டியனைச் சூளுரைத்துப்பிரிந்து, குடகமலையிற் றங்கியிருந்து, வடநாட்டரசனாகிய இராமனைப் பிரித்து, தண்டமிழகத்து (தண்டகாரணியத்து)க் கொணர்ந்து, இராவண்ணனுக்கும் இராமனுக்கும் குலப்பகை மூட்டி, இராவண்ணனைக் கொல்வித்து, தென்னாட்டைச் சிதறவிட்டான. அக்காலமுதல் தொடங்கித் தொடர்ந்து நிகழ்ந்த கடைச்சங்கமும், அதன்பின் நெடுங்காலம் சிறிது கலப்புக் கொள்கையோடு நிகழ்ந்த இடைச்சங்கமும் நிலவி மறைந்தன. இவ்வளவில் பதினைந்து நூற்றாண்டுகளின் மேலும் கழிந்தன.

இவ்விடையிட்ட நெடுங்காலத்தில் பல வேறுபாடுகளுண்டாயின. "இறைவன்" வழிபாடு செய்த தமிழரிற் பெரும்பாலர் புத்த சமண சமயங்களைத் தழுவினர். பாலி என்னும் வடமொழி பொதுமொழியால் ஆரியமாய் நன்றாய்ச் செய்யப்பட்டு சமஸ்கிருதம் ஆயிற்று. ஆரியப் பயிற்சியுடையோர் ஆரியர் ஆயினர். வடநாட்டில் ஆரியர் எரிவளர்க்குங் கொள்கையராய், புத்தசமணரை ஒடுக்கினர். தென்னாட்டில் தமிழர் பிரம, வைணவ, சைவக் கொள்கையராகி, புத்தர் சமணரைத் தகர்த்தனர். தமிழர்க்குள் ஆரியர் சமயக்கொள்கைபரவிற்று. தமிழ் மொழியுள் பேச்சிலும் செய்யுளிலும் ஆரியமொழிச் சொற்கள் பெரிதும் கலந்தன. ஆரியமொழிக்



குப் பதிமொழி (தெய்வபாஷை) என்ற ஆக்கம் பெருகிற்று. இவ்வகைச் சீர்கெட்டுக் கலப்புற்ற நிலைமைக்குத் தொல்காப்பிய இலக்கணம் பொருந்தாதாயிற்று. ஆகவே அந்நிலைமைக்கேற்ற புலவர் சங்கம் கூட்டுதல் இன்றியமையாதாயிற்று. அக்காலத்துச் சைவசமயப்பற்று பாண்டி நாட்டில் (மதுரையில்) தலைசிறந்திருந்தமையால், அப்போது கூடின சங்கம் சைவப் புலவர் சங்கமாகித் தலைச்சங்கம் என்னும் பெயர் பெற்றது. அத்தலைச் சங்கத்துக் கூடின புலவர்கள் கேடுற்ற தம் கலப்பட ஒழுக்கங்களுக்கு (எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் முரணாமை உணர்ந்துகொண்டு) பண்டை ஒழுக்க வரம்பாயுள்ள பொருளிலக்கணம் பொருந்தாமை கண்டு, பொருளிலக்கணத்தைப் புதுப்பிக்க வகையறியாது தியங்கினர். அப்போது அச்சங்கத்துக்கு அகத்தியராயிருந்த இறையனார் பொருளதிகாரத்து முதற் பகுதியாகிய அகத்திணை இயலை ஆரியக் கொள்கையையொட்டிக் களவியல் என்ற ஒரு சிறு சுருக்கநூல் அறுபது சூத்திரத்திற் செய்து தந்தனர். அதற்கு நக்கீரனார் உரை கண்டார் என்பர். அக்கதை மெய்யாயினும் அன்றாயினும், களவியல் என்னும் இறையனாரகப்பொருள் தொல்காப்பிய அகத்திணை யியலுக்கு மாறுபடவும், ஆரியக்கொள்கைகளுக்குப் பொருந்தவும் புது நூலாக ஆக்கியது என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

பின்னர், அதனை வழிகாட்டியாகக் கொண்டு ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலை செய்தார். பிறரும் பிற சுருக்க நூல்கள் இயற்றினர் அவை யெல்லாம் ஆரியக் கலப்புற்றவையே. இன்ன பின்னூல்கள் ஆதரவுகொண்டு ஆரியக்கலப்பில்லாத தொல்காப்பியத்துக்குப் பொருள் கூறி உரை செய்தல் எவ்வாற்றானும் பொருந்தாது திருவாளர். பா வே. மாணிக்கம் நாயக்கரவர்கள் கூறுமாறு அதனைக் கொண்டே அதனை ஆராய்தல் சாலத்தகவுடைத்து. தொல்காப்பியம் எழுதின காலத்து ஆரியர் கலப்பும் ஆரியர் வேதக் கலப்பும் இல்லை. ஆரிய வேதமும் எழுதப்படவில்லை. பின்னரே எழுதப்பட்டன, என்பதற்கு வேறு சாட்சி வேண்டுவதில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களிலெல்லாம் பிந்தியவராய், ஆரிய பாரத்துவாச கோத்திரத்தில் வந்தவரென்று கருதும் நச்சினார்க்கினியார் கூற்றே சாலும். அவர் கூறுமாறு :—

"நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான், "நான்மறை" யென்றார். அவை தைத்திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது ; இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்."

இன்னும் இக்கருத்தையே நூலிற் பிறவிடங்களிலும் வற்புறுத்துகிறார்.

தொல்காப்பியச் சிறப்பு :—தொல்காப்பியத்துக்கு முந்திய நூல்களெல்லாம் இறந்துபட, தொல்காப்பியமே முதனூலாயிற்று. தகுதியுள்ளன நிலைக்கும் [Survival of the fittest] என்னும் இயற்கை முறையைத் தழுவி, கற்பாறைமேற் கட்டின கருங்கல் மாளிகைபோல, மொழியியற்கையைச் சார்ந்தெழுதின தொல்காப்பிய இலக்கணம் ஒன்றே நிலைத்தது. தமிழர் அதன் கட்டளைகளைக் கையிகவாது தழுவினர். தொல்காப்பியர் வழிவந்த பல்காப்பியனாரும் "கூறிய குன்றினும் முதனூல் கூட்டித், தோமின் றுணர்தல் தொல்காப்பியன்றன், ஆணையின் றமிழ் அறிந்தோர்க்குக் கடனே" என்றும் விதித்தனர். "தொல்காப்பியத்தின் அருமை

பெருமைகளே அம்முதனூல் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமென்று சொல்லலாம்" என்றார் மு. இராகவையங்கார். நமது ஐயங்கார் அகத்தியம் முதனூல் என்னும் பொய்யறிவுகொண்டு இவ்வாறு புகன்றாரேனும், தொல்காப்பியத்தின் அருமை பெருமைகளைப் பாராட்டாதிருக்க முடியவில்லை. தொல்காப்பியம் தோன்றியபின் ஆயிரத்தெழுநூறு யாண்டுகளுக்கு மேலும் வேறு நூல் தமிழர்க்கு வேண்டுவதில்லை யாயிற்று. தமிழ்க்குப் பெருமை குறைந்து, ஆரியப் பொதுமொழியாய் நூன்மொழியாகக் கொண்டபின்னரும் பின்னூல்களுக்கெல்லாம் அதுவே முதனூலுமாயிற்று.

**தமிழ்மொழி மாறுதல்** :—கடைச்சங்க காலமுதலே தமிழ்மக்கள் ஒழுக்கம் மாறுபடத் தொடங்கிற்று. முதலில் புத்த சமயமும், பின்னர் சமண சமயமும் தமிழருள்ளே பரவலாயின. புத்தர் பாலிமொழியையும், சமணர் சமஸ்கிருதத்தையும் பொதுமொழிகளாகக் கொண்டு அவற்றிற்கு முதன்மையும் பெருமையும் தந்ததுமன்றி, அம்மொழிச் சொற்களைத் தமிழ் மொழியிற் புகுத்துவாராயினர் தமிழுலகத்தே வடநாட்டினரும் தென்னாட்டினரும் ஒழுக்கத்தில் மாறுபட்டனர். சூரியனையும் அக்கினியையும் வழிபடும் கொள்கையினராகிய மேனாட்டு யவனர் முதலாயினர் வடநாட்டிற் குடிபுகுந்து பழக்கினதனால், வடநாட்டுப் பகுதியார் சூரியனுக்கு அர்க்கியமும் அக்கினிக்கு ஆகுதியும் செய்வோராய் ஒழுக்கம் மாறுபட்டனர். அன்றியும் இலக்கணவரம்பு பெறாத தம் நாட்டுச் செயற்கை மொழிகட்கு சம்ஸ்கிருத மொழிக் கற்பனை இலக்கணங்களையே தழுவிக் கொண்டனர். தென்னாட்டுத் தமிழரும் சமயவெறி கொண்டு, புத்தர் சமணரைத் தம்மவரென்றுங் கருதாமல் கலாய்த்துக் கறுவினதுமன்றி, தமதுபண்டை இறைவன் வழிபாட்டையும் புதுக்கி, சைவ வைணவ சமயங்களாக்கி, ஆகமமாதியவற்றை வடசொல்லால் எழுதிக்கொண்டு, தமிழ் மொழியைப் புறக்கணிக்கத் தலைப்பட்டனர் இக்குழப்பத்தில், பண்டைத் தமிழ் நூல்கள் பலவு மழிந்தன. தொல்காப்பியம் விரிந்த பரப்பினதாய் அமைதியொடு கற்றல் அரிதாயிருந்தமைபற்றிச் சுருக்க நூல்களெழுதி, அவற்றுள் வடசொல் இலக்கண விதிகளையும் கொளுவினர். இதனிடையில், தென்னாட்டு இறைவன் (சிவன், திருமால்) வழிபாட்டுத் தமிழர்க்கும், வடநாட்டுச் சூரியாக்கினி வழிபாட்டு ஆரியர்க்கும், வடசொல் பொதுமைபற்றி ஒருவாறு ஒற்றுமை யுண்டாக, அதனிடையே ஏகான்மவாத சங்கரமதமும் கலந்துகொள்ள, அவர்களனைவரும் ஒரு முகமாய் நின்று, புத்தசமணரை எதிரிட்டு அவர்களை ஒடுக்கினர். இந்தக் கலக்கம் மும்முரமாய் இருந்த காலத்தே தானே சைவத் தலைச்சங்கம் சிறப்புற்றது. அக்காலத்தேதான், இறையனார் களவியல் எழுதிய சுவடியைப் படியிடுக்கில் நுழைத்தார்: அதற்கு நக்கீரர் உரை கண்டார்: மூங்கைப்புன்மயிர் உருத்திரசருமர் உரை கேட்டார்: இளம்பூரணராதி உரையாளர்கள் தொல்காப்பியத்துக்கு உரை கண்டார்கள்: தமிழ்த்தாய் பண்டை வளனும் பெருமையுமிழந்து பொலிவழிந்தாள்! எனினும், தொல்காப்பியம் ஒன்றுமே குன்றின்மேல் இட்ட குலவொளி விளக்கென இன்றும் மிளிர்கின்றது!

தொல்காப்பியத் துள்ளீடு மாறுபடவில்லையோ? மேற்பகுதியிற் காட்டிய வண்ணம் தமிழுலகெங்கணும் குழப்பமும், கலக்கமும், மலக்கமுமாயிருந்த நீண்ட காலத்தில் தொல்காப்பியம் இடைச்செருகல், திரித்தல் முதலாய தொடக்குகளின்றித் தப்பியதோ? என்னும் ஐயம் உண்டாதல் இயல்பே. ஐயப்படாமல் பலவகையாற்றிரிபடைந்துளது என்றே துணிந்து கூறலாம். சோன்றிக்குழிசி யளவையாக (ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல்), "வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை" என்னும் மரபியல் 77-ம் சூத்திரமே சாட்சியாகும். தொல்காப்பியப் பொருளதிகார முழுவதும் துருவினும், தமிழ்மக்களது தொழில் வகையாற் பிரிவு அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் நான்கே காண, ஆரியமுறை சாதிப் பிரிவாகிய வைசிகர் (வைஸ்யர்) என்னும் வடசொல் காணப்படுதல் ஒன்றுமே அச்சூத்திரம் இடைச்செருகல் என்பதனை ஐயமின்றி விளக்கும். இத்தகைய குற்றங்கள் ஆங்காங்கு காட்டப்படும்.

(தொடரும்.)



---

சென்ற ஆனிமாத ஆனந்தபோதினிப் பத்திரிகையில் 472-ம் பக்கத்திலுள்ள "மரமது மரத்திலேறி" என்னும் பாடலுக்கு உரை:

மரமது மரத்திலேறி = அரசமரம் மாமரத்திலேறி
மரமதைத் தோளில்வைத்து = வேலமரத்தை தோளில்வைத்து
மரமது வழியேசென்று = அரசமரம் காட்டுக்குப்போகும் வழியேசென்று
மரமது மரத்தைக்கண்டு = காட்டில் அரசமரம் வேங்கைமரத்தைக்கண்டு
மரத்தினால் மரத்தைக்குத்தி = வேலமரத்தினால் வேங்கைமரத்தைக்குத்தி
வளமனைக் கேகும்போது = அரசமரம் தனது அரண்மனைக்குப் போகும் [போது
மரமது கண்டமாதர் = அரசமரத்தைக் கண்டபெண்கள்
மரமுடன் மரமெடுத்தார் = ஆலமரமும் அத்திமரமும் (ஆலத்தி) எடுத்தார்கள் என்பதாம்.

இதன்பொழிப்பு:—அரசன், மா - என்னும் யானையின்பேரில் ஏறிக் காட்டுக்கு வேட்டையாடச்சென்றபோது வேலாயுதத்தைத் தோளில்வைத்துச் சென்றான்; அங்குவேங்கைப் புலியைக்கண்டான்; அரசன் தனது வேலாயுதத்தினால் வேங்கையைக் குத்தி அரண்மனைக்குத் திரும்பிவரும்போது அந்த அரசனைக் கண்ட மனைவிமார்கள் ஆலத்தி எடுத்தார்கள்.

நா. கோவிந்தராஜநாடார், ஆம்பூர்.

குறிப்பு :—இன்னும் இதற்குப் பொருள் அடியில் கண்ட நண்பர்களும் எழுதியுள்ளார்கள் :—பேராசிரியர் தாளதேவனார், சந்தா நெ. 3481. ஆவடித்தூர். கே. ஆர். முத்துசாமி ஐயங்கார், கோம்பை. பி. கணபதி செட்டியார், திருச்சி. கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை, ப. ஆ. து. சாமிநாத நாடாள்வார் சந்தா நெ. 1102, திருநீபூர். செ. சுந்தரம்

பின்னும் அநேகர் எழுதியிருக்கின்றனர். விரிவஞ்சி அவர்கள் பெயர்கள் காட்டப்படவில்லை. இவர்களுள் பெரும்பான்மையோர் அபிப்பிராயங்கள் இவ்வுரைக்கு ஒத்தே யிருக்கின்றன. சிலர் கருத்து ஒவ்வோரிடத்து மாறுபட்டிருக்கின்றது. ப - ர்.

---

## அனுபவத்தில் கைகண்ட சகல சுர கஷாயம்.

மானிடதேகத்தி லுண்டாகும் வாதசுரம், பித்தசுரம், சிலேஷ்மசுரம், மாந்தசுரம், அஜீரணசுரம், அஸ்திசுரம், முறைசுரம், விடாச்சுரம், விஷபாகசுரம், மூன்று முறைசுரம், தாபசுரம், நடுக்கல் சுரம், இங்கிலாந்து பாஷையிற் சொல்லப்பட்ட மலேரியாசுரம், நிமோனியாசுரம், டைபாயிட் சுரம், இன்புளியன்ஸா சுரம், ஆக இன்னும் பலவிதமான எந்த சுரங்களுக்கும் இது தக்க ஓர் அவுடதம்.

ரசம், தாளகம், கெந்தகம், வீரம், பூரம், லிங்கம், பாஷாணம் சம்பந்தமான குரூரமருந்துகளைக் கையாடுவதைப் பார்க்கிலும் அடியிற் குறிப்பிட்டிருக்கின்ற மூலிகைகளினால் அடைகஷாயம்போட்டுச் சாப்பிட ரோகிகள் வருத்தமடையா திருப்பார்கள்.

கஷாயம் செய்துகொடுப்பதோடு ரோகிக்குக் காலாகாலத்தில் புழுங்கலரிசி அல்லது ரவாகஞ்சி பசுவின்பால் சேர்த்துக் கொடுக்க வேண்டியது. கபரோகமானால் பால் நீக்கவேண்டியது. அழுக்கான வஸ்திரங்களை நீக்கிச் சுத்தமான வெள்ளை வஸ்திரம் கட்டிக்கொள்ளும்படி செய்யவேண்டியது. துர்க்கந்தப் பதார்த்தங்களையும் ஜனக்கூட்டத்தையும் நீக்கிவைக்க வேண்டியது. ரோகிக்கு நல்ல ஆறுதலான தைரியம் சொல்லவேண்டும். நல்ல காற்று வீசும் இடங்களில் படுக்கும்படி செய்ய வேண்டியது. ரோகிக்கு வேண்டியவைகளை நடத்த ஒரு மனிதர் எப்போதும் பக்கத்தி லிருக்க வேண்டியது,

கஷாயம் போடும்போது புதியசரக்குகளையே உபயோகப் படுத்த வேண்டும். மண்பாண்டத்திலாவது,மாவுக்கல் பாண்டத்திலாவது அடியிற் கண்ட சரக்குகளை இடித்துப்போட்டு நாலுபடி சுத்தஜலம் விட்டு, எட்டில் ஒருபங்காகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிக்கொண்டு சிறியவர்களுக்கு அரை துலாம் எடைவீதமும் பெரியவர்களுக்கு இரண்டு துலாம் எடைவீதமும் காலை மாலை இரண்டுவேளையும் கொடுக்கவும்.

### சரக்குகளின் விவரம்.

சாத்தியமானரோகமாய் இருந்தால்

| | | | |
|---|---|---|---|
| நிலவேம்பு பலம் | 2 | திராக்ஷப்பழம் பலம் | 1 |
| விஷ்ணுகிரந்தி | 2 | சுக்கு | 1/16 |
| வெள்ளறுகு | 2 | அரத்தை | 1/4 |
| அரிசித்திப்பிலி | 1/8 | ஓமம் | 1/2 |
| சிறுதேக்கு | 1/4 | மிளகு | 1/4 |
| அதிமதுரம் | 1/4 | | |

அசாத்திய ரோகமாய் இருந்தால் அதாவது கபம், ஜன்னி இருந்தால் மேற் சரக்குகளோடு கீழ்க்கண்ட சரக்குகளையும் சேர்த்துக்கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| நொச்சிப்பட்டை பலம் | 1 | குப்பைமேனிவேர் பலம் | 1/2 |
| ஆடாதோடைப்பட்டை | 1 | தூதுவளைவேர் | 1/2 |
| மாவுலிங்கப்பட்டை | 1 | கண்டங்கத்திரிவேர் | 1/2 |
| முருங்கைப்பட்டை | 1 | வெள்ளைக் காட்டாமணக்குப் பட்டை | 1 |
| தும்பைவேர் | 1/2 | | |
| வேளைவேர் | 1/2 | துளசி இலை | 1/2 |

I. P. Namasivayam, N.M. Doctor,
Vallipalayam, Negapatam.

---

## நவீன நாகரீக மென்னும் பாதாளத்துக்குப் போகும் படிகள்.

இவ்வியாசத்தின் தலைப்பை நோக்கும் நேயர்கள் நவீன நாகரீகத்தைப் பாதாளத்துக்கு ஒப்பிட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டுவதில்லை. ஏனெனில் அந்த நாகரீகமே நம்மிந்திய மக்களை வீண் மயக்கத்தி



லாழ்த்தித் தரித்திரத்தில் கொண்டுவந்து விட்டதென்பது மறுக்கக்கூடாத விஷயம். நம்மவரில் (இந்தியரில்) நவீன நாகரீகத்தை அனுசரிக்காமலிருப்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

2. ஒரு தேசத்துக்குப் புராதனமாக ஏற்பட்டுள்ள பழக்க வழக்கம், நடையுடை, உணவு, ஆசாரம் முதலியவற்றினின்று மாறுதலடைவதும்; பிறதேசத்துக்கடுத்த மேற்கூறியவற்றை அனுசரிப்பதுமே நவீன நாகரீகமெனப்படும். அப்படிச் சுய தேசத்துக்கடுத்த புராதன நாகரீகத்தைவிடுத்து நவீன நாகரீகத்தை அனுசரிப்பதில் இந்தியாவோடு வேறு எந்தத் தேசமும் போட்டிபோட முடியாது. முதலில் சிறிய பழக்கங்களைச் சாதாரணமாக நினைத்துக் கைக்கொண்டுவிட்டு அப்பால் ஒன்றன்பின் னொன்றாய் வெறுக்கக்கூடிய பல காரியங்களைச் செய்யும் பழக்கங்களுக் குட்பட்டு, அனாவசியமாயும், பைத்தியக்காரத் தனமாயும் பொருளைச் செலவுசெய்து ஏங்கி நிற்கும் பலரை இந்தியாவிலெங்கும் ஏராளமாகக் காணலாம். அதனாலேயே நவீன நாகரீகத்தைப் பாதாளத்துக்கும், ஒவ்வொரு புதுப்பழக்கத்தை ஒவ்வொரு படிக்கும் ஒப்பிட்டுக் கீழே வரையத்துணிந்தோம். இவ்வியாசத்தின் பலனாக நமது பாரத மக்கள், அப்படிகளின் போக்கைச் சற்று கவனித்து அவற்றைப் பின்பற்றாது விலகி க்ஷேமமடைவார்களென்றே முற்றும் நம்புகிறோம்.

முதற்படி காப்பிக்குடி—முதன் முதல் காப்பிக்குடியைத்தான் நம்நாட்டார் நவீனபானமாய் உபயோகிக்க ஆரம்பித்தார்கள். அதிலிருந்து டீ, கோக்கோ முதலிய பானங்கள் உறவாடத் தொடங்கிவிட்டன. காப்பிக்குச் சிநேகமாய் முதல் முதல் விளங்கினவை இட்டலியும், தோசையும், அப்பமுமே. பின்பு காப்பி என்னும் பானம் டீ, கோ கோ, என்னும் பானங்களுடன் சேர்ந்து குலவியதைக் கண்ட இட்டலி வகையராவும் போட்டி போட்டுக்கொண்டு உப்புமா, கேசரி, ஹல்வா, ஸொஜ்ஜி, ரவாலாடு, குஞ்சாலாடு முதலியவற்றோடு சம்பந்தியைப்போல் நெருங்கிப்பழக ஆரம்பித்து விட்டன. மேற்கூறிய பானங்களும், பக்ஷணங்களும் ஒன்றுக்கொன்று போட்டி போடுவதைக்கண்டு, "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்றமாதிரி அவை, சர்க்கரை, நெய், பால், முந்திரிப் பருப்பு, கடலைமா, ஏலம், கிராம்பு, திராக்ஷைப்பழம் முதலிய ஒவ்வொன்றும் இதுதான் சமயமென்று தன்தன் விலைமதிப்பை அளவிற்கு மிஞ்சி உயர்த்திக்கொள்ளவே மனிதர் தங்கள் கையிலுள்ள பொருளை மேற்கூறியவற்றிற்குப் பங்குபோட்டுக் கொடுக்கும் படியான நிர்ப்பந்த நிலைமைக்குட்பட்டு விட்டார்கள். வயிறுநிறையப் பழையசாதம் சாப்பிட்டால் சராசரி 1 அணாவுக்குமேல் செலவழியாது; தேகாரோக்கியத்துக்கும் பங்கமேற்படாது. இதைவிட்டு, சனியனை விலைக்கு வாங்குவதுபோல் காப்பிமுதலிய பானங்களை வழக்கத்துக்குக் கொண்டுவந்து 8 அணா செலவழித்தும் நம்மவர்கள் அரைவயிறுகூட நிரம்ப வழியின்றிக் காசவியாதியால் பீடிக்கப்பட்டவர்கள்போல் பெருமூச்சுவிட் டலைகிறார்கள்.

தற்காலம் காப்பிக்கிளப்பு வைப்பதையே ஜாதித்தொழிலாகக்கொண்டு அநேகர் ஜீவிக்க முன்வந்து விட்டார்கள். இவர்களிற் பலர் ஜீவகாருண்யமின்றித் தங்கள் விடுதியில் பசியாற வருபவர்களிட மிருந்து துட்டைப் பிடுங்குவதிலேயே கண்ணாயிருக்கிறார்களேயன்றி அவர்கள் பசிதீரவேண்டுமென்றாவது, சுகாதாரம கெடாம லிருக்கவேண்டு மென்றாவது கிஞ்சித்தேனும் கவலைப்படுகிறதில்லை. எப்படியெனில் 4 அணா செலவுசெய்து பக்குவப்படுத்தப்பட்ட பக்ஷணங்களைச் சிலவேளைகளில் 1 ரூபாய்க்குக்கூட

விற்று விடுவார்கள். மேலும் பசியாற வருபவர்களிடம் வெகு மரியாதையாகப் பேசித் தங்களால் செய்யப்பட்ட விலையுயர்ந்த தினுசுகளையே அடிக்கடி வற்புறுத்திக்கூறி "பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைத்து" என்ற பல செய்யுள்களையும் பாடி, நயமான வார்த்தைகள் சொல்லி உத்தேசம் 1 சேர்காப்பி 1 கிண்ணம் ஸோஜ்ஜி, 1 ஹல்வாத்துண்டு, 1 ரவாலாடு, 1 ரவாதோசை முதலியன சாப்பிடும்படி செய்து விடுவார்கள். இவ்வளவும் சேர்ந்து அரைவயிறுகூட நிரம்புவது சந்தேகம். ஆனால் துட்டு மாத்திரம் பத்து அணாவாகிவிடும்.

இந்தியாவில் பலகோடி ஜனங்கள் 4 அணா கூலிகூட கிடைக்காமல் பசியால் மெலிவுற்று வருந்துங்கால் 1 அணாவுக்குள் முடியும் காலைபோஜனத்தை அலக்ஷியம்செய்து அதற்காக 10 அணா செலவழித்தும் அரைவயிறுகூட நிரம்ப வழியின்றி யலையும் நமது பேதை இந்தியர்களைப் பார்த்து மற்றவர்கள் அலக்ஷியம் செய்து கை கொட்டிச் சிரிப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. இன்னும் சிலர் மாலை 3 மணிக்கு இடைப்போஜனத்துக்காகவும் இப்படியே செலவு செய்கிறார்கள். நிற்க, சிற்சில காப்பிக்கிளப்புகளில் உள்ள சுத்தா சுத்த விதிகளை உள்ளபடியே எடுத்துரைத்தால் சுமார் 1 வருஷத்துக்குமுன் காப்பிசாப்பிட்டவர் கூட வாந்திபண்ணி விடுவார். சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து, பாகம் செய்கிறவனுடைய வியர்வை, வெற்றிலைபாக்குப் புகையிலை கலந்த எச்சில் முதலிய எல்லாம் பக்ஷணங்களில் சம்பந்தப்பட்டுவிடும். பிறகு அவற்றையும் விலைகொடுத்து வாங்கவேண்டியதுதான். நவீனநாகரீகத்தில் இன்னும் முன்னேறியவர்கள் பாத்திரங்களில் வாய்வைத்துக் குடிக்கும் வழக்கத்தினால் ஒருவருக்கு இருக்கும் ஒட்டுவாரொட்டி வியாதி மற்றவருக்குப் பரவ ஏதுவாகிறது. இந்தியாவில் மதுபானங்களைவிட இதுவே அதிககேடுவிளைவிக்கக் கூடியதாயிருப்பதால் புத்திமான்களென்று சொல்லிக்கொள்ளும், கருதும் ஒவ்வொருவரும் முதலாவது ஒழிக்கவேண்டியது இப்பானமேயாகும்.

சிலர் காப்பி குடிப்பதை ஒரு பெருமையாக எண்ணியே பழகிவிடுகிறார்கள். பழையசாதம் சாப்பிடுவதை இகழ்ந்தும் காப்பி சாப்பிடுவதைப் புகழ்ந்தும் பேசுவது சில நவீனநாகரீகரின் வழக்கம். இவர் சிலர் காப்பி சாப்பிடக் கையில் துட்டு இல்லாவிட்டாலும் கிளப்பினுள் புகுந்தாவது வெளிவந்தால் பலரும் தாம் காப்பிசாப்பிட்டு வருவதாக எண்ணுவார்கள் என்று உள்ளேபோய் ஒரு டம்ளர் ஜலம் வாங்கிக் கொஞ்சங் குடித்துவிட்டு மீதிஜலத்தைக் கொப்பளித்துத் துப்பிவிட்டு வெளிவருவார்கள். என்னே இவர்களின் சொகுசு.

காப்பிக்கிளப்புகளைக் கிராமங்களில்கூடக் காணலாமெனினும் நகரங்களில் கணக்கிலடங்காம லிருக்கின்றன. தடுக்கிவிழுமிடமும் காப்பிக்கிளப்புதான். போதும் போதாததுக்கு சர்க்கார் கச்சேரிகளிருக்கும் காம்பவுண்டுக்குள் கூட இரண்டு மூன்று கிளப்புகளுக்குக் குறையாமல் இருக்கின்றன. கக்ஷிக்காரர் தங்கள் கையிலுள்ள பொருளை வக்கீல்களிடம் கொடுத்துவிட்டுப் பட்டினியும் பசியுமாய்க் கச்சேரிவாசலில் காத்துக்கொண்டிருக்கையிலுங்கூட ஷை வக்கீல்களிற் சிலர் மறுபடியும் அவர்களைக் கண்டு டிபனுக்கு (Tiffin) வழிசெய்தாயா என்று கேட்க, கக்ஷிக்காரன் மிரண்டு விழிக்கும் பரிதாபம் நேரில் பார்ப்பவருக்கே தெரியும். காசு இல்லையென்று சொன்னால் எவரும் நம்பமாட்டார்கள்; கேசையும் கவனிக்க மாட்டார்கள் என்ற பயமே கக்ஷிக்காரர்களை வருத்த, அவர்கள் காதில் போட்டிருக்கும் கடுக்கன்களைக்கூட அடகுவைத்து வாங்கிக்கொடுத்து விடுவார்கள். இப்படிப்பட்ட காருண்யமுள்ள வக்கீல்கள் வெகு சில்ரேயாயினும் காப்பிக் குடியின் கொடுமையை விளக்கவே இது எழுதலாயிற்று.



A. மெத்து சலா உபாத்தியாயர்
போர்டு பெண்பாடசாலை ஜெயங்கொண்ட சோழபுரம்.

(இன்னும்வரும்.)

---

## கோபம் சண்டாளன்.

அருளாளனும், அன்புடையோனுமாகிய ஆண்டவனின் திருநாமத்தைச் சிந்தித்து நான் இதனை எழுதத் தொடங்குகிறேன். எல்லாப் புகழும் அந்த ஆண்டவனுக்காயிருக்கும். மேலும் அந்த ஆண்டவன், நம்மைக் கோபத்தினின்றும் விடுவித்துக் காத்தருள்வானாக. இன்னும் எல்லா மக்களுக்கும் அவ்விதமே கிருபை கூர்ந்தருளுவானாக. "கோபம் சண்டாளன்" என்பதுயாவரும் அறிந்த விஷயமே. என்றாலும் அச்சண்டாளன் நம்மிலிருந்து உண்டாகும்போது நம்மை அறியாமல் எவ்வளவோ கம்பீரமான வேகத்துடனும், அதிர்ச்சியுடனும் கிளம்பி எதிரில் நிற்பவனை ஒரு க்ஷணப் பொழுதில் தொலைத்துவிடச்செய்து விடுகிறான். இச்சண்டாளனுடைய மாயையில் அகப்பட்டவர்கள் எண்ணிறந்தவர்கள். அத்துஷ்டன் சிற்சில மகான்களையுங்கூடமோசத்தில் இழுத்துவிட்டுவிடுகிறான். அப்பெரியமகான்களுடைய தபங்களெல்லாம் இச்சண்டாளனால் இழக்கப்பட்டுப் போய்விடுகின்றன. இவன் உள்ளிருந்து சில சமையம் வெளிக்கிளம்பும் பொழுது, பற்கள் நெறநெற என்று கடிபட, மீசைகள் துடிக்க, உதடுகள் கடிபட, கண்கள் சிவக்க, அடடா! என்ன அட்டகாசம் செய்து வருகிறான்! அதைச் சொல்லிமாளாது. அப்படி அவன் உள்ளிருந்து வெளிக்கிளம்பினவுடன், எவ்வளவு பெரியபடிப்பாளிகளும்,பெரிய தந்திரசாலிகளும், தெள்ளிய அறிவாளர்களும்கூட அச்சமயம் மெய்ம்மறந்து மதிமோசம் போகிறார்கள்; பெரியபாதகங்களை யெல்லாம் செய்து விடுகிறார்கள்; அப்படிச் செய்தபின் சிலர், "ஏன் இப்படிச்செய்து விட்டீர்கள்?" என்று அவர்களைக்கேட்டால், அவர்கள் "நான் என்னசெய்வேன்; எனக்கு அச்சமயம் அவ்வளவு கோபம் பிறந்து விட்டது" என்கிறார்கள்.

பார்த்தீர்களா! அந்தோ! இவர்கள் இப்படி அவன் கொதித்தெழுந்தபோது அச்சண்டாளனை எதிர்த்து நின்று அவனோடுபோராடி, அவனை உள்ளே அடக்கமுடியாமல், அவனுக்கு அடிமைப்பட்டு இடங்கொடுத்து விடுகிறார்கள். அப்படி நாம் ஏன் அவனுக்கு அடிமைப் படவேண்டும்? நம்முன்னிருந்து கிளம்புகிற அவனை நம்மால் அடக்கமுடியாவிடில், அதன்பின் நம்மால் எதைத்தான் அடக்கமுடியும்? கடவுள்படைத்த [அகிலாண்ட] இப்பெரிய பூவுலகின்கண் உள்ள மற்றவுயிர்களிடம் இருக்கிற தத்துவத்தைக்காட்டிலும் நம்முடைய தத்துவத்தையே அவர்மேலான தாக்கித் தந்திருக்கிறார். அப்படியிருக்க, நம்மால் ஏன் அச்சண்டாளனை அடக்கமுடியாது? அவன் இஷ்டம்போல் எந்தச்சமையமும் மிதமிஞ்சிக் கிளம்பிக்கொண்டிருக்கும்போது அவன் போனபோக்காகவே அவனை வெளியே நாம் விட்டுவிட்டால், முதலில் நாம் உண்கிற உணவுகள்தான் ஜீரணமாவதெப்படி? நம்முடையதேகம் தான் ஆரோக்கியமடைவதெப்படி? நம் உயர்ந்த தத்துவத்தை இவ்வுலகின்கண் உபயோகிப்பதெப்படி?

ஆகையால் அவனை வெளியேகிளம்பாமல் உள்ளே அடக்கிவைப்பது நம்முடைய முக்கியவேலையாக இருக்கிறது. அவனை எப்படி அடக்குவதெனில் ஒன்றுசெய்ய வேண்டும். அதாவது: அச்சண்டாளன் உள்ளிருந்து வெளியே வெகுவேகத்துடனும் அகங்காரத்துடனும் கிளம்பிவருகையில் மனதைச் சற்று அடக்கி, நிதானித்துப்பின் கடவுளின் சுத்த ஆகாயத்தைப் பலதரம் உள்ளுக்கிழுத்து வெளியே விடவேண்டும். அப்படிச் செய்தால் அந்தச் சமையம் மனதுக்கு ஓர் இனிமையான சாந்தம் உண்டாகும். பின்பு அவனைநோக்கி, "தம்பிவாருங்கள்; வாருங்கள்; தங்களுக்கென்ன இவ்வளவுவேகம்! சற்று உள்ளேயே யிருங்கள்; வேகத்துடன் நீங்கள்வெளிக் கிளம்ப வேண்டாம்; உள்ளே புகுந்துகொள்ளுங்கள்" என்று சொல்லி, ஆர்ப்பரித்து வந்த அச்சண்டாளனை சூன்யமாய்க் காணமற் போகும்படி செய்துவிடவேண்டும். இவ்விதமாக வேகத்துடன் வெளியில் வருகிறகோபச்சண்டாளனை உள்ளே அழிந்துபோகும்படி 10-15. அல்லது 20 தரம் ஒருவன்செய்து பழகிவிட்டால் போதும். அந்தச் சாந்தமான பழக்கத்தால் அவனுடையதேகத்துக்கு அற்புதமான ஆரோக்கியம் உண்டாய் விடுகிறது. அற்புதமான வசீகரசக்தி அவன்மனதுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அவனை எல்லோரும் நேசிக்கிறார்கள். அவன்சொல் வேதவாக்கியமாய் விடுகிறது. கொடிய துஷ்டமிருகங்களும் கூட அவனைக்கண்டு விசுவாசிக்கின்றன. பெரியமகான்கள் இந்தக் கோபமென்ற சண்டாளனை அவர்கள் காலின் கீழ் அடக்கி அடிமையாக்கி வைத்திக்கிறார்கள். அவர்களிடம் இந்தச் சண்டாளனுடைய தந்திரம் ஒருகாலும் செல்லாது. இந்தச்சண்டாளன் நீற்றுப் பஸ்பமாகிறகாலம் வந்தால் தான் அவர்களின் சமீபத்தில் நெருங்குவான்.

இவ்வாறு கோபத்தை அடக்கச் சொன்னதால் சிலர், நம்மை, "நீர் கோபத்தை அடக்கிவிட வேண்டுமென்று சொல்கிறீரே; இராவில் வீட்டில் கள்ளன்வந்து களவாடும்போது ஒன்றும் செய்யாமல் கோபத்தை அடக்கிக் கொண்டு சும்மா இருந்துவிடலாமோ?" என்று கேள்வி கேட்கலாம். அப்படி எல்லாவிடத்திலும் கோபங்காட்டாமல் சும்மா இருக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை; இடங்களுக்குத் தக்கபடி அதனை உபயோகிக்கவேண்டும். கள்ளர் நமக்குத் தீங்குசெய்யும்போது, நாம் பொய்யான கோபக்குறியால் மாத்திரம் அவர்களை அடக்கலாம். ஆனால், மெய்யான விபரீதகோபத்தை அவர்களிடத்திலுங் காட்டக்கூடாது. அவ்வாறு காட்டினால், கொலைமுதலியன நேர்ந்து துன்பத்திற் கேதுவாய்விடும். ஆகவே, எவ்விடத்துமே உக்கிரமான கோபத்தை அடக்குவதுதான் நலம். கோபமற்றவர்க்கு எப்பொழுதும் தீங்கில்லை. சாந்தமானவர்க்குத் துஷ்டர் தீங்கு செய்ய நினைத்தாலும் அவர்களுடைய எண்ணம் நிறைவேறாது. அத்தியர்கள் தாமே ஒழிந்துபோவார்கள். இவற்றை ஆராயும்போது கோபத்தை அடியோ டொழிக்க வேண்டியது மனிதர்க்கோர் சிறந்த குணமாகிறது. ஆதலின் எல்லாம்வல்ல இறைவன், அவனை (கோபத்தை) விட்டுநீங்கியிருக்கும்படி நம் எல்லோருக்கும் கிருபைகூர்ந் தருளுவானாக.

மு. நா. செய்யது முகம்மது,
47/28 ரங்கூன்.

குறிப்பு:—கோபம் சண்டாளம் என்று நண்பர்கூறியதை விளக்க ஒரு கதையுண்டு. அதாவது—வைதிக அந்தணரொருவர், ஒருநாள் காலை தமது நித்யானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, தம்முடைய கிராமத்தினின்றும் புறப்பட்டு அடுத்தகிராமத்திற்கு ஓரவசரவேலையாகப் போய்க்கொண்டிருந்தார். இவருடைய எண்ணமெல்லாம், தாம்போகும் வேலைமேலிருந்தபடியால் வழியில் எதிராக இன்னொர் வருகின்றனர் என்பதை இவர் கவனிக்கக்கூடவில்லை.



இப்படி இவர் போம்போது இவருக்கெதிராக ஒரு புலைச்சி வந்துகொண்டிருந்தாள். அவளும் தன் எண்ணத்தைத் தான்போகும் வேலையில் செலுத்தி யிருந்தபடியால் வேதியர் வருவதைக் கவனிக்கவில்லை. தெய்வாதீனமாய் இருவரும் ஒருவரையொருவர் நெருங்கிவிட்டனர். அப்போது ஐயர் அந்தப் புலைச்சியைப் பார்த்து,

"அடி பாபி! தோஷி! உனக்குக் கண் குருடாகவாபோய் விட்டது. கொஞ்சமும் பயமில்லாமல் என்னைச் சமீபித்தாயே" என்று பலவாறு இகழ்ந்து பேசிக்கூச்சலிட்டார். புலைச்சி தான் அறியாமற் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி எவ்வளவோ கெஞ்சிக்கேட்டாள். ஐயர் அடங்கினாரில்லை; வரவர அவருக்குக் கோபம் பெருகிக்கொண்டே வந்தது. பார்த்தாள் புலைச்சி. "இனி நாம் சும்மா இருப்பது நல்லதல்ல. இவருக்குப் புத்திபுகட்டவேண்டு" மென்று நினைத்து ஐயரது கைகளைப் பிடித்துக் கொண்டு "துரையே! ஏன் கூச்சலிடுகிறீர்? எவராவது கண்டால், நம்மை என்னஞ் செய்வார்கள்" என்று அவர்மேல் விழுந்து கட்டிக்கொண்டாள். ஐயருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. "இந்த அநியாயமுமுண்டா?" என்று கதறினார்.

இவர்களுடைய கூக்குரலைக்கேட்டு அக்கம் பக்கத்திருந்தவர் கும்பு கூடி இருவருடைய வாக்குமூலத்தையும் கேட்டு, புலைச்சியைக் கண்டித்தார்கள். அவள் 'ஆண்டமாரே! இவரோ எல்லாக்கலைகளையும் ஓதிவைதிக சிகாமணியா யிருந்தும் நான் தெரியாமற்செய்த குற்றத்தைப் பொறுக்கும் எண்ணங் கொள்ளாமல் என்னை மென்மேலும் தூஷித்து அடங்காக் கோபத்திற்கு இடந்தந்தபடியால் நான் இவரை என் பர்த்தாவாகக் கொண்டு தழுவிக்கொண்டேன். நானோ சண்டாளத்வம் படைத்தவள். இவரோ கோபமாகிற பரமசண்டாளத்வத்தைக் கைக்கொண்டவர். ஆகையால் நாங்களிருவரும் ஏன் சமத்வமடைந்து ஒருவரை யொருவர் நேசிக்கலாகாது" என்றாள்.

இதுகேட்ட அனைவரும் ஐயரின் அவிவேகத்திற்கு இரங்கி அவருக்கு வேண்டிய புத்திமதி சொல்லி அவரையனுப்பி விட்டனர். இதனால் "கோபம் பரமசண்டாளம்" என்பதை நாம் அறியலாமன்றோ—தீண்டப்படாதார் வகுப்பைச்சேர்ந்த இதனையும் நாம் தீண்டாதிருத்தலன்றோ உத்தமம்? ப-ர்.

---

## ஆனந்தபோதினி வாழ்த்து

(ஆறுமுக வடிவேலவனே கலியாணமும் செய்யவில்லை என்றமெட்டு)

(1) ஆனந்த போதனை கள்புரி யன்புடை
யானந்த போதினியே—உன்றன்
ஞான அறிவினைப் போற்றி எத்த எர்
நராலு மாகாதே.

(2) உன்சொல்லை யோர்முறை ஓதியுணர்ந்தவர்
உலகினில் வேறு நட்பு—கொள்ள
உன்னுவரோ உன்னின் உறுதியாகாதது
உண்மையே முக்காலும்.

(3) கைம்மாறு வேண்டாது வானம் பொழிகின்ற
காரணம் போலவே தான்—நீயும்
செய்மார்க்கம் நன்றுகாண் சென்றபத் தாண்டாகத்
தேசத்திற் காகவே தான்.

(4) தானம் புரிந்திடச் சொல்லுகின்றாய் தயை
தனைக்கொளச் சொல்லுகின்றாய்—நல்ல
தேனமிர் தந்தன்னை யொத்திடும் நின்மொழி
தித்திப்பே யாவருக்கும்.

(5) பண்புடைப் பாரத நாட்டினு சாரத்தின்
பழக்கத்தை நீக்கிவிட்டுப்—புதுப்
பெண்களாய் மாறிய நம்மாதர் தங்கட்குப்
பிரியமாய்ப் புத்தி சொல்வாய்.

(6) ஆதியில் நின்றே யனுகரீக ஞான
அயல்நாட்டு மக்களைப் போல்—நாம்
பாதியில் நின்றெய்த வில்லை நாகரீகம்
பண்டையில் நின்றே பெற்றோம்.

(7) நாட்டினில் ஏழைகள் பட்டினி யாய்நிற்க
நாமட்டும் உண்டுடுத்தி—வெகு
மேட்டிமையாகத் திரிந்திடிற் போதாது
நாட்டினஞ் சுற்றிடு வீர்

(8) என்று நம்மிந்திய நாட்டிற் குரைக்கின்ற
இயல்புனக் குண்டே வெகு—நன்று
நன்றென் றுணர்ந்து நடந்திடு வாரில்லை
நாட்டி லனேகமாக.

(9) தாய்நாடும் சமயமும் தமிழுங்கைத் தொழில்களுந்
தாஞ்செழித் திடுவதற்கே—நீயன்
பாய்நாடு நோக்கம் நிறைவேற ஈசனைப்
பாடித் தொழுவோமே.

(10) குறைந்த சந்தாவுடன் நிறைந்த வுரைகளைக்
கொண்டு மாதந் தோறும்—எங்கும்
பறந்துசென் றெல்லோர்க்கு நின்மொழி யதனாலே
பட்சமே காட்டிடுவாய்.

(11) ஆனந்தா ! நின்னருமைத் தந்தையாகிய
அன்பர் முனிசாமி—முதலி
யாரவரும், நீயும், நின்னை வளர்க்குஞ்சந்
தாதாரர்க ளுடனே,

(12) நின்னைப்பயிற்று நல் ஆசிரியரோடு
நேயவுரைகள் தானம்—புரி
நன்னயராளே ரனைவரும் புவிதனில்
நன்கு நீடூழி வாழ்க !

சுபம். அ. ச. அருணசலசெட்டியார்.

---

## பகவத்கீதை வசனம்.

(10-வது தொகுதி 476-ம் பக்கத் தொடர்ச்சி.)

அல்லாமலும் பகவான் கூறுவது:-ஹே அர்ச்சுனா! பின்னரும், யாகத்திலும், தவத்திலும், தானத்திலும் இருக்கும் நிலையும் சத்தேயாகும். அவ்வர்த்த சம்பந்தமாகிய கருமமும் சத்தே.

ஹே கௌந்தேய! யாகத்திலும், தபசிலும், தானத்திலும் எவ்வுண்மையிருக்கின்றதோ, அதாவது தற்பரமாக எவ்வடிவ நிஷ்டையுளதோ அதனிருப்பும் அறிஞர்களாற் சத்தெனப்படும். அவ்வர்த்த சம்பந்தமாகிய கருமமும் சத்தே. மகமுதலிய அர்த்தங்களில் உண்டாகிய அவற்றின் அனுகூல கருமவிசேஷம் அவ்வர்த்த சம்பந்தமாம். அல்லது எந்தப் பிரஹ்மத்திற்கு இச்சத்தென்னும் பெயர்சொல்லப் பெற்றதோ அதுவே அர்த்தம்; விஷயம் எதற்கோ அது அவ்வர்த்தமாம். இத்தகைய சுத்தப்பிரஹ்ம விஷயஞானத்தின் அனுகூலகருமம் அல்லது ஸ்ரீ பகவதர்ப்பண புத்தியாலே செய்யுங் கருமம் அல்லது பரமேசுர அடைவின்பொருட்டுச் செய்யுங்கருமம் அவ்வர்த்த சம்பந்தகருமமாம். இக்கருமத்தையும் அறிஞர் சத்தெனக் கூறினர். சத்தென்னும் பெயர் யாகாதிகரும இடையூறு நீக்குதற்பொருட்டுச் சமர்த்துடையதாதலால் மிகவு மேன்மையதாகும். ஓம் தத் சத் என்னும் பிரஹ்ம நாமத்தின் ஒவ்வொரு ஓங்காராதிரூப அவயவத்திற்கும் இவ்வித பெருமையானதிருந்தால், அவையாவுங் கூடியதற்கு, அத்தியந்த அற்புதமகிமையுளதாமெனக் கூறவேண்டுவ தென்னே ?

அருச்சுனன்வினா:—ஹேபகவானே ! ஆலசிய முதலிய தோஷத்தாலே, நூல்விதித்த விதியைவிடுத்துச் சிரத்தையுடையவனாகிக் கேவலம் பெரியோரின் வியவகார மாத்திரத்தாலே மகமுதலியவற்றைச் செய்பவன் பிரமாதவசத்தால் அவற்றில் இடையூறடைந்து ஓம் தத்சத் தென்னும் பிர்ஹ்ம நாமத்தாலே அந்த இடையூற்றின் நீக்கம் உளதாயவழி, சிரத்தை யில்லாமையாலே நூல்விதித்த விதியைப் பரித்தியாகித்துத் தனது இச்சையாலே சிற்சில யாகாதிகளைச் செய்யும் ஆசுரனுக்கும் அந்நாமத்தாலே இடையூறு கழிந்துவிடுமாதலின், யாகாதிகளின் சாத்விகத் தன்மைக் கேதுவாகிய சிரத்தைக்கு யாதொருபயனு மில்லையல்லவா ?

பகவான் விடை:—ஹே பார்த்த ! அசிரத்தையுடன் ஹோமஞ் செய்வதும், தானஞ்செய்வதும், தவஞ்செய்வதும், மற்றெக்கருமஞ் செய்வதும் ஆகியயாவும் அசத்தென்னப்படும். அதுபற்றி யல்லவா சிரத்தையில்லாத கருமம் பரலோகத்திலும் இகலோகத்திலும் பயன் கொடாமற் போகின்றன. ஹேபற்குன ! அவ்வண்ணஞ் சிரத்தை யில்லாமல் அக்கினியிற் செய்யும் ஹவனமும், பிராஹ்மணர்க்கீயும் தங்கமுதலியவற்றின்றானமும், காய வாக்குக் கருத்தென்னும் மூவகையாலாய தவமும், இவற்றினும் வேறாகிய துதி நமஸ்காராதிகளும், இவைபோன்ற மற்றெவையுமே அசத்தெனப்படும்; அதாவது அக்கருமம்யாவுமே அசாதுவேயாம்; ஆகையால் சிரத்தையில்லாமற்செய்த அக்கருமங்கட்கு ஓம் தத் சத் தென்னும் நாமத்தாலே சாதுபாவஞ் செய்யப்படுவதில்லையாம். கல்லின்மேல் முளையுண்டாகத் தகுதியே யற்றதுபோற் சிரத்தையற்றகருமங்களில் எவ்லாவகையாலும் சாதுத்தகைமையாகிய யோக்கியதையே யுண்டாகாதாம். ஆகவே அவற்றில் ஓம் தத்சத் தென்னும் நாமத்தாலே சாதுபாவம் ஒருகாலும், சம்பவியாதாம். சிரத்தையில்லாத கருமம் எந்தஹேதுவினாலே அசத்தெனப்படுமெனின், அந்த ஹேதுவைச் சொல்லுகிறேன் கேட்பாயாக: அசிரத்தையிலே செய்த கருமம் பரலோகத்திலும் பயனையளியாதாம்; ஏனெனின், சிரத்தையற்ற

கருமம் இடையூறு உடையதாகலின் தருமரூப அபூர்வத்தை யுண்டாக்காதாம். அபூர்வமில்லாமல் துறக்கம் எய்தாதல்லவா? மற்றும் இகலோகப் புகழ்ச்சிப்பயனும் இல்லையாகும்; ஏனெனின், சிரத்தையில்லாதவனைச் சிட்டர்துதியார், நிந்தையே செய்வராகலின் சிரத்தையில்லாது செய்யும் யாகாதிகள் இகபரலோகப் பயனில்லாதவையே. ஆகையால் மனத்தூய்மையின் பொருட்டு அதிகாரிசாத்விக சிரத்தையாலே சாத்விக யாகாதிகளைச் செய்தல்வேண்டும். சிரத்தையுடன் செய்த அவற்றின் கண்ணே யிடையூறுண்டாகிலோ ஓம் தத்சத்தென்னும் பிரஹ்ம நாமத்தை யுச்சரித்துயாகாதிகளை இடையூறற்றவை யாக்கவேண்டும். இந்த 17-வது அத்தியாயத்தில் நிர்ணயிக்கப்பட்ட பொருள், ஆலசியமுதலிய தோஷத்தால் நூல்விதியை விடுத்துச் சிரத்தையுடன் தந்தை, தந்தையின் றந்தைமுதலிய பெரியவரது விவகாரமாத்திரையாலே யாகாதிகளில் முயன்று சாஸ்திரவிதியை விடுதலாகிய ஆசுரதருமம், சிரத்தையோடுங் கூடிய கருமங்களின் அனுட்டானரூப தேவதருமம் என்னும் இரண்டோடுங் கூடலின், அவற்றைச் செய்வோர் அசுரரா? தேவரா? என்னும் அர்ச்சுனனது சம்சய விஷயத்திலடங்கியவருள் யாவர் இராஜத தாமத சிரத்தைவாயிலாக இராஜததாமத ரூபயாகாதிகளையே செய்வரோ அவர் அசுரராவர்; அவர் சாஸ்திரமறைந்த ஞானசாதனங்களின் அதிகாரியரல்லர்; யாவர் சாத்விக சிரத்தைவாயிலாகச் சாத்விக யாகாதிகளையே செய்வரோ அவர் தேவராவர்; அவர்கள் சாதனங்களின் அதிகாரியர் ஆவர் என்று ஸ்ரீபகவானனவர் ஈண்டுச் சாத்விகாதி மூவகைச் சிரத்தைவாயிலாக ஆகாராதிகளின் சாத்விகாதி மூவிதத்தைச் சித்தஞ்செய்தருளினர் என்பதாம்.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

## 18-வது அத்தியாயம்.

[முன்னர் 17-வது அத்தியாயத்திற் சிரத்தையின் சாத்விகாதிமூவகை வேற்றுமையையும், ஆகாரயாக தவதானம் என்னும் நான்கினது சாத்விகாதி மூவகைப் பேதத்தையும், கருமிகளின் சாத்விகாதி மூவகைப்பேதத்தையும் கூறியருளினர். சாத்விகர்களைக் கவரும்பொருட்டும், இராஜசதாமசர்களை விடற்பொருட்டும், இப்போது சந்யாசத்தின் சாத்விகாதிமூவகைப் பேதத்தைக் கூறியருளிச் சந்யாசிகளின் மூவகைப் பேதத்தையும் அவசியங் கூறியருளல் வேண்டும். ஆன்ம சாக்ஷாத்காரத்தின் பின்னர்ச் செய்யத்தக்கதாகிய பலபூதசர்வ கருமங்களின் வித்வத் சந்நியாசமோ முன் 14-வது அத்தியாயத்திற் குணாதீதரூபமாய் வியாக்கியானித்தருளப்பெற்றது; ஆகையால் பலமாய வித்வத் சந்நியாசமோ சாத்விகாதி மூவகைப் பேதத்தகுதியதாகாதாம்; ஆன்மஞானத்தின் முன் அதனையடைதற் பொருட்டுச் சர்வ கருமங்களின் சந்யாசத்தை ஆன்மஞான மடையவேண்டு மென்னு மிச்சையுடையவன் வேதாந்த வாக்கியங்களின் ஆராய்ச்சியின் பொருட்டுச் செய்வன்; அது விவிதிஷா சந்யாசமாம்; அதுவும், "இக்கருமகாண்டரூபவேதம் திரைகுண்யத்தை விஷயஞ்செய்வதாம். நீ அத்திரை குண்யமற்றவனுகுதி" என்பதாதியதிருவாக்குக்களாலே இரண்டாவது அத்தியாயத்தில் நிர்க்குணரூபமாக வியாக்கியானித் தருளப்பெற்றதாதலின் சாத்விகாதி மூவகைத் தாக்கத் தகுதியதாகாதாம்; பலவடிவ வித்வத் சந்நியாசமும் விவிதிஷாசந்யாசமும் குணாதீதசன்யாசம் எனப்பெறும். ஆன்மசாக்ஷாத்காரத்தையடையாதவர்கள், அதனிச்சைவடிவ விவிதிஷைபு முண்டாகாதவர்கள்; தத்துவவித்தன்மையற்ற ஜிஞ்ஞாசுத்தன்மை யில்லாதவர்களின் கருமசந்நியாசம்



"அவன் சந்நியாசியும் யோகியுமாவன்" என்பதாதிய திருவாக்குக்களாலே முன் கௌணசந்யாசமாய்க் கூறியருளப் பெற்றதாகும்; அதனது சாத்விகாதிமுப்பேதங்கூடும்; அதனை விசேடமாயறியும் வேட்கையனாகிய அருச்சுனன் ஸ்ரீ பகவானை வினாதல்.]

அருச்சுனன் கூறல்:—ஹே மகா பாகுவாகிய தேசிகோத்தமரே! ஹே இருஷீகேசரே! ஹே கேசியைக் கொன்றவரே! சந்யாசத்தினதும் தியாகத்தினதும் சொரூபத்தை யான் தனித் தனி யறிய விரும்புகிறேன். ஆகையா லென்மீதுள்ள தயையா லவற்றைக் கூறி யருளவேண்டும்.

ஹே பகவானே! எவர்கட்கு ஆன்மஞான முண்டாகவில்லையோ, அதனிச்சை வடிவ விவிதிஷைபு முண்டாகவில்லையோ, அத்தகைய கருமாதிகாரி செய்த சிறிது கருமத்தைக் கவர்ந்து சிறிதின்பரித்தியாகமியாதோவது தியாக அம்சரூப குணயோகத்தாலே கௌணீ விருத்தியாகச் சந்யாச மெனப்படும். இங்ஙனம் சித்தசுத்தியின் பொருட்டு அறிஞனல்லாத கரும அதிகாரி செய்த எல்லா வகையாலும் கருமங்களின்றி யாகரூபமில்லாததும் ஏகதேச தியாகமுமாகிய சந்யாசம் எஃதாமோ அதன் சொரூபத்தைச் சாத்விகாதி முப்பேதத்தாலே யறிய விரும்புகின்றேன்; தியாகத்தின் சொரூபத்தையும் அவ்வாறே யறிய ஆசைப்படுகின்றேன். சந்யாசம் தியாகம் என்னும் இரண்டு சப்தமும் கடபட சப்தங்களைப்போல வேறு வேறு பொருளைக் கூறுவனவா? அல்லது கடகலச சப்தங்களைப் போல ஒரே பொருளைக் கூறுவனவா? அவற்றுள் முதற் பக்ஷத்தை யங்கீகரிக்கிலோ தியாகவடிவத்தைச் சந்யாசத்தினும் வேறாக்கி யறிய யான் இச்சிக்கின்றேன். இரண்டாவது பக்ஷத்தை யங்கீகரிக்கிலோ அவ்விரண்டன் பிரவிருத்தியின் நிமித்த பூதமாகிய உட்பட்ட உபாதியின் பேத மாத்திரம் கூறி யருளவேண்டும் அவ்விரண்டனுள் ஒன்றன் வியாக்கியானஞ் செய்தே இரண்டன் வியாக்கியானம் சித்தமாம். மகாபாகு = பெருந் தோள்களை யுடையோன், கேசியைக் கெடுத்தோன் = கேசி யென்னும் அசுரனைக் கொன்றோன், என்னும் இவ்விரண்டு சம்போதனத்தாலே அர்ச்சுனன் ஸ்ரீ பகவானிடத்தே வெளியுபத்திரவத்தை நீக்குமாற்றலைக் குறிப்பித்தனன். ஹ்ருஷீக மென்பது பொறியாம்; அதனீசன் = ஏவுபவன், ஹ்ருஷீகேசனவன்; இதனாலே உட்காமக் குரோதாதியுபத்ரவத்தை நீக்குமாற்றலைக் குறிப்பித்தனன். ஸ்ரீ பகவானிடத்திருக்கும் மிகுந்த பக்தியினாலே மூன்று சம்போதனங்கள் தந்தனன். கரும அதிகாரியாகிய அறியான் செய்த சந்யாசத்தில் மொழிந்த யாகதிகளின் ஒப்புமையு மிருக்கும்; குணாதீதரூப இருவகைச் சந்யாசத்தின் ஒப்புமையுமிருக்கும். மக முதலியவற்றைக் கரும அதிகாரியே செய்வதுபோலச் சந்யாசத்தையுஞ் செய்வன்; இதுதான் சந்யாசத்தில் மக முதலியவற்றின் ஒப்புமை. குணாதீத மெனப் பெயரிய இருவகைச் சந்யாசம், சந்யாச சப்தத்தானே கூறியதே போல இச்சந்யாசமும் கூறலின் இதில் அவ்விருவகைச் சந்யாசத்தின் ஒப்புமையாம். இவ்வாறு மகம் குணாதீத மென்பவற்றின் ஒப்புமையாலே இதில் முக்குணத் தன்மையின் சம்பவ அசம்பவ மிரண்டாலு முண்டாம் சம்சயமோ முதல் வினாவின் விரையாம். சந்யாசம் தியாகமென்னும் இரண்டு சப்தங்கட்கும் கடகலச மென்னும் இரண்டு சப்தங்கட்குளதுபோலும் பரியாயத்தன்மை யிருத்தலின் கருமத்தியாக ரூபத்தாலும், கருமபலத்தியாக ரூபத்தாலும் அவ்விரண்டின் விலக்ஷணத்தன்மைக் கூற்றாலுண்டாகிய ஐயமோ இரண்டாவது வினாவின் விரையாமென உய்த்துணர்க.

(தொடரும்.) சீடன்.

## ஓர் விஞ்ஞாபனம்.

நமது ஆனந்தபோதினியின் அபிமானிகளாகிய நண்பர்களுட் பலர், போதினிக்குச் சந்தாத் தொகையை உயர்த்திப் பக்கங்களையும் அதிகமாக்க வேண்டுமென்று சில வருடங்களாக வற்புறுத்தி எழுதி வந்தனர். அங்ஙனம் அவர்கள் எழுதும் போதெல்லாம் நாமும், "சந்தாநேயர்கள், தங்கள் நண்பர்களையும் மேன்மேலும் சந்தாதாரராகச் சேர்த்து உதவிபுரிந்து வந்தால், இப்போதிருக்கும் சந்தாவிலேயே பக்கங்களை அதிகப்படுத்திப் போதினியை வெளியிட்டு வருவோம்" என்று சிற்சில சஞ்சிகைகளில் எழுதிக்கொண்டு வந்தோம். அதன்படி சந்தாதாரர்கள் அதிகப்படவில்லை. ஒவ்வொரு வருடக்கடைசியிலும் பத்திரிகை வி. பி. அனுப்பபும்போது சில ஆயிரக்கணக்கான சந்தாநேயர்கள் அதனைத் திருப்பி விடுகிறார்கள். அவ்வாறு குறைந்த சந்தாதாரர்களுக்குப் பதிலாக வேறு சந்தாதாரர்களைச் சேர்த்து முன்கணக்குப்போலாக்குவதற்கு நாம் மிக்க பிரயாசையெடுத்துக்கொள்கிறோம். அதனால் நமக்கு எவ்வளவோ கஷ்டமுண்டாகி வருகிறது.

இவ்வருடத்தில் மாத்திரம் வி. பி. யனுப்பிய தேதியிலிருந்து இதுவரை 26 தினங்களுக்குள் 2166 வி-பி-கள் திரும்பியிருக்கின்றன. முடிவாக இவ்வளவு வரைதிரும்பி யிருக்கின்றனவென்பதைப் பற்றிப் பின்னர் தெரிவிப்போம். இவ்வாறு நேயர்களிற் பலர் திருப்பிவிடுவதனாலேயே தமிழ் நாட்டில் பத்திரிகாபிமானம் குறைந்து வருகிறதென்பது தெரிகிறது. எனினும், இவ்வாண்டில், நம் போதினியில் மிக்க அபிமானமுள்ள நேயர்கள், குறைந்துபோன சந்தாதாரர்களுக்குமேல் இரட்டிப்பான சந்தாதாரர்களைச் சேர்த்துவிடுவார்களென்னும் நம்பிக்கையால், முன் 40 பக்கங்களுடன் வெளிவந்த நம் சஞ்சிகையை மேலும் 8 பக்கங்கள் சேர்த்து 48 பக்கங்களாக இந்த ஆடிமீ தொடக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். அடுத்தமாதம் பத்திரிகை வெளிவருவதற்குள் குறைந்த சந்தாதாரர்களுக்குப் பதில் சந்தாதாரர்கள் நிரம்பி, மேலும் அதிக சந்தாதாரர்கள் சேரும் பக்ஷத்தில், பத்திரிகையை அதிகரித்த இதேபக்கங்களுடன் வெளிப்படுத்தி வருவோம். அவ்வாறின்றிச் சந்தாதாரர்கள் குறையும் பக்ஷத்தில் சஞ்சிகையை முன்னிருந்தது போலவே 40 பக்கங்களுடையதாக்கி விடுவோம். ஆதலின், நேயர்கள் இந்த அதிகரித்த பக்கங்களுடனேயே பத்திரிகை வெளிவரும்படி மேலும் சந்தாதாரர்களைச் சேர்க்க முயற்சியெடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.

## ஒரு வேண்டுகோள்.

அகஸ்தியரால் இயற்றப்பெற்ற சரசாஸ்திரமாகிய "அங்காதிபாகம்" என்னும் நூலும், முதற்பாவலரியற்றிய திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மருள் பரிமேலழகர் தவிர ஏனைய புலவர்களின் உரைநூல்களும் எவரிடமேனும் இருந்து நமது ஆபீசுக்கு அனுப்பினால் அந்த நூல்களை யச்சிட்டு உலகத்திற்குப் பயனுமாறு வெளியிடப் பிரியங்கொண்டிருக்கிறோம்.

பத்திராதிபர்.

---



## அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(10-வது தொகுதி 478 ம் பக்கத் தொடர்ச்சி.)

லாயர் கோழையல்லவென்று நாம் முன்னமே கூறியிருக்கிறோம். அவன் ஆட்கள் அம்மாதிரி கூறியதே லாயர் பாய்ந்துபோய் ஆனந்தஸிங் கைப்பிடிக்க முயன்றான். ஆனந்தஸிங் மிக்க ஸாமார்த்தியத்தோடு லாயருடைய கரங்களை மணிக்கட்டுகளருகில் பிடித்துக் கொண்டான்.

உடனே லாயர் முன்விழுந்த மனிதனைப்போல் புழுப்போல் துடிதுடித்து ஆனந்தஸிங்கின் கரங்களை விட்டதே ஆவிசோர்ந்து தரையில் குப்புற விழுந்தான். ஆனந்தஸிங் புன்னகையோடு "யாரோடு போராடத் துணிந்தோம் என்று உங்களுக்குத் தெரியவில்லை" யென்றான்.

லாயருக்கு இவன் யார் என்று மிக்க வியப்புண்டாய்விட்டது. அவன் தேகத்தில் முழுதும் அக்கினிப்பிழம்பு நுழைந்ததுபோலாகிக் கடைசியில் தேகமுழுதும் சற்றுநேரம் மரம்போலாய்விட்டது. இந்த அதிசய சம்பவம் ஜேபியில் வைத்துக்கொள்ளக்கூடிய ஒரு சிறு மின்சார இயந்திரத்தால் உண்டாவது. இரண்டு மணிக்கட்டுகளையும் பிடித்துக்கொண்டவுடனே மின்சாரம், பிடிபட்டவனுடைய இருகரங்களின் வழியாகவும் சில்லென்று ஏறிச் சகிக்கமுடியாத இம்சையையுண்டாக்கிவிடுகிறது.

லாயர் மெதுவாய்ச் சமாளித்து எழுந்து நின்று தன் ஆட்களை நோக்கி கண்களால் சமிக்ஞை செய்துகொண்டே "பெரிய மனிதர்களே! நீங்கள் இனிப் போகலாம்" என்று கூறிவிட்டு மெதுவாய் நாற்காலியில் உட்கார்ந்து உள்ளே சிந்தித்துக் கொண்டே மேலுக்கு ஆனந்தஸிங்கிடம் சம்பாஷிப்பவன்போல் அபிநயிக்கத் தொடங்கி, "சரி நீ எவ்வளவு தொகைகேட்கிறாய்?" என்றான்.

லாயர் காலங்கழிப்பதற்காகப் பேசத்தொடங்கினானே யன்றி உண்மையில் காரியார்த்தமாகப் பேசவில்லை. அவ்வாறு பேசிக்கொண்டே ஏதோ கடிதங்களைத் தேடுபவன்போல் மேஜையின் அறைக்குள் கைவிட்டுக்கொண்டு ஒருவித சிறு மின்சார இயந்திரத்தை யொழுங்கு செய்துகொண்டிருந்தான். சற்றுநேரம் சிந்தித்தபோது ஆனந்தஸிங்கின் தந்திரம் அவனுக்கு விளங்கிவிட்டது. கொஞ்சகாலத்திற்கு முன்பு அத்தகைய மின்சார எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு பிரக்யாதிபெற்ற துப்பறிவோர்களால் உபயோகப்படுத்தப்படுகிறதென்று, தான் ஒரு பத்திரிகையில் வாசித்தது அவன் நினைவிற்கு வந்துவிட்டது.

ஆனந்தஸிங் லாயர் கேட்ட கேள்விக்கு "என் நிபந்தனைகளை முன்னமே கூறியிருக்கிறேன்" என்றான்.

லாயர் :—அந்த நிபந்தனைகளுக்குப் பதில் இருபத்தையாயிரம் ரூபாய் நீ பெற்றுக்கொள்ளலாம்.

ஆனந்தஸிங் :—நீ யொரு பெரிய தவறு செய்துவிட்டாய்.

லாயர் :—என்ன தப்பிதம்?

ஆனந் :—நீ என்னையும் உன்போன்ற பெரிய அயோக்கியனென்றும் கள்ளப்பயலென்றும் எண்ணிக்கொண்டாய்.

லாயர் :—அப்படியாயின் என் ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளமாட்டாய்?

ஆனந் :—மாட்டேன்.

லாயர் :—நாங்கள் பெற்ற இலாபத்தை யடியோடு இழந்துவிட வேண்டுமென்கிறாய்?

ஆனந்:—ஆம். கண்டிப்பாய் இழந்துவிட வேண்டியதே.

லாயர் எழுந்து அறையைவிட்டுச் சென்று, இன்னும் வீட்டிலேயே மறைந்திருக்கும் தன் கூட்டாளிகளிடம் மின்சார இயந்திரத்தைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறி, அவர்களுக்குப் பயமில்லாதிருக்கச்செய்து, எக்காரணத்தாலும் இவன் இதைவிட்டு உயிரோடு வெளிச்செல்லவிடலாகாது" என்று கூறிவிட்டுத் திரும்பி யறைக்குள் வந்து உட்கார்ந்து ஆனந்தலிங்கை நோக்கி,

"நீ சுத்த மூடனாகிய கள்ளப்பயல்" என்றான்.

ஆனந்:—"ஓகோ மரியாதையான சம்பாஷணையி லிறங்கிவிட்டாய்போலிருக்கிறதே" யென்றான்.

லாயர்:—ஆம். உன் கள்ளத்தனத்திற்கெல்லாம் நான் ஏமாறுகிறவனல்ல. இந்த மின்சார வித்தைகளெல்லாம் நான் அறியாத கள்ளவித்தையல்ல.

ஆனந்:—ஆயினும் முதலில் திப்பிரமையடைந்துவிட்டாய்.

லாயர்:—நீ யார் பட்சத்தில் வேலை செய்கிறாய்?

ஆனந்:—அதைப்பற்றி யுனக்கு அக்கரையில்லை.

லாயர்:—நீ தைரியமுள்ள பெரிய கள்ளப்பயல். ஆனால் நீ தவறான மனிதனை யேமாற்ற முயன்றாய்.

ஆனந்:—ஓ! ஆம். நான் மறந்துவிட்டேன். நான் யாரோடு விவகாரம் நடத்துகிறேனென்பது எனக்குத் தெரியாதுதான்.

லாயர்:—"ஆம். உனக்குத் தெரியாதுதான்" என்றான்.

மறுநிமிடம் முன்வந்த மூவரும் இன்னொருவனை யழைத்துக்கொண்டு நான்குபேராய் மறுபடி யறைக்குள் வந்தார்கள். அவர்கள் நால்வரும் கொலைபாதகத்திற்கும் அஞ்சாத பரமதுஷ்டர்கள். லாயர் அவர்களை நோக்கி,

"நண்பர்களே! உங்கள் கைதியைக் கழுத்தில் பற்றிப் பிடியுங்கள். தவறாமல் கொல்லலாகும்" என்றான்.

லாயர் அவ்வாறு கூறியதே அவர்கள் நால்வரும் தங்கள் கைத்துப்பாக்கிகளை யெடுத்து ஆனந்தலிங்கின் மார்பிற்கு நேராய் நீட்டிப் பிடித்தார்கள். அவர்களில் ஒருவன் ஆனந்தலிங்கை நோக்கி, "உன் கரங்களை விரித்து நீட்டிக்கொள்; இன்றேல் இந்த நிமிடம் செத்தாய்" என்றான்.

ஆனந்த :—"என்னைப் பிடிக்க உங்களுக்கு வாரன்ட் எங்கே?" என்றான்.

நால்வரில் ஒருவன்:—"இதோ வாரன்ட்" என்று தன் துப்பாக்கியின் குந்தாவைத் தட்டிக்காட்டினான்.

ஆனந்:—"கடைசியில் கடவுளைப் பிரார்த்திக்கவாவது இரண்டு நிமிடம் அவகாசம் கொடுங்கள்" என்று வேண்டிக்கொண்டான்.

அத்துஷ்டர்:—"உடனே கரங்களை நீட்டு" என்றார்கள்.

ஆனந்:—"அப்பா! ஒரு தோத்திரம் கூறவாவது அவகாசம் கொடுங்களேன்" என்று இரக்கமாய்க் கேட்டான்.

அப்போது லாயர்:—உன் கரங்களை விரித்து நீட்டு" என்றான்.

ஆனந்:—"ஒருகாலுமில்லை" என்றான். (தொடரும்.)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

---



மலாய் நாட்டிலுள்ளவர்க்கோர் விஞ்ஞாபனம்.

நம்முடைய ஆனந்தபோதினி ஏஜண்டு S. இராமாநுஜாசாரியர், நாளது 1925ஆம் ஜூலைமீ பினாங், சிங்கப்பூர் முதலிய மலாய்நாடுகளில் கொஞ்சக்காலம் சுற்றுப்பிரயாணஞ்செய்து போதினிக்குச் சந்தாதாரர்கள் சேர்க்கவும், நம் பிரசுர புத்தக விற்பனைகளுக்கு ஆர்டர்கள் வாங்கவும் புறப்பட்டு வருகிறார். முதலில் பினாங்கில் இறங்கிப் பின்னர் மற்ற இடங்களுக்குச் செல்வார். ஆதலின், அந்நாடுகளில் ஆங்காங்குள்ள நம் சந்தாநேயர்களும், மற்றைய தமிழபிமானிகளும், நாட்டுக்கோட்டை நகரத்தாராகிய கனவான்களும் அவருக்கு வேண்டிய உதவிசெய்து நம் ஆனந்தபோதினிக்குச் சந்தாதாரராகச் சேர்ந்தும், தங்கள் நேயர்களையும் சேர்த்தும், நம் பிரசுர புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்தும் நமக்கு உற்சாகமூட்டும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.

கனம் ராவ்சாஹேப் கிருஷ்ணராவ் போன்ஸலே அவர்களின் உத்தியோக பதவியின் உயர்வு:—முன், பலவருடங்களாக, சென்னை மாகாண கவர்ன்மென்ட் பரீக்ஷைகமிஷனர் ஆபீஸ் மானேஜராக இருந்துவந்த கனம் ராவ்சாஹேப் கிருஷ்ணராவ் போன்ஸலே அவர்கள் செய்துவந்த வேலைத் திறமையைப்பற்றித் துரைத்தனத்தார் நன்குமதித்து, 1922ஆம் அவர்களை, கமிஷனரின் உதவிக்காரியதரிசி (அஸிஸ்டென்ட் ஸெக்ரிடெரி) என்ற பதவிக்கு உயர்த்தினார்கள். அப்பதவியிலிருந்து அவ்வருடமுதல் இவ்வாண்டுவரையில் அவர்கள் உத்தியோக முறையில் காட்டிவந்த திறமைகள் எண்ணில. அவற்றை உத்தேசித்து, ஆட்சியாளர் மேலும் நம் போன்ஸலே அவர்களை 1925ஆம் ஜூன்மீ மேற்கூறிய உதவிக்காரியதரிசிபதவியிலிருந்து காரியதரிசி (ஸெக்ரிடெரி) ஸ்தானத்துக்கு உயர்த்தியிருக்கிறார்கள். இந்நிகழ்ச்சி நம் நாட்டவரெல்லோருக்கும் மிக்கதிருப்தியைத் தரக்கூடியதாதலின், நாம் இதுபற்றி அளவிலா ஆனந்தத்தை யடைவதோடு, மற்ற எல்லோருமே சந்தோஷங் கொண்டாடுவார்களென்று நம்புகிறோம். கனமிக்க போன்ஸலே அவர்கள், வித்யாவிஷயமாகவும், வேறு பொது நன்மையான விஷயமாகவும் நம்மவர்க்குச் செய்துவரும் பேருதவியும், நலங்களும் மிகப் பாராட்டத்தக்கன. இத்தகைய மகோபகாரிக்கு எல்லாம் வல்ல இறைவன் நிறைந்த ஆயுளும், சிறந்த செல்வமும் நல்கி என்றென்றும் இன்னருள் புரிவானாக.

* * * * * *

பீகார் ஒரிசா அரசாங்கத்தார் மணிக்கூண்டில் வைப்பதற்காக 16000-ரூபாய் மதிப்புள்ள ஒரு கடிகாரத்தை வாங்கியிருக்கிறார்களாம். அது மணியடித்தால் ஆறு மைல் கேட்குமாம்.

* * * * * *

மேல்நாட்டில் பச்சை மரங்களில் பலவகைச் சாயங்களைச் செலுத்தி அவற்றைப் பலவகை நிறங்கள் அடையுமாறு செய்கிறார்கள். பறவைகளுக்குக் கேடற்ற பலவகைச் சாயங்களை உணவுடன் சேர்த்து ஊட்டுவதால் அவற்றைத் தாங்கள் விரும்பும் அழகிய நிறங்களை அடையுமாறு செய்கிறார்கள்.

## “ஆனந்தபோதினி” பஞ்சாங்கம்.

தாரோதன வருஷம் ஆவணிமீ—கலியுகாதி 5027, சாலிவாகனம் 1848, பசலி 1335—கொல்லமாண்டு 1100-1101—ஹிஜரி 1344, இங்கிலீஷ் 1925 வருஷம் ஆகஸ்டுமீ—செப்டம்பர்மீ

| ஆவணி தேதி. | ஆகஸ்டு தேதி. | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | ஞா | துவ13-25 | புன60 | சித்60 | சிம்மரவி நா-3-55, வி. |
| 2 | 17 | திங் | திர19-58 | புன0-8 | அ0-8சி | கரிநாள். மாசசிவராத்திரி |
| 3 | 18 | செவ் | சது26-10 | பூசம்7-53 | சித்60 | |
| 4 | 19 | புத | அ●31 53 | ஆயி15-8 | சித்60 | |
| 5 | 20 | வியா | பிர36-36 | மகம்21-38 | அ21-38சி | |
| 6 | 21 | வெ | துதி40-33 | பூரம்27-13 | சித்60 | ரா |
| 7 | 22 | சனி | திரி43-15 | உத்31-50 | மர60 | |
| 8 | 23 | ஞா | சது44-55 | அஸ்35-18 | அ35-18சி | 25 துலா-சுக் |
| 9 | 24 | திங் | பஞ்45-13 | சித்37-15 | பி37-15அ | கே கு.பு செ |
| 10 | 25 | செவ | சஷ்44-23 | சுவா38-30 | சி38-30ம | |
| 11 | 26 | புத | சப்42-5 | விசா38-8 | சித்60 | |
| 12 | 27 | வியா | அ38-33 | அனு36-28 | சி36-28பி | குரு சனி சுக் |
| 13 | 28 | வெ | நவ33-50 | கேட்33-38 | ம33-38அ | நந்தநவமி |
| 14 | 29 | சனி | தச27-53 | மூல29-35 | சித்60 | கெஜலக்ஷ்மி விரதம் |
| 15 | 30 | ஞா | ஏ20-50 | பூரா24-33 | சி24-33அ | சர்வ மத்வ ஏகாதசி |
| 16 | 31 | திங் | துவா13-5 | உத்21-15 | ம21-15அ | பிரதோஷம் |
| 17 | 1 | செவ் | திர4-53 சது56-35 | திரு12-30 | சித்60 | அனந்தபத்பநாப சதுர்த்தசி |
| 18 | 2 | புத | ○48-25 | அவி6-10 | பி6-10சித் | பிரதம யஜுர்வேத உபாகர்மம் |
| 19 | 3 | வியா | பிர41... | சதை0-8 பூரட்54-48 | மர0-8சித் | பாத்ரபத பகுளம் |
| 20 | 4 | வெ | துதி34-25 | உத்50 30 | சி50-30 வ | அருன்யசயன விரதம் |
| 21 | 5 | சனி | திரி29-5 | ரேவ47-45 | ம47-45சி | பிரஹத்புமா விரதம் |
| 22 | 6 | ஞா | சது25-40 | அஸ்46-45 | சித்60 | உபநயனம் செய்ய |
| 23 | 7 | திங் | பஞ்24-13 | பரணி47-45 | சி47-45ம | மூலிகை உபயோகிக்க |
| 24 | 8 | செவ் | சஷ்22 10 | கிரு.✕. 0-43 | சி50-43அ | கிருத்திகை |
| 25 | 9 | புத | சப்27-18 | ரோ55-33 | சித்60 | சீமந்தம், உபநயனம் |
| 26 | 10 | வியா | அ31-33 | மிரு60 | மர60 | ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி |
| 27 | 11 | வெ | நவ37-13 | மிரு1-53 | சித்60 | தூர்வாநவமி |
| 28 | 12 | சனி | தச43-38 | திரு9-10 | சித்60 | கரிநாள் |
| 29 | 13 | ஞா | ஏகா50-8 | புன17-8 | சித்60 | சர்வ மத்வ ஏகாதசி |
| 30 | 14 | திங் | துவ56-20 | பூச24-55 | சித்60 | யதிமஹாளய துவாதசி |
| 31 | 15 | செவ் | திர60... | ஆயி32-2 | சித்60 | பிரதோஷம் |

(ஆகஸ்டு தேதி நிரலில் 1 முதல் செப்டம்பர்)

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.

## குசேலோபாக்கியான வசனம்.

நான்கு சித்திரப்படங்களுடன் கூடியது.

வல்லூர் தேவராஜப்பிள்ளை யவர்கள் இயற்றிய குசேலோபாக்கியானச் செய்யுட்பொருளைத் தழுவி இவ்வசனம் செம்பாகமான நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. தெய்வபக்தி, குருபக்தி, ஞானம் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இல்லறவியல்பு, பதிவிரதைகளின் தன்மை, பிள்ளைகளைக் காப்பாற்றும் முறைமை, தந்தை மக்கட்குச் செய்யும் நன்றி, மக்கள் தந்தைக்குச் செய்யும் நன்றி, தரித்திரக் கொடுமை, செல்வச்சிறப்பு, செங்கோன் மன்னரியல்பு, கொடுங்கோன் மன்னரியல்பு, நற்சேவகரியல்பு, துர்ச்சேவகரியல்பு, மெய்ஞ்ஞானிகள் தன்மை, அஞ்ஞானிகள் தன்மை, மாணாக்கர் இயல்பு, ஆசிரியரியல்பு, சிநேகவாஞ்சை, பள்ளிக்கூட சிநேகிதத்தின் உயர்வு, நன்னட்பின் தன்மை, தீநட்பின் தன்மை, செருக்கின்மையின் உயர்வு, தெய்வத்தின் திருவருட்டிறம், மெய்யடியார் விரைவில் மேன்மை யடைவரென்பது முதலிய பல நன்மையான விஷயங்களெல்லாம் இந்நூலில் விரிவாகக் கூறப்படுமென்பது உலகறிந்ததே. ஆண், பெண், பாலர், விருத்தர் ஆகிய எல்லோருக்கும் நற்போதனை செய்து அறிவை விருத்திசெய்வதில் இந்நூல் முதன்மைபெற்றதாகும். இவ்வசனமோ படிக்கப்படிக்க மனதை உருக்கிவிடும் இயல்பையுடையது. இது கிரௌன் 248-பக்கங்கள் அச்சிடப்பெற்றிருக்கிறது. விலை ரூபா 1.

## அற்புத [illegible] ரம்பை.

இதன் விலை ரூபா 1.

நண்பர்காள்! கதாநாயகி பருவகாலமடைந்து மணமின்றி சகல வித்தைகளிலும் புத்தி மீறின தன் தமயனை யழைத்துக்கொண்டு புரவியின் மீதேறி வனத்திற் சென்று வேட்டையாடி இரவில் கானில் இருவர்களும் துயில் செய்து பொழுதுவிடிய சுகந்தாம்பை விழித்தெழுந்து பார்க்க அருகிற் தமயனைக்காணாது பதறி அருகிலிருக்கின்ற வனங்களிற் புகுந்து அலைந்து தியங்குவது சோகரசமாயிருக்கும். பின்பு வெகுநாள் தேடியும் தமையன் அகப்படாமையினாலே ஆறுமாதத்திற்குள்ளாக அகப்படாவிடில் தன் ஆவியைத் துறப்பது நிச்சயமென்று வைராக்கியங்கொண்டு தனதுடன் பிறந்தோனைத் தேடிச் செல்லுகிற மார்க்கத்தில் அதிசாகஸமூன்று பொருள்களை சம்பாதித்துக்கொண்டு புரவியை துரத்திவிட்டு சித்தர்களைப்போல் கேசரி மார்க்கம் பறந்து தனது தமயனை யெடுத்தேகிய பஞ்சமுக இராட்சதனை சம்மாரஞ்செய்வது மிக்க பயங்கரமாக விருக்கும்.

## வீரநாதன்

## அல்லது ஓர் மலைநாட்டுத் துப்[illegible]பவன்.

தேவராஜ[illegible] மனைவியும், காணாமற்போன குழந்தை [illegible] [illegible]து, மலைமேல் நடக்கும் அதிசயங்கள், வீரநாதனும் கன்னியும், இரண்டாவது கலியாணமுடிவு, மலைநாட்டு பாடசாலை பார்க்கத்தகுந்தது. சர்க்கரை தோட்டத்தில் கொண்டாட்டம், உபாத்தியாயர் [illegible] வலையில் சிக்கிக்கொண்டான், கன்னியம்மாள் இரகசியமான [illegible] கண்டு பிடித்தல், வீரநாதன் ஞானசேகர குருவையும் [illegible] காண்பது பெருமை, தேவராஜின் சாராயக்கடை [illegible], [illegible] தகுந்த சமயத்தில் பயமுறுத்தல், [illegible] [illegible], (அடைக்கப்பு) தெருவில் கலியாண ஏற்பாடு, [illegible], உபாத்தியாயர் [illegible] பிராணைபத்தால் தப்பிச்சான். இதன் விலை அணா 12.

விலாசம்:- ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

A

புதியபுஸ்தகம் ! வெளிவந்து விட்டது !!

# ஆர்மோன்ய அனுபவ சங்கீத ரத்னம்.

ஸங்கீத நேயர்களே! ஸங்கீதத்தை வாய்ப்பாடாகப் படிப்பதைவிட ஆர்மோன்ய வாத்ய மூலமாக பாடக் கற்றுக்கொள்வது மிகவும் எளிது. அப்படிக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் ஏராளமாகப் பொருளைச் செலவு செய்து தான் கற்றுக்கொள்ளவேண்டும். அப்படிக் கற்றுக்கொள்ள எல்லாராலும் முடியுமா? முடியாது. இதையெல்லாம் கவனித்து யாவரும் ஒருவர் சகாயமின்றித் தாமே கற்றுக்கொள்ளும்படி "ஆர்மோன்ய அனுபவசங்கீத ரத்னம்" என்கிற சங்கீத பொக்கிஷத்தை வெளிப்படுத்தினோம். இம்மாதிரி ஏனைய புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும் அவைகளைத் தானே கற்றுக் கொள்ள முடியாதென்பது நன்கறிந்தே நம் பெண்பாலர்களில் சிலர் அவர்கள் பருவகாலம்வரை இதைக் கற்றுக்கொள்ள முடியாமல் முன் கற்றுக்கொண்ட விஷயங்களைக் கூட மறந்துவருந்துகின்றார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் இவ்வித "ஆர்மோன்ய அனுபவ சங்கீதரத்னம்" இல்லாதிருந்த பெருங்குறையே.

யாவரும் எளிதில் தாமே கற்றுக்கொள்ளும்படி ஆர்மோன்யத்தைக்கையில் எடுத்தது முதல்தாமே இரண்டுகைகளாலும் சபையில் வாசித்து ஆனந்திக்கும் வரையுள்ள விஷயங்களையும் இடத்திற்குத் தகுந்தபடி உபகரணப் படங்களைக் காண்பித்து கீர்த்தனைகள், கண்ணிகள், தேவாரம், திருவருட்பா, இராமாயணம், நந்தனார்சரித்திரம், தில்லானா, காவடிச்சிந்து, ஓரடி பார்வி நோட் இன்னும் அநேக பாடல்களும் அவைகளுக்கு தகுந்தவாறு சுரங்களமைத்து எளிய நடையில் இனிய வசனத்தோடு கிரவுன் 16-சைஸ் கிளேஸ் பேப்பரில் அச்சிட்டு அழகிய பைண்டுடன் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது. இதன் விலை ரூபா 1.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்

# யோகசாதன ரஹஸ்யம்

விலாசம் தெரிவித்தால் 100 ஷூ காலெண்டர் தபால் செலவின்றி இனாமாக அனுப்புவோம்.

## அநேகநாளாய் எதிர்பார்த்த நூல்? வெளியாகிவிட்டது !!

இந்நூலாசிரியர் ஸ்ரீயுத - சுப்பிரமண்யசிவம் 2-முறை சிறைச்சாலையிலிருந்து 12-1-1922-ல் விடுதலையடைந்து இந்நூலை எழுதினர். இந்நூலில் ஐந்துவித யோகானுபவங்களைத் தாம் குருநாதர் மூலமாக அறிந்த அனுபவப்படியே கர்மயோகத்தில் 168 விஷயங்களும், பக்தியோகத்தில் 148 விஷயங்களும், ஹடயோகத்தில் 109 விஷயங்களும், ராஜயோகத்தில் 67 விஷயங்களும், ஞானயோகத்தில் 165 விஷயங்களுமாகப் பிரித்து எளிய வசன நடையில் இந்நூலை இயற்றியிருப்பதால் இது ஒவ்வொரு தமிழ் சகோதர சகோதரிகளும் எளிதில்வாசிக்கக்கூடியநூல் இதுகாறும் இம்மாதிரியான யோக நூல் தமிழ் உலகில் வெளிவரவில்லை. சிவம் ஆப்டோன் படத்துடன் உயர்ந்த காலிக்கோ பயிண்டுடன் விலை ரூபாய் 4. உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டது விலை ரூபா 5. (மாதர் நீதி 1-0-0)

| | | |
|---|---|---|
| ஸ்ரீஸ்வாமி ராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம் 1-பாகம் 20 அற்புத விஷயங்கள் நிறைந்தது | 1 | 4 |
| ஷை 2-ம் பாகம் 31-அற்புத விஷயங்கள் நிறைந்தபெரிய புத்தகம் | 3 | 12 |
| பகவான் பதஞ்சலிமகரிஷி யோகசூத்ர மூலமும், வியாக்யானமும் | 1 | 4 |
| விவேகாநந்தர் 1004 உபதேசமொழிகள் | 2 | 0 |
| " வேதாந்த ரஹஸ்யம் | 2 | 0 |
| " ஞானயோக ரஹஸ்யம் | 2 | 0 |

விலாசம்:—சாது ரத்ன சற்குரு புத்தகசாலை,
நெ. 4-84, ஈவினியப்ப நாயக்கன் வீதி, பார்க்டவுன் (P.O.) ஆ. சென்னை.

# இராமநாதன்

## அல்லது கோலார் கொலைக்கள்ளன்.

(அதியற்புத துப்பறியும் நாவல்.)

இப்பெயர் வாய்ந்த அரிய நவீன பதிப்புப் புத்தகம் படிப்போரைப் பரவசப்படுத்தி கல் மனதையும் கரையச்செய்யும் ஆற்றலுடையதென்பதை இதில் புகட்டியிருக்கும் ஆச்சரிய விஷயங்களாலும், சமத்கார சம்பவங்களாலும் இதை வாசிப்போரே யறிதல் கூடும். இன்பத்தையும், மனக்களிப்பையும் தரக்கூடிய தற்காலத்திலுலாவும் துப்பறியும் நாவல்களில் இது சிறந்ததென்பது யாம் சொல்லாமலே விளங்கும். அநேக துப்பறியும் நாவல்களைப் படித்துப் பரமானந்தமடைந்த அறிஞர்களும் பார்த்துப் புகழத்தக்க சிறப்புவாய்ந்தது. இதன் கதைத் தொடர்பு மிக்க ஆச்சரியமானது. கதாசாரமோ மிகவும் மனோரம்மியமுடையது. முதலிலிருந்து கடைசிவரையில் மனதுக்கிசைந்த உற்சாக சம்பவங்களும், இடையிடையே மனத் திடுக்கிடக்கூடிய அரிய விஷயங்களும் இதில் அமைந்திருக்கின்றன. இதில் அம்பாள், அம்பிகை என்னும் இரு பெண்பாலர்களின் நடக்கையும், துப்பறியும் வீரசிகாமணியின் நடக்கையும் மிக்க அற்புதமானவைகளே. இதில் ஆறு அழகிய ஆப்டோன் படங்களும் உள்ளன.

முதற் பாகம் ரூபா 1-4-0. இரண்டாம் பாகம் ரூபா 1-8-0.

## "செங் கமலம்" ஓர் அற்புத கௌளி நூல்.

(சின்னசேலம் S. துரைசாமிப் பிள்ளை இயற்றியது.)

இதுபோன்ற நூல் இதுவரையில் வெளி வந்ததேயில்லை. கௌளி இன்னவிஷயத்தைச் சொல்லுகிறதென்றும், அவ்விஷயம் இன்னாருக்கு உரியதென்றும், அது இத்தனை நாளையில் நடைபெறுமென்றும், யாவருக்கும் விளக்கமாய்த் தெரிவிக்கும் சிறந்த நூல் இது ஒன்றே. இந்நூலிலுள்ள விஷயங்கள் சிறிதும் பிசகா; வெகு திட்டமுள்ளனவாயும், உறுதியுள்ளனவாயும் இருக்கும்; இது எவரையும் ஆச்சரியப்படச் செய்யும் என்பது திண்ணம்.

உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், வியாபாரிகள், விவசாயிகள் போன்ற எல்லாவித முயற்சியாளர்க்கும் எதிர்கால நோக்கத்தை விளக்கமாய்த் தெரிந்துகொள்ள இது வெகு அநுகூலமான கருவியாகும். இதை அறிவதற்குச் சோதிட ஞானமாவது தனிப்படிப்பாவது தேவையில்லை; சாதாரணமாய்ப் படிக்கத் தெரிந்த யாவரும் இதன் நுட்பத்தைக் கஷ்டமின்றித் தெரிந்துகொள்ளலாம்.

இந்நூல் பூர்வகாலத்தில் சமஸ்கிருதத்தில் பாஸ்கரராலும், தமிழில் இராமசாமி நாவலராலும் இயற்றப்பட்ட கௌளி சாஸ்திரத்தை அனுசரித்து இந்நூல் செய்யப்பட்டிருக்கிறது. 64 பலன்கள் இதில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவை அனுபவமானவை. இந்நூலில் ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொரு பக்கம் விடப்பட்டிருக்கிறது. கௌளி சொல்லும் நேரத்திற்கும் திசைக்கும் இடையில் ஒரு லக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த லக்கத்தைப் பலன் பாகத்தில் பார்த்தால் கௌளி சொன்னது இன்னதென்றும், இன்னாருக்கென்றும், இத்தனை நாளையில் பலிதமென்றும் தெரியலாம். இது, நல்ல காகிதத்தில் சிறப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டன. காப்பிகள் துரிதமாய் செலவாகின்றன. வேண்டியவர்கள் தாமதமின்றிப் பெற்றுக் கொள்வீர்களாக. ஒரு காப்பியின் விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி.

இந்தத் தமிழ் ரப்பர் எழுத்துகளடங்கிய பெட்டி ஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்க வேண்டியது. ஏனெனில், தங்களுக்குத் தேவையான விலாசங்கள், லேபில்கள் முதலியவைகளைத் தாங்களே அடுக்கிக்கொண்டு கார்டு, கவர், கடிதம் முதலியவைகளில் தமிழில் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம். இந்தப் படத்தில் கண்டபடி (அஅஅஅ ஆஆஆஇஇ ஈஈ உ) இம் மாதிரி தமிழ் எழுத்துகளும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும், ஸ்பேஸ்களும், பூக்களும் உள்பட 450-ரப்பர் எழுத்துகள் அடங்கிய தகரப்பெட்டி 1-ம், இத்துடன் நான்குவரிகளை அடுக்கக்கூடிய டைப்ஹோல்டர் பிடி, மைபுட்டி, பிரஷ், சிராவணம், மையூற்றிய ஸெல்ப் இங்கிங்பாட், ஒரு லைன் டைப் ஹோல்டர் ஆகமொத்த சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5. செட் 1-க்கு ரூ. 5-8-0. வி.பி. தபால் சார்ஜு அணா 12.



## 6 சாமி உருவ ரப்பர் ஸ்டாம்புகள்.

இந்த ஸ்டாம்புகள் நூதனமாக ஜெர்மெனியிலிருந்து ஸ்பெஷலாக வரவழைத்திருக்கிறோம். இவைகளை கார்டுகள், கவர்கள், லெட்டர் பேபர்களில் அச்சடிக்க வெகு அழகாயிருக்கும். இவ்விடம் செய்வதாகயிருந்தால் ஒவ்வொரு ஸ்டாம்பு 1 8 0 ஆகும்.



உருவங்கள் அழகாக செதுக்கியிருப்பதால் வெகுநாளைக்கு தேயாமலும் எத்தனை முறை உபயோகித்தாலும் உருவங்கள் கெடாமலிருக்கும். விக்னேஸ்வரர் பரமசிவன், பிரம்மா, ஹனுமார், ஸ்ரீ இராமர், ஸ்ரீகிருஷ்ணன் ஆக தனித்தனி 6 சாமி ஸ்டாம்பு இங்கியூற்றிய பாட் சேர்ந்த பெட்டி 1-க்கு ரூபா 1.

தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.



## மலையை விழுங்கிய மகாதேவன் கதை.

படிக்கப்படிக்க ஆனந்தத்தை யுண்டாக்குவது; அடங்காச் சிரிப்பைத் தருவது. இக்காலத்தில் உலகத்தை ஏமாற்றித்திரியும் ஜெகஜாலப்புரட்டர்களின் மதிமோசச் செயல்களை விளக்கிக் காட்டுவது. மோசத்திற்குட்படாமல் முன் ஜாக்கிரதையை யுண்டாக்குவது. வேடிக்கையாகப் படித்துப் பொழுது போக்கக்கூடியது. விலை அணா 6.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபாலபெட்டி நெ. 167, மதராஸ்.



## 100 ரூ. இனாம் Dr. S. P. மன்மதகுளிகை. 100 ரூ. இனாம்

விலையில் குறைந்தது குணத்தில் மேலானது தாதுபுஷ்டியில் சிறந்தது 20 நாள் சாப்பிட்டு குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு 100 ரூ. இனாம்.

இரத்தத்தைச் சுத்தம்செய்து நரம்புக்கு முருக்கத்தை கொடுத்து நீர்த்துப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தி பசியை அதிகரிக்கச் செய்து இளைத்து கிழத்தன்மையான வுடலை இடகாத்திரமாகச செய்து நீங்காத யவ்வனத்துடன் எப்போதும் குறையாத பலத்தையும் இல்வாழ்க்கையில் ஆனந்தத்தையும் உண்டாக்கும். ஒருதரம் வாங்கிப்பாருங்கள். எவ்வித பத்தியமுமில்லை. 20-மாத்திரை பாட்டல் 1-க்கு ரூ. 2. கொஞ்சாளைக்கு மட்டும் பாதிவிலை ரூ 1 0 0 வி பி. சார்ஜ் பிரத்தியேகம். அன்னிய நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

டாக்டர் S P. & Co., வேலூர், P. O. (*via*) புகலூர், S. I. Ry.



## மூலபவுத்திர ஆஸ்பத்திரி

21-வகை மூலங்களையும், 8 - வகைப்பவுத்திரங்களையும் ஆபரேஷன் இல்லாமல் ஆயிரக்கணக்கான பேர்களுக்குக்குணப்படுத்தியிருக்கிறோம். சர்டிபிகேட்டுகள் ஏராளம். விவரத்திற்கு எழுதுங்கள். சென்னை 2-வது சித்தவைத்திய மகாநாட்டில் தங்கமெடல் பெற்றிருக்கிறோம்.

Dr. S. K. சோக்கலிங்கம் பிள்ளை, பெரிய பஜார்,

திருச்சிராப்பள்ளி.



## தவஸவாங்கிய தனவதி.

அல்லது தங்கமாளிகையின் இரகஸ்யம் விலை அணா 12

சரீரமர்மசாஸ்திரம் படங்களுடன் விலை ரூபா. 1 0 0

மருத்துவசாஸ்திரம் படங்களுடன் விலை ரூபா. 2 8 0

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சத்திய காமன் | 0 | 12 | 0 | வசந்தா | 1 | 12 | 0 |
| காதலும் மையலும் | 1 | 8 | 0 | காதல்திறம் | 2 | 0 | 0 |
| அன்புள்ளமங்கை | 1 | 12 | 0 | உலகரகஸ்யம் | 1 | 0 | 0 |
| காதலாற் கொலை | 1 | 8 | 0 | சிறுவிரல் மர்மம் | 1 | 4 | 0 |

தபால்கூலி வேறு. கேட்லாக் இனாம்

விலாசம்:—லக்ஷ்மண பிரசாது கம்பெனி,

(ஆ) புஸ்தகவியாபாரம், புதுச்சேரி.



## ஸ்வதேசி கைத்தொழிலை ஆதரியுங்கள்:

மதுரை ஜவுளிதினுசுகள் வாங்க விருப்பமுள்ளவர்கள், சொந்தசெலவுகளில் தயார் செய்கிறவர்களிடம் வாங்கினால், தரகர்களின் ஏமாற்றமின்றி லாபமடைவீர்கள். போலிவிளம்பரங்களைபோல இதையும் எண்ணவேண்டாம். உண்மையை அறியுங்கள். முழுவிபரங்கள் அடங்கிய கேட்லாக் இனாம். விலாசம்.

M. R. G. பெருமாள்,

ஸ்வதேசி கைத்தொழில், 3-வது லக்ஷ்மிபுரம் தெரு,

மதுரை, S. I.

தந்தி விலாசம்—Mugunthun — Madura,

மூன்றும்பாகம் வெளிவந்துவிட்டது!

# ஞானசெல்வாம்பாள்

## அல்லது இரண்டு சகோதரிகள்.

ஞானம்பாள் செல்வாம்பாள் என்ற இரண்டு சகோதரிகளே இந்த நாவலில் கதாநாயகிகள். இதில் கன்னிகைகள் மேலதிகாரமின்றி தங்கள் பிரியப்படி நடக்குமாறு விடப்படுவது, அன்னிய வாலிபரிடம் தாராளமாய்ப் புழங்கும்படி விடப்படுவதே நல்ல நாகரீகமென்று கருதுவது முதலிய ஆசாரங்களால் விளையும் தீங்குகள் அனுபவமாய் விளக்கப்பட்டிருக்கின்றன. அதோடு பெரும்பாலான கன்னிகைகள் உலக அனுபவமில்லாத அந்தப் பருவத்தில் தங்களுக்குத் தகுதியான கணவர்களைத் தாங்களே தேர்ந்தறிந்துகொள்ளச் சக்தியற்றவர்களென்பதும், அயோக்கியர்களது வஞ்சகவலையில் அவர்கள் எளிதில் சிக்கிக்கொண்டு தங்கள் வாழ்நாள் முழுமையும் பெருந்துன்பத்தை யனுபவிக்க நேருமென்பதும் இக்கதையால் நன்குவிளங்கும்.

இக்கதாநாயகிகளின் நடக்கைகளால் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்னும் குணங்களைக் கைவிடாமல் நன்னெறியைக் கடைப்பிடித்தொழுகும் கன்னிகை முடிவில் நல்ல பலன்களையும் மேலான பதவியையும் அடைவாளென்பதும், அற்பபோகங்களிலும் படாடோப வாழ்க்கையிலும் இச்சை வைப்பவள் துன்பத்தையே யடைவாளென்பதும் தெளிவாய் நிரூபிக்கப்படுகிறது. இக்கதையில் சம்பந்தப்பட்ட தேவராஜு என்பவனுடைய சரித்திரத்திலும், கிருஷ்ணராஜு மச்சநாதன் என்பவர்கள் சரித்திரத்திலும் மிக்க ஆச்சரியமும் மனதை யடியோடு கவர்ந்துகொள்ளத் தக்க அபூர்வ சம்பவங்களும் நிறைந்திருக்கும். இரண்டு பாகம் ரூ. 4. 3-ம்பாகம் விலை ரூ. 2. ஷை 3-ம்பாகம் மாத்திரம் "ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு 30-9-1925 வரையில் ரூபா 1-12-0.

# பட்டினத்தார் பாடல்.

## தத்துவார்த்த விளக்கம்.

தேவராஜ சிங்கமாகிய பட்டினத்துச் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாற்றிரட்டும், அருட்புலம்பலும், திருவருட்பெருஞ் செல்வராகிய பத்திரகிரியார் அருளிய மெய்ஞ்ஞானப் புலம்பலும். இவற்றிற்கு அ. மஹாதேவ யோகியார் நூதன முறையில் அமைத்தெழுதிய தத்துவார்த்த விளக்க வுரையுடன் கிளேஸ் கடிதத்தில் அச்சியற்றியது. ரூ. 2.

# லோகநாயகி அல்லது அதிசயப் புதையல்.

பண ஆசை எத்தகைய பெரும்பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும், அக்கிரமஸ்தரும், நம்பினவர்களைத் துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவார்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்படுகிறது. கதாநாயகியாகிய லோகநாயகியின் புத்தி சாதுர்யமான நடக்கைகளும், துப்பறிபவனது சாமார்த்தியமும், ஆரம்பத்திலிருந்தே ஒன்றின்பின் ஒன்றாக நேரிடும் அதிசய சம்பவங்களும், போய்விட்டதென்று யாவரும் கைவிட்டுவிட்ட பொக்கிஷத்தைத் துப்பறிபவன் எடுத்தளிக்கும் சாமார்த்தியமும் நீதியும், இதை வாசிப்போர்க்கு ஆதிமுதல் அந்தம் வரை வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். விலை ரூ. 1.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## இன்றியமையாத சிங்க பலத்தை தருவதெது?




முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று, அபாரமான தத்துவத்தைத் தாங்கக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி வாங்கி சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே எமது மருந்தின் விசேட குணம் நன்கு விளங்கும்.

விளம்பரம்:

இதைக் கண்ணுறும் !கனவான்களே !

# இந்த லேகிய செந்தூரத்தால்
# நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன

தற்காலத்தில் பால்ய இச்சையாலும், இரத்தப் பெருக்காலும் உண்டான 20 வகை மேகரோகங்கள், குஷ்டரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால்முடக்கு, ஓடுவாய்வு, பித்தவெப்பம், நெஞ்சுதொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேகஉளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலைசுற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் நீர்மேகம்முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்தமான வியாதிகளைப் பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி அபரிமிதமான ரத்தவிர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகியபஸ்பம் வேறொன்றில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் பலஷ்டியாக்கி தேகதடிப்பு, நகக்கண்வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினம்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையானதென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். ஆக, இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் தீர்க்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் தகும், மேலும் இதை நோய்உள்ளவரேதான் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட நல்ல பலம் ஏற்படும். இது நிஜமே. தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் காணாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானால் முழுதும் குணமாகிவிடும். அப்படி குணம் காணாவிடில் யாங்கள் உத்திரவாதிகளாவோம். அதாவது, யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்து பரோபகாரார்த்தமாக இதை வெளியிட்டோம். இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரத்திற்குப் பொன்மெடல், வெள்ளிமெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். நமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்க காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும்; எமது உண்மை நன்றாய் விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, அப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக இந்த லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியவைகொடுத்து அவர்களை சந்தோஷிக்கச்செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் பரீக்ஷிப்பார்களாகில், அவர்கள் அதிசயம் ஆச்சரியமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரத்திற்குப் பத்தியமேயில்லையாது. எந்தப்பண்டமும் நீக்குதலின்றி மருந்துசாப்பிடுங்காலத்தில் வயிற்றிற்கு துரோகம்செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய்எடுக்கும். பச்சைப்பயறு கொழம்பு, தயிர், பால், தழி, மார்க்கண்ட உப்பு, நெய் இவை அதிகமாக தேகத்தை தணிக்கக்கூடிய விதமான நாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. புசிக்கும்போதெல்லாம் பலகாரங்களை சாப்பிடவேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள், எருமைப்பால், பசும்பால் ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரே யானால் அது தேகத்தில் ஊறஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது கொழுத்து புதிய ரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமல் முற்றிலும் அக்னிப்போல ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாதபடி ரொம்பவும் தேஜசாய்த் தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் எழுத முடியாது. இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூபா 1-12-0, போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டு உள்பட ரூபா 4.

பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய அயல் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1—4—0 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட 5—8—0.
சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

விலாசம்:—லேகியம் டிபோ,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# சர்வதேள்விஷசஞ்சீவினி

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!
இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கைவிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், கட்டுவாக்கிளி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்யக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4.

டஜன் 1-க்கு ரூ. 5 0 0 தபாற்கூலி இனாம். ஏககாலத்தில் 8-பாக்கெட் வாங்கினால் வர்த்தகருக்கு 100-க்கு 25-கமிஷன் கொடுக்கப்படும்.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## கண்நோய் மருந்து.



கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அக்நிமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும் மாணுக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். இதை உபயோகித்தால் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.



## கர்ணபிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் கலைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தை 2-துளி காலை மாலைகளில் விட்டுவர காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்.



சரீரத்தின் இரகசியமான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்தி சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள் ஒரே தடவையில் இந்த சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு அணா 4.

## ஓட்டோலீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதை பிரமிக்கச் செய்து ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து இதற்கு நிகரான சுகந்த



மணமுடைய சென்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படிச் செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனையை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது சிலதுளிகள் தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஓர் சுந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதினிலும் பதின்மடங்கு சுகத்தை இந்த அத்தர்களால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம். சிறிய புட்டி 1க்கு அணா 10.
ஷை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

## மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில் பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு சுத்தமான கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோமங்கள் முழுதும் இலகுவாய் நீங்கி வழுவழுப்பாகிவிடும், வெக்கை எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகாது. புட்டி 1-க்கு அணா 8



## சோடா வாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 8-சிட்டிகை சோடாவாட்டர் பவுடர் போட்டால் பொசபொசவென்று பொங்கும். உடனே சாப்பிடவும் ஏப்பம் வரும். உடனே வயிற்றுநோயை நிறுத்தும். புட்டி 1-க்கு அணா 6.



## யூகலிப்டஸ் ஆயில்

### (சுத்தமான நீலகிரித் தைலம்.)

வைத்தியத்தில் தேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாதபேதி, பிளேக் வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு வெட்டு காயங்கள், காம்பு சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன ரணங்கள், இன்புளூயென்ஸா, மலேரியா, சகலவித சுரங்கள், இருமல், கக்குவா இருமல், வாய்வு, பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ்-புட்டி 1-க்கு அணா 4
1 „ 1-டஜன் (12) ரூ. 2 8 0

## நரைமயிர் கருக்குந் தைலம்.



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமைநிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன் இருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகாரகுணங்கள் இதில் கிடையாது. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் அழகும் முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்ற தைலம் வேறொன்றும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்கு கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்டிபிகேட்டை கணக்கிட முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு வைத்து வரும் ரூ. 1.

## கூந்தல் வளரும் துளிகள்.



இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெய் வகைகளுடன் கலந்து தினம் மயிருக்குப் பூசினால் கூந்தலானது ஆலம்விழுது போல் உண்மையாய் வளரும். பேன் சேராது, பொடுகு உண்டாகாது, மயிர் உதிராது, வழுக்கையான இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு அணா 12.

# அயத்தங்க திராவகம்

அநுபவமானது! பிரசித்தியடைந்தது!! சஞ்சீவிபோன்றது!!.



மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது இதை அநேக ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும் ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் தீரக்கூடிய அநேக வியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்,

நரைத்த மயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும், நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும். முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சரப்பிக்கும். க்ஷயரோகத்தை சுணக்கில் நீக்கும், வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை வேர் தீர்க்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலக்கடுப்பு மூலவாய்வு மலச்சிக்கல் இவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் கிட்டே கூட அணுகாது, தேகம் வஜ்ரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1, 40-நாள் மருந்து ரூ. 1 12 0.

# சிவப்பிரகாச பல்பொடி.



இந்த சிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப்போல் விராமல் அதிக சுகந்தமாயும் பல்வலி, பல்லில் சொத்தை, ஈர் ஊர்த்திருத்தல், வாய் நாற்றம், வாய்ப்பாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை சொஸ்தப்படுத்துவது மல்லாமல் பல் கன்றும் துலங்கும்படிச் செய்யும், வாய்க்கு சதா கமகமவென்று பரிமளத்தைக் கொடுக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் விலை அணா 10.

# நாக்குப்பூச்சியை நாசமாக்கும் பில்லைகள்.

இந்த பில்லையில் ஒரு வருடத்து குழந்தைகட்கு அரை பில்லையும் மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லை வீதம் கொடுத்தால் வயிற்றிலுள்ள கிருமிகள் யாவற்றும் பத்து பத்தாய் வெளிப்படும். 8-பில்லைகள் விலை அணா 6.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# நாராயண சஞ்சீவி தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசம்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டை குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைபாரம், அதிக வெயிலினால்



உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகளை ஆச்சரியப்படும் விதமாய் கண்டிக்கும். தொடர்ச்சியாய்ச் செய்துவரும் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும் மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் ஒன்றும் சேராமல் சுத்தமான இலை கிழங்கு புல் முதலிய இந்திய வாசனையினால் பரிமளிப்பது. தினம் தலையில் தடவிவாரி வருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாக கருத்து ஆலம் விழுதுபோல் நீண்டு வளருவதோடு உஷ்ணத்தை தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும் அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக் கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீங்கி காலையில் எழுந்திருக்கும்போது தேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

# ஜீ. கியூர் வெள்ளை என்னும்

## கள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.



பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியானரோடும் சம்பந்தப்படுவதினாலும், ஓயாத சிற்றின்ப அனுபோகத்தாலும் மூலத்தில் அக்கினிகொண்டு தாது கெட்டு பிரமியங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய ரத்தப் பிரமியம், நீர்கடுப்பு, நீர்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அனுபோகமான மருந்து என்பது உண்மை. பேதி முதலிய கெட்ட குணங்கள் கிடையாது. பத்தியமில்லை. உபயோகிக்கும் விதம் மருந்துடன் வரும். புட்டி 1-க்கு ரூபா 1.

# பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.

விலை  4—0—0

பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடாட் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# சர்வமேக நிவாரணி தைலம்.

இந்த பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை காலை மாலை இருவேளையும் 10 நாளைக்கு உட்கொண்டால் வெகு நாளாய் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாய்வு, தனுர் வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு ரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள் கிரந்திமுதலிய கிரந்திபுண்கள், தடைவாழை படைகள், கக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள் நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். அநேக ஜனங்களின் துன்பத்தைநீக்கிச் சௌக்கியத்தைஉண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது, கடின பத்தியமின்றி பால், நெய், சரி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும் பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளின்றி, சுகமாய் வியாதிகளைக் கண்டித்து சுகப்படுத்தக்கூடிய உண்மையான மருந்து.




புட்டி 1-க்கு விலை ரூபா 1-8-0.

# காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவா இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டை யெரிச்சல், தொண்டை கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளுமையான வஸ்துவை சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் இவை முதலான வியாதிகளை நாலு தினத்தில் கண்டித்து கோழையை வெளியில் தள்ளி நன்றாய் தூங்கச்செய்யும். புட்டி 1-க்கு ரூபா 1.

# ஸ்ப்ளீனோபில்ஸ்—சுரக்கட்டிக்கு மாத்திரை.




இம்மருந்து சாதாரணமாய் முறைக்காய்ச்சல். குளிர்க்காய்ச்சல் முதலான விஷ சுரங்களை நிவர்த்திப்பதுடன் வயற்றிலுள்ள எத்தகைய சுரக்கட்டிகளையும் வெகு சுலபமாய் மற்ற இதர மருந்துகளைக் காட்டிலும் கரைத்துவிடும். இம்மருந்தின் உயர் குணங்களை இவ்விடத்தில் நற்சாக்ஷிகளுடன் வெளிப்படுத்துவதைக் காட்டிலும் ஒரு முறை உபயோகித்த ஒவ்வொருவரும் அவரவர்கள் சிநேகிதர்களுக்கு தெரிவிப்பதே இதன் பெருமை உலகிற்கு நற்சாட்சியாம்.

100 மாத்திரைகொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 5 0 0
50 " " " " 2 10 0

# மின்சார மோதிரம்.

இந்த மோதிரத்துள்ளிருக்கும்படியான மின்சாரக் கருவியின் சக்தி எக்காலத்திலும் அழிவிராது—அக்கருவி யிருக்குமளவும் அதன் சக்தியிருக்கும். சிறியோர் பெரியோர் யாவரும் உபயோகிக்கலாம். ரூ. 1-8-0.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

18747